# கோவலன்

# கோவலன்

அல்லது

# ஊழின் பெருவலி

மதுரைத் தமிழ்ச்சங்கம்
THE MADURA TAMIL SANGAM

ஆசிரியர் :
**க. பழநிக்குமரக் கவிராயர்,**
தமிழ்ப் பண்டிதர், போர்டு ஹைஸ்கூல்,
சோழவந்தான்.

அன்பளிப்பு
பேராசிரியர். மு. உலகநாதன், எம்.
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001,

பிரசுரகர்த்தர் :
**வி. சூ. சுவாமிநாதன்**
மதுரை :: திருநெல்வேலி

பதிப்புரிமை] விலை 0-12-0

Fifth Edition—1953

இளங்கோவடிகள் கூற்று

நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.

Printed at the B. N. Press, Mount Road, Madras—2.

# முகவுரை

"பிறர்க்கின்னு முற்பகல் செய்யிற் றமக்கின்னு
பிற்பகல் தானே வரும்

என்பது தேவர் திருவாக்கு. இச்சிறு புத்தகத்தில் இவ் வுண்மையை இனிது விளக்குவதான கோவலன் கதை கூறப்படுகிறது. இக் கோவலன் என்பான் முற்பிறப் பில் பரதனென்னும் பெயருடையானென்றும்; அவன் சங்கமனென்பானைக் கொல்வித்து' சங்கமன் மனைவி யாகிய நீலியின் சாபத்திற்கு ஆளாகி, மறு பிறப்பில் கோவலன் என்னும் பெயரினனாய், பெருஞ் செல்வ மெல்லா மிழந்து, மனைவி சிலம்பைக் கையிற் கொண்டு, மதுரைக்குச் சென்று அந்நகரத்துப் பொற் கொல்லனொருவனால் அவ்வூர் அரசனிடத்து சிலம்பு திருடிய கள்வனென்று கூறப்பட்ட பழிக்குரியனாய், அக் குற்றத்திற்கு உரிய தண்டனையாகக் கொலையுண் டிறந்தானென்று இதனில் கூறப்படுதலின், முற்பிறப்பி லொருவன் செய்த வினைப் பயன், மறு பிறப்பில் அவ னைத் தவறாது வந்தடையுமென்பது இனிது உணர லாகும்.

கோவலன் கதையில் எல்லார்க்கு மின்றியமையாது வேண்டப் படும் அறநெறி யொழுக்கமும், மகளிர்க்குச் சிறப்பாய் வேண்டப்படும் கற்பொழுக்கமும் இனிது உணரப்படுதலின், அக்கதையைக் கூறுஞ் சிறுநூலாகிய இது, ஆண் பெண் என்னும் இரு பாலார்க்கும் மிகவும் நன்மையை விளைவிக்கும் நூலாமென்பது தவறாகாது.

ஆதலால், அவ்விரு பாலர்க்கும் பெரிதும் பயன் படக் கூடிய, அதிலும் அவ்விருபால் மாணவர்க்கு மிகப் பெரிதும் பயன் படக்கூடிய இதனைப் பொதுவாக எல்லோரும், சிறப்பாகக் கலாசாலை அதிகாரிகளும் ஆதரிப் பார்களென்னும் துணிபுடையேன். இதனுள், கண்ணகிக்கு மதுராபதித் தெய்வம் கூறிய கோவலனது முற்பிறப்பின் செய்தியை, ஊழின் வலியைக் காட்டுதற்கும். மாணவர்க்கு நன்கு விளங்குதற் பொருட்டும் முதற்கண் அமைத்துள்ளேன்.

'நவைநீக்கி நாட்டும் நலந்தரு மாற்றின்
சுவைநோக்கிக் கொள்ளத் தகும்'

இங்ஙனம்,
**க. பழநிக்குமரன்.**

# பொருளடக்கம்


| எண் | விஷயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பரதன் பிறப்பு | ... | 7 |
| 2. | கோவலன் இல்வாழ்க்கை | ... | 13 |
| 3. | இந்திர விழா | ... | 17 |
| 4. | மதுரைக்கு ஏகல் | ... | 35 |
| 5. | கோவலன் மதுரை வளம் கண்டு மீளல் | ... | 57 |
| 6. | கோவலன் கொலை | ... | 69 |
| 7. | கண்ணகி வழக்குரைத்தல் | ... | 79 |
| 8. | மதுரை தீக்கிரையாதல் | ... | 85 |
| 9. | செங்குட்டுவன் சிலை எடுக்கச் செல்லல் | ... | 92 |
| 10. | ஆரிய மன்னரை வெல்லுதல் | ... | 99 |
| 11. | கண்ணகியைப் பிரதிட்டை செய்தல் | ... | 104 |
| 12. | கண்ணகி வரந்தரல் | ... | 108 |

MADURA TAMIL SANGAM

# கோவலன்

## அல்லது

# ஊழின் பெருவலி

" தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றதும் அருந்தமிழ் குறித்தே "

## 1. பரதன் பிறப்பு

பூமிதேவிக்கு முகம்போல் விளங்கும் **கலிங்க** நாட்டிலுள்ள **சிங்கபுரத்தை**, வசு என்னும் ஓர் செங்கோல் மன்னன் ஆண்டு வந்தான். அவன் நீதி தவறாதவன். தன் கண்ணாற் கண்டவற்றையே நம்பும் திறத்தவன். குடிகளைக் கண்போல் காக்கும் கண்ணியன். பகைவரை வாட்டும் பலம் உடையவன். ஆதலின் அச் சிங்கபுரத்து மக்கள் யாதொரு குறைவுமற்றுச் சுகமாக வாழ்ந்து வருவாராயினர்.

அரசனானவன் குடிகளைக் காப்பதோடு தன் நாட்டை விருத்தி செய்துகொள்ள வேண்டுமல்லவா! அதனால்தான் அக்காலத்து அரசர்கள் தம் பகைவருடன் போர் செய்து அவரைத் தொலைத்து, அவரது நாடு, பொருள் முதலியவற்றை யெல்லாம் கைப்பற்றி வரலாயினர். அதுபோல, இங்குக் கூறிய வசு என்னும் மன்னனும் தன் நாட்டை விருத்தி செய்வதற்காகத் தன் பகைவருடன் போர் தொடங்க வேண்டுமெனக் கருதினான்.

அக்காலத்து அவன் தாயாதியாகிய குமரன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அவன் கபிலபுரத்தை ஆண்டுவந்தான். குமரன் என்பவனுக்கும் வசு என்பவனுக்கும் இயல்பாகவே பகை ஏற்பட்டிருந்தது. ஆதலின் குமரன், வசு மன்னனை எவ்விதத்திலும் தொலைக்க வேண்டும் எனக் கருதி, தன் படையோடு சென்று சிங்கபுரத்தை முற்றுகையிட்டான். இதனையறிந்த வசுவின் காவலாட்கள் மன்னனிடம் சென்று, "அரசர் பெருமானே! நீர் நீடு வாழ்வீராக. உமது வெற்றியை யறியாது, கபில புரத்து மன்னன் படைகளைத் திரட்டிக்கொண்டு வந்து நம் கோட்டையை வளைத்துக் கொண்டான். நீர் உத்தரவு கொடுப்பின் நாங்கள் நம் படைகளைத் திரட்டிக் கொண்டு சென்று அரைநொடிப் பொழுதில் அவர்களைத் தொலைத்து வெற்றியுடன் திரும்புவோம்" எனப் புகன்றனர்.

இதனைக் கேட்ட வசுவிற்குக் கோபம் அதிகரித்தது. உடனே தன் சேனைத் தலைவனிடம் படைகளைத் தயார் செய்யும்படி கூறி அனுப்பினன். சேனைத் தலைவனும் விரைந்து சென்று படைகளைத் திரட்டிக்கொண்டுபோய் மதிலின் அருகில் நின்ருன். மன்னனும் போர்க்கோலம் பூண்டு புரவி மீதேறிப் புறப்பட்டான். அந்நகர வாசிகள் மன்னன் வெற்றியுடன் திரும்புவானுக என வாழ்த்தினர். மன்னன் தன் கோட்டையை வளைத்துக்கொண்டிருந்த எதிரியின் படைகளைப் புறங்காட்டி ஓடும்படி அம்புகளைத் தொடுத்தான். எதிரியின் சேனையில் உயிரிழந்தனர் அநேகர். கையொடிந்தனர் சிலர். கால் முறிந்து விழுந்தனர் பலர். இவ்வாருக, தன் நகரத்திற்குப் புறத்திலுள்ள ஆறுகாவதச் சுற்றளவிற்கு உட்

பட்ட இடத்தில் இருவருக்கும் பெரும் போர் நடந்தது. அதனால் அங்கு எவரும் போகாராயினர்.

சிங்கபுரத்தில் **சங்கமன்** என்னும் ஒரு வணிகன் இருந்தான். அவன் ஒழுக்கத்திற் சிறந்தவன். ஆனால் பெரும் பொருள் தேடுவதிலேயே கண்ணும் கருத்து முடையவன். அதனால் அவன் தன் வேடத்தை மாற்றிக்கொண்டு தன் மனைவி **நீலி** என்பவளுடன் சிங்க புரத்திலுள்ள கடைவீதியில் மிக்க விலையுயர்ந்த ஆபரணங்களை விலை கூறி விற்றுக் கொண்டிருந்தான். அச்சமயம், சங்கமனுக்குப் பகைவனும் அந்நகரத்து அரசனுக்குச் சேவகனுமாகிய **பரதன்** என்னும் பெயரையுடைய ஒருவன், சங்கமனைத் தொலைக்க வேண்டும் என நீண்டகாலமாக முயன்று கொண்டிருந்தான். அவன் தன் கருத்தை முடித்துக்கொள்வதற்கு இதுதான் தக்க சமயம் எனக் கருதி, சங்கமனைப் பிடித்துக்கொண்டு போய், தன் அரசனிடம் காட்டி, 'இவன் நம் பகைவனது ஒற்றன். நம் நகரச் செய்திகளை அறிந்து செல்வதற்காக வேடத்தை மாற்றிக்கொண்டு வந்திருக்கிறான்' என்று கூறினான். அரசனும் ஆராயாது 'இத்தகையானை விட்டுவிடாதே ; இவனை இப்பொழுதே அழைத்துச் சென்று கழுவில் போட்டுக் கொன்றுவிடு' எனக் கட்டளை இட்டான். பரதன் தன் கருத்து நிறைவேறியதற்கு மகிழ்ந்து சங்கமனை அழைத்துச் சென்று கொலை செய்வித்தான்.

சங்கமன் இறந்த செய்தியை ஊரார் மூலம் அறிந்து கொண்ட அவனது மனைவி நீலி என்பவள் பலவாறு புலம்பி அழுதாள் ; மின்போல் துடித்தாள் ; சுழன்றாள் ; உடல் முழுதும் வியர்த்தாள் ; விழுந்தாள் ; புரண்டாள். இவ்வாறு துயரடைந்த நீலி வேறு ஆதரவு

அற்றவளாய், ஊர் முழுவதும் சுற்றி 'ஊரீர்காள், முறையோ; பரதர்காள், முறையோ' என அரற்றினுள்; பிறகு தன் கணவனை இழந்திருக்கச் சகியாதவளாய், பதினுன்கு நாள் சுற்றித் திரிந்து கடைசியில் 'எனக்கு இத்துன்பம் செய்தார் யாவரோ, அவர் இதுபோன்று துயரை மறுமையில் எய்தக் கடவர்' எனச் சபித்தாள். கற்பு நெறி தவருத கன்னிகை யாதலின் உலகில் உயிர் வாழ விரும்பாது அவ்விடத்திலே தன் உயிரை மாய்த்துக் கொண்டாள்.

அறநூலில் கூறிய தத்தமக்குரிய ஒழுக்கத்தினின்று சிறிதும் தவருது நடக்கும் பெரியாருக்கும், கற்பையே ஆபரணமாகக் கொண்ட மங்கையருக்கும், எவனெருவன் தீங்கிழைப்பானே; அவன், அவர்கள் இடும் சாபத்தின் பலனை இம்மையிலேனும் மறுமையிலேனும், அனுபவியாது தப்புதல் இயலுமோ? இயலாதல்லவா; அதுபோல, குற்றமில்லாத மனத்தனுகிய சங்கமனைக் கொல்வித்து, அவனுடைய மனைவியாகிய நீலிக்குப் பெருங்கேடு உண்டுபண்ணிய பரதனும் அவ்வம்மையின் சாபமாகிய பெரிய அம்பிற்கு இலக்காயினுன். நிற்க.

* * * * *

காவிரி பாயும் நீர்ப் பெருக்கால் நிலம் பொறுக்காத விளைவை யுடைத்தான சோழ நாட்டில் **காவிரிப்பூம்பட்டினம்** என்னும் சிறந்த நகரம் ஒன்று இருந்தது. அந்நகரத்தார் தாம் வேண்டியவற்றை வேண்டியவாறு பெற்று மகிழ்வடைதலின் வேறு பொருள் கருதி வேற்றிடம் செல்லார். அதனுல் அப்பொருள் படும்படி அந்நகரத்தைப் **புகார்** என்றும் **பூம்புகார்** என்றும் அழைத்து வந்தனர்.

அதனை ஏறக்குறைய ஆயிரத்துத் தொண்ணூறு

ஆண்டுகட்கு முன்னர், கரிகால்வளவன் என்னும் மன்னர் மன்னன் ஏனைய அரசரெல்லாம் தன்னை வணங்கும்படி வீற்றிருந்து அரசு புரிந்தனன். இன்னும் அவன், தன்னோடு போர் புரிவாரை நாடி, நாற்படை சூழ வட திசையிலுள்ள இமயம்வரை சென்றான். அங்குத் தன்னோடு போர் புரிய வருவார் ஒருவரும் இன்மையின் தன் வெற்றிக்கு அறிகுறியாக இமயமலை மீது தன் புலி முத்திரையை எழுதித் திரும்பினன், இம்மன்னன் தன் நாட்டில் வாழும் மக்கள் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடையுமாறு செய்து அவர்களைக் கண் போல் காத்து வருவானாயினன்.

அவன் காலத்தில் இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்று மூவகைப்பட்ட வணிக குலத்தினர் இருந்தனர். அவருள் பெருங்குடியர் குலத்தில் பிறந்தவனும் பல கோடிக்கணக்கான செல்வம் படைத்தவனும், ஈகை, பொறை, முதலிய நற்குணங்கள் அமைந்தவனுமாகிய **மாசாத்துவான்** என்னும் பெயரினன் ஒருவன் இருந்தான். அவன் மனைவியின் பெயர் **பெருமனைக்கிழத்தி**. இவ்விருவர்க்கும் நீண்ட நாளாகப் புத்திரப்பேறு இல்லாதிருந்தது. பின்பு கடவுள் அருளால் இங்குக் கூறிய பரதன் என்பவனே அவர்கட்குப் புத்திரனாக வந்து தோன்றினான். பெற்றோரும் தாம் அருமையாகப் பெற்ற புதல்வனிடத்து அன்பு பாராட்டி அவனைக் **கோவலன்** என அழைத்து வருவாராயினர். இவ்வாறு ஐந்து ஆண்டுகள் கழிந்தவுடன் தம் புதல்வனுக்குக் கல்வி கற்பித்தனர். கோவலனும் சிறிது சிறிதாகப் பலவிதமான கல்விகளையும் கற்றுத் தேர்ந்து பதினாறு வயதை அடைந்தான். அவனிடம் அடக்கம், பொறை, அன்பு, அருள், வாய்மை முதலிய நற்குணங்கள் நிரம்பி இருந்தன.

இத்தகைய குணங்களமைந்த கோவலனுக்கு அவனது பெற்றோர் மணம் முடிக்கக் கருதினர். அப் பொழுது அந்த நகரத்திலேயே தன்னோடு ஒத்த பெருமை யுடையவனும் தம்மரபில் தோன்றியவனுமாகிய மாநாய் கன் என்னும் ஒரு வணிகன் இருந்தான். அவனுக்கு ஒரு புதல்வி யிருந்தாள். அவளுடைய பெயர் கண்ணகி என் பது. அவள் அழகில் திருமகளையும், கற்பில் அருந்ததி யையும் ஒத்தவள் என்னும்படி விளங்கினாள். அப் பெண்ணைத் தம் மகன் கோவலனுக்கு அளிக்குமாறு அப்பெண்ணின் பெற்றோரிடம் கேட்டனர். அவர்களும் தம் புதல்வி கண்ணகியைக் கோவலனுக்கே கொடுப்ப தாக உறுதி கூறினர்.

பிறகு மாசாத்துவான் சோதிடரை அழைத்து மணத்திற்கேற்ற தொரு நன்னாளைப் பார்த்துக் கூறும் படி கேட்டு, அந்நாளில் மணம் நடக்கும் என்பதைப் புகார் நகரத்தார்க்கும் உற்றார் உறவினருக்கும் அறிவித் தான். அதனைக் கேட்டார் அனைவரும் விருப்போடு வந்து, வைரத் தூண்களையுடைய மண்டபத்தின் முன் னுள்ள முத்துப் பந்தலில் வந்து கூடினர். குறித்த முகூர்த்தத்தில் பல வாத்தியங்கள் ஒலிக்க, புரோகிதர் கூறிய மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு கோவலனும் கண்ணகியும் தீவலம் செய்தனர். பின் கோவலன் கடவுளை வணங்கி, திருமாங்கல்ய நாணைக் கையால் எடுத்துக் கண்ணகி கழுத்தில் பூட்டினன். பாவலர் பல் லாண்டு பாடினர். மாதர்கள் சிலர், மலரையும் விளக்கு களையும், முளைப் பாலிகைகளையும், வரிசையாக ஏந்திக் கொண்டு நின்று, 'இம்மணமக்கள் பூவும் மணமும் போல் ஒன்றுபட்ட அன்பு உடையவராய் நீடு வாழ்க'

எனத் தம் குலதெய்வத்தை மனத்தில் நினைத்து மலர்களைத் தூவினர்.

இங்ஙனம் மணவினை நன்றாக நிறைவேறிய பிற்பாடு, உற்றார் உறவினரும், மற்றும் உள்ளோரும் அறுசுவைகளோடு கூடிய இனிய உணவை உண்டு சந்தோஷித்துப் பிரியாவிடை கொண்டு மீண்டனர். மணமக்களும் அன்று முதல் ஒத்த அன்புடையவர்களாய் விளங்கினர். அதனைக் கண்ட அவர்களது பெற்றோர் களிப்பென்னும் கடலில் ஆழ்ந்தனர்.

## 2. கோவலன் இல்வாழ்க்கை

கண்ணகி தன் கொழுநன் குறிப்பு வழியொழுகி இல்லறத்தார்க்கு உரிய நல்லறச் செயலைப் புரிந்து வந்தனள். கணவன் வெறுப்பனவற்றைக் கனவிலும் சிந்தியாள். மாமன் மாமி முதலியோரின் மனம் கோணாதபடி நடப்பாள். ஒரு நாள் இத்தகைய குணங்கள் அமைந்த மட நல்லாளின் முகத்தை நோக்கி,

" மாசறு பொன்னே ! வலம்புரிமுத்தே !
காசறு விரையே ! கரும்பே ! தேனே !
அரும்பெறற் பாவாய் ! ஆருயிர் மருந்தே !
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே !

உனக்கு உவமையாக எதனைச் சொல்வேன் ! நினது பரந்த குணங்களையும் எவ்விதம் கூறுவேன் ! உனது அன்பு கனிந்த இன்பத்தை எவ்வாறு புகழ்வேன் ! பேதாய் ! நின்னை,

மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ.

தாழிரும் கூந்தல் தையால்! எவ்வாறு புகழினும் என் சொல் சொல்லளவில் ஒக்குமே யல்லாமல் நின்னிடத்தி லுள்ள செவ்விக்கும் இனிமைக்கும் அவை யொருகா லும் ஒப்பாகா'' எனப்பலவாறு புகழ்ந்தான் கோவலன்.

இங்ஙனம் தனது மகனும் மருகியும் ஒத்த அன் புடையவர்களாய் வாழ்ந்து வருதலைக் கண்ட பெரு மனைக் கிழத்தி அவர்கள் தனித்திருந்து இல்லறம் நடத் துவதைக் காண விரும்பினள். அதன் பொருட்டு, புதியதோர் மாளிகையில் வேண்டிய பொருளை வேண்டி யாங்கு நிரப்பி வைத்து வேலையாட்களையும் ஏற்படுத்தி அவர்களை அங்கு இருக்கும்படி செய்தாள். கண்ணகியும் கோவலனும் இல்லறத்தார்க்குரிய அன்பு, அருள், ஈகை முதலியவற்றிற் சிறந்து, உறவினர், விருந்தினர், அற வோர், வறியர் முதலியவர்களின் தகுதிக் கேற்ப வேண்டுவன செய்து இல்லறத்தை நடத்தி வந்தனர்.

அக்காலத்தில் காவிரிப்பூம் பட்டினத்திலே **சித்திராபதி** என்னும் ஓர் நாடகக் கணிகை இருந்தனள். அவளுக்குப் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் **மாதவி** என்பது. சித்திராபதி, தன்குல முறைப்படி மாதவிக்கு ஆடல், பாடல் முதலியவற்றைக் கற் பித்தாள். மாதவியும் அவற்றை நன்கு கற்றுத் தேர்ந்து விளங்கினாள். அன்றியும் சோதிடமும் மாறு வேடங் கொள்ளுதலும், புஷ்பங்களைத் தொடுத் தலுமாகிய நாடகக் கணிகையர்க்கு நன்கென வகுத்துக் கூறப்பட்டவற்றிலும், அழகிலும் சிறந்து இருந்தாள். அதனைக்கண்ட சித்திராபதி, மன்னன் கரிகாலன் சபையில் தன்மகளை அரங்கேற்ற நினைத் தாள். தனக்கு வேண்டியவர் மூலம் அரசனுடைய உத்தரவைப் பெற்று, அவனுடைய சபையில் தன்

மகளை அழைத்துச் சென்றாள். மாதவியும் செல்வர்கள் கூடியிருக்கின்ற சபையின் நடுவே நின்று கொண்டு, துளைக்கருவி, தோற்கருவி, தண்ணுமை முதலிய பக்க வாத்தியங்களுக்கு ஏற்றவாறு ஆடியும், பாடியும் அபிநயித்தும் காட்டினாள். அதைக் கண்ணுற்ற காவலன் களிப்பென்னும் கடலுள் ஆழ்ந்தான். பிறகு அவளுக்குத் தலைக்கோல் என்னும் சிறந்த பட்டம் ஒன்று அளித்து ஆயிரத்தெட்டுக் கழஞ்சு செம்பொன்னும், தன் கழுத்தில் அணிந்திருந்த பொன் மாலையும், பரிசாகக் கொடுத்தனுப்பினான். பிறகு அங்குக் கூடியிருந்தார் அனைவரும் தத்தம் வீட்டிற்குச் சென்றனர்.

மாதவி, மன்னவன்பாற் பெற்ற மாலையை, அவள் தாய் சித்திராபதியானவள் வயந்தமாலை என்னும் தோழியை அழைத்து அவள் கையில் கொடுத்து 'இது ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பசும்பொன் விலை பெறுவதாகும். இதனை அவ்விலைக்கு வாங்கி, யார் மாதவி கழுத்தில் சூட்டுகிறாரோ அவரே மாதவிக்கு மணவாளராவர்' என்று விலை கூறுமாறு அங்நகரின் பெருந்தெருவில் நிறுத்தினாள். இயல்பாகவே மாதவியின் ஆடல் பாடல் அழகு முதலியவற்றைக் கண்டும் கேட்டும் இன்புற்ற கோவலன் தற்செயலாக வயந்தமாலையைச் சந்தித்தான். அவள் கூறியாங்கு பொன் கொடுத்து மாலையை வாங்கி, அவளுடன் மாதவியின் இல்லத்தை நோக்கிச் சென்றான். அங்கு மாதவிக்கு மாலைசூட்டி மகிழ்ந்தான். அவள் அழகில் மயங்கினான். தனது சிறந்த அறிவையும் நிறைந்த பொருளையும் அவளுக்கே கொடுத்தான். மாதவியும் அவனிடத்து அன்புடன் இருந்தாள். இவ்வாறு கோவலன் சில ஆண்டுகள் வரை, மாதவி மனையிலேயே தங்கிவிட்டனன்.

இவ்வாறு காதலனைப் பிரிந்த கண்ணகி, துயர்க் கடலில் மூழ்கினள். ஆதரவற்ற கொடிபோல் தளர் வுற்றுள். கோவலன் பிரிந்த நாள் தொட்டு, பஞ்சினும் மெல்லிய தனது சீரடிகளில் சிலம்பணி அணியாள்; கயல் போன்ற கண்களில் மை தீட்டாள்; காதணி அணியாள்; பிறை போன்ற நெற்றியில் திலகம் வைத் திடாள்; நெறித்த கூந்தலில் நெய்யும், புழுகும் நேர்மை யாய்ப் பூசிடாள். கணவன் இன்று வருவான், நாளை வருவான், இன்னும் சில நாள் கழித்து வருவான், என்று ஒருவாறு தேறியிருந்தாள். அவள் அவ்வாறு எதிர்பார்த்த நாட்களும் கழிந்தன. என் செய்வாள் பேதை! இறுதியில் கவலை மிகுந்தவளாய், 'எனது கண்ணிற்கு இன்பமளிக்கும் கட்டழகரை என்று காண் பேன்' எனப் பலவாறு புலம்பிக் கொண்டு, தன்னை விட்டு அவன் விலைமகளிடம் சென்று உரைதற்குச் சீற் றம் கொள்ளாதவளாய், கணவனைப் பழிதூற்றுத வளாய் ஒழுக்கம் குன்றுதவளாய்த் தன் மனையில் தனித்து இருந்துவந்தாள்.

இந்த நிலைமையில் கோவலனுக்கு மாதவியிடமாக ஓர் பெண் குழந்தை பிறந்தது. அது சிறந்த அழகும், மிகுந்த காந்தியும் உடையதாய் விளங்கிற்று. அதனைக் கண்ட கோவலன் தன் குலத்தோன் ஒருவனைக் கடலி னின்று காப்பாற்றியதும், தனக்குக் குலதெய்வமாய் இருப்பதுமான மணிமேகலா தெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு இடவேண்டுமெனக் கூறினன். மாதவி யின் உறவினர் அவன் கூறியவாறே அக்குழந்தைக்கு மணிமேகலை எனப் பெயரிட்டு அழைத்து வந்தனர்.

## 3. இந்திர விழா

இது இவ்வாறு இருக்க அப்புகார் நகரில் ஆண்டு தோறும் தேவர்கோனுக்குத் திருவிழா நடத்தல் இயல்பு. அவ்விழாவும் சித்திரா பௌர்ணமி தொடங்கி நடத்தப்பெறும். அம்முறைப்படி அதற்கு உரிய நாள் குறுகியதை அறிந்து, நகர மாந்தர் அனைவரும் கொடி யேற்றுதற்கு முற்பட்டனர். பின் விழாக் கொண் டாட்ட நாளை அந்நகரத்தைச் சுற்றிலுமுள்ள மக்கள் அறியுமாறு, வழக்கம்போல் முரசு அறையச் செய் தனர். முரசு அறைவோனும், வச்சிரக் கோட்டத்தின் கண்ணேயுள்ள மண முரசை யானைமீதேற்றிக்கொண்டு மாடமாளிகைகளைத் தன்னகத்துக்கொண்டு விளங்கும் பெரிய வீதிகளையும், சித்திரமெழுதுவோர், சோதிடர், தட்டார்கள், தச்சர் முதலிய தொழிலாளர்களின் இருக் கைகளையும், மக்கட்கு வேண்டிய உணவுப் பண்டங் களை எல்லாம் ஒருங்கே கொண்டு விற்கும் கடைவீதி களையும் உடைய புறநகராகிய மருவூர்ப் பாக்கத்திலும், அரசர் மாளிகைகளைத் தன்னிடத்துக் கொண்டுள்ள அரசர் பெருந்தெருவையும், மூவகைப்பட்ட வணிகர் வசிக்கும் பெருந்தெருக்களையும், முத்தமிழ்த் துறை களில் சிறந்து விளங்கும் வித்துவான்கள் இருக்கை களையும், நால்வகைப் படைகளும் தங்கும்படியான சிறந்த தெருக்களையும், கொண்ட அகநகராகிய பட் டினப் பாக்கத்திலும் முரசறைந்து சுற்றிப் பின்வரு மாறு கூறலாயினன். கூறுகின்றவன் முதலில் "மன் னன் வளவன் செங்கோல் வாழ்க; மாதம் மும்மாரி என்றும் வழங்குக" என வாழ்த்தி, பின்னர் "இம்மா நகரத்து வாழ்வீர் கேண்மின்; இந்திர விழா இனிது

வருகின்றது ; விழாக் காலத்தில் தேவர்கோனுடன் தேவர்கள் கூடிவந்து நமக்கு அருள்புரிவர் என்பன நம் முன்னோர் கொள்கையாகும். ஆதலின் நீவிர் உறையும் வீதிகளை நன்கு அலங்கரித்திடுமின் ; பழைய மணலை மாற்றிப் புதிய மணலை எங்கும் பரப்புமின் ; உங்கள் மாளிகை வாயில்களில் மரத்தை நட்டு வைமின் ; கும்பம் வைமின் ; பாவை விளக்குகள் பலவற்றை ஏற்றுமின் ; அந்நாட்களில் பிறரோடு பகை கொள்ளல்மின்'' என யாவரும் உணருமாறு அறிவித்துச் சென்றான்.

பின்பு அந்நகரத்து மக்கள் முரசறைவோன் கூறியபடி தம் இருப்பிடங்களையும், பிறவற்றையும் அலங்கரித்தனர். தாங்களும் நன்னீராடி, தூய வஸ்திரங்களை உடுத்து, விபூதி அணிந்து கூட்டங் கூட்டமாகத் திரண்டு அந்நகரத்திலுள்ள நாளங்காடிப் பூதத்திற்கும் ஐவகை மன்றங்கட்கும், செய்யவேண்டிய முறைப்படி மலர் சொரிந்து புகை காட்டிப் பொங்கல் சமைத்து வைத்துப் பலியூட்டினர். பிறகு கற்பக விருக்ஷம் நிற்கும் திருக்கோயிலிற் சென்று பலவகை வாத்தியங்களும் ஒலிக்கக் கொடியேற்றினர்.

## நாளங்காடிப் பூதத்தின் வரலாறு

முன் காலத்தில் சூரிய குலத்தில் பிறந்த முசுகுந்தன் என்னும் ஒரு மன்னன் இருந்தான். அவன் மன்னரெல்லாம் தன்னைக் கண்டு வணங்கும்படியான தோள் வலியுடையவன் ; அஞ்சாத நெஞ்சு படைத்த வீரன். அவனது பெருமையை யுணர்ந்த இந்திரன் ஓர் காலத்து அவன்பாற் சென்று தனக்கு ஒரு உதவி செய்ய வேண்டினன். முசுகுந்தனும் இந்திரன் விரும்பியவாறே நடந்து அவனை மகிழ்வித்தான். மகிழ்வடைந்த

இந்திரன் தன்னிடத்திலுள்ள ஒரு பூதத்தை அழைத்து, 'நீ இம்முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு என்றும் காவலாக இருப்பாயாக' என ஏவினன். அக்காலத்தில் இந்திர னிடமிருந்து அழைத்து வந்த பூதத்தை முசுகுந்த மன்னன் இந்நகரத்து நாளங்காடியில் கொண்டு வந்து நிறுவினுன். அன்று முதல் அப்பூதமானது சோழ குல மன்னர்களுக்கு உறு துணையாகவும், நகர்க்குக் காவலாகவும் இருந்தது. நாளங்காடியில் கொண்டு வந்து, வைக்கப் பெற்றமையால் அதனை நாளங்காடிப் பூதமென அழைக்கலாயினர்.

**ஐவகை மன்றம்**

**(1) வெள்ளிடை மன்றம்** :—அயல் நாட்டில் இருந்து வந்தவர்கள் தாங்கள் கொண்டு வந்த பொருள்களை எல்லாம் ஒன்ருகக் கட்டி அதில் தங்கள் பெயரையோ, அல்லது வேறு அடையாளத்தையோ எழுதி ஓரிடத்தில் வைத்து விடுவார்கள். அவ்விடத்தின் மகிமையால் எப்பொருள் எவ்விடத்தில் வைக்கப் பெற்றதோ, அப்பொருள் அவ்விடத்திலேயே பத்திரமாக இருக்கும். புகார் நகரிலுள்ளார் எவரும் பிறர் பொருளை அபகரிக்கக் கருதார். புதியதாய் வந்தவர் அவற்றை அபகரிக்கக் கருதி எடுப்பாராயின், அப்பொருளை அவர் தலைமேலேற்றி அவ்விடத்தினின்றும் வெளிச் செல்ல விடாமல் அவர்களைக் கிறுகிறு என்று சுற்றும்படி செய்யும். பித்துப் பிடித்தவர்போல் அவர் அறிவை மயக்கி அலறச் செய்யும். இதனுல் அவ்வூரில் களவென்பது கனவிலும் காண முடியாது. அவ்விடம், வெளியான பரந்தவிடமாதலின் அதனை வெள்ளிடை மன்றம் என அழைத்து வந்தனர்.

**(2) இலஞ்சி மன்றம்** :—மற்றொரு மன்றம் தனக்குப் பக்கத்தில் தெய்வீகத்தன்மை பொருந்திய தடாகத்தை யுடையது. அத்தடாகத்தில் அங்கவீனர்களும் பெரு வியாதியால் பீடிக்கப்பட்டு வருந்துகின்றவர்களும், ஒரு தடவை படிந்து அம்மன்றத்தை வலம் வருவாராயின், குற்றமில்லாத அழகோடுங்கூடிய உடம்பைப் பெறுவர். அதனை இலஞ்சி மன்றம் என்று அழைத்து வந்தனர்.

**(3) நெடுங்கல் நின்ற மன்றம்** :—இன்னொரு மன்றம் மிகவும் பிரகாசம் பொருந்திய கற்றூண் ஒன்றைத் தன்பால் உடையது. அதனால் அதனை நெடுங்கல் நின்ற மன்றம் என்பர். அம்மன்றத்தில் விளங்கும் ஒளி பட்டால் வஞ்சகர் கொடுத்த மருந்தினால் மதி மயங்கித் திரியும் பித்தர்கள் அம்மயக்கம் நீங்கிச் சுகம் அடைவர். பாம்பு கடிக்கப் பெற்றவரும், தம் துன்பம் நீங்கி இன்பம் அடைவர்.

**(4) பூத சதுக்கம்** :—வேறொரு மன்றம் நான்கு பக்கங்களிலுமுள்ள தெருக்கள் வந்து ஒன்று கூடுகிற இடத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. இதில் ஓர் பூதம் உண்டு. தம் வேடத்தை மாற்றிக் கொண்டு "தீங்கு செய்வோரையும், ஒழுக்கம் தவறிய பெண்களையும், தன்னை நம்பிய மன்னரை மோசம் செய்யும் மந்திரி களையும், பிறருடைய குற்றங்களை எடுத்துக் கூறும் அறிவில்லாதவர்களையும், பொய்ச் சாட்சி சொல்லும் அறிவீனர்களையும் எனது கைப் பாசத்தால் கட்டி இழுத்து நிலத்தில் அறைந்து உண்பேன்" என நான்கு காத தூரம் கேட்கும்படியாகக் கனத்த குரலால் தெரிவிக்கும். அதற்கு மீறி யாரேனும் தீய செயல் செய்வாராயின் தான் கூறியவாறே செய்து முடிக்கும். ஆதலால் அந்நகரில் யாதொரு தீய நிகழ்ச்சியும்

ஏற்படுதலில்லை. அது இருக்கும் இடத்தைப் பூத சதுக்கமெனவும், அதற்குச் **சதுக்கப் பூதம்** எனவும் பெயரிட்டு அழைப்பர்.

(5) **பாவை மன்றம் :—** இன்னும் ஓர் மன்றம் அந் நகரின் ஒரு பக்கம் சிறந்து விளங்கிக் கொண்டிருக்கும். அதில் தெய்வீக ஒளி நிறைந்த பாவை ஒன்று உண்டு. அது அரசர் நீதி தவறினும் நீதி மன்றத்து உள்ளோர் நீதி தவறிக் கூறியவிடத்தும் அதனை நாவாற் கூறுது கண்ணீர் சொரிந்து இடியைப்போலச் சப்தித்து அழும்.

இவ்வாறு சிறப்பமைந்த நாளங்காடி பூதத்திற்கும் ஐம்பெரும் மன்றங்கட்கும் பூசனை புரிந்தனர். பின்னர், அரசரும், அமைச்சரும், சிறந்த அறிவுடையவர்களும் பிறரும் ஒருங்கு கூடிக் காவிரி யாற்றின் நல் நீரைப் பொற்குடத்து ஏந்திக் கொண்டு வந்து, "எமது அரசன் வெற்றி பெறவும், நாடு செழித்து விளங்கவும் அருள் புரிவாயாக" என விண்ணவர் கோமானை நீராட்டினர். மற்றும் விண்ணவர் கோமானுக்கு விழாத் தொடங்கின நாள் முதற் கொண்டு, உயிர்களைப் பிறப்பித்து, தான் பிறவாத தன்மையுடைய சிவபிரான் கோயிலிலும், வெற்றி வேல் தாங்கிய ஆறுமுகன் கோயிலிலும், கார் மேகம்போலும் கரிய நிறத்தையுடைய திருமால் கோயிலிலும், மற்றுமுள்ளவற்றிலும், மறைநூலில் கூறியபடி ஓமங்கள் நடந்தேறின. பாவலர் இருக்கும் பட்டி மண்டபத்தில் பலரும் கூடிப் புராணம் படித்தனர். மன்னவன், சிறைச்சாலையில் அடைபட்டிருந்தோரை விடுவித்தனன். இசைக் கருவியாளர் இசைக்கும் ஒலியும், முழவின் அதிர்ச்சியும், மக்களின் உவகையோடு கூடிய சொற்களும், கடல் ஒலியைக் கடந்து நின்றன. இங்ஙனம் சொல்லுதற்கரிய சிறப்புக்களோடு

இந்திரவிழாவானது இனிது விளங்கியது. அப்பொழுது மாதவியின் கண்கள் களிப்பின் மிகுதியால் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன. கண்ணகியின் கண்களோ கவலையால் இரத்த நீரைப் பெருக்கின.

இக்காட்சிகளைக் காணுதற்கு அயல் நாடுகளிலிருந்து மக்கள் திரள் திரளாக வந்திருந்தனர். இமய மலைச் சாரலில் உள்ள பழந்தரும் மரங்கள் அடர்ந்த ஓர் சோலையில் **வித்தியாதரன்** ஒருவன் இருந்தான். அவன் தன் இல்லாளிடம் மிகுந்த அன்புடையவன். ஓர் நாள் அவன் மனைவியை நோக்கி, "பெண்ணே, தென் திசையில் உள்ள பதிகளுள் சிறந்ததும், **பூம்புகார்** என்னும் பெயருடையதுமான ஒரு நகரம் இருக்கிறது. அந்நகரில் இந்திரனைக் குறித்துச் செய்யும் விழாவின் பொருட்டுக் கொடியேற்றப்பட்டது. அவ்விழாக் காட்சி காண வேண்டி, தேவர்களெல்லாம் மானிட உருவங் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்று கேள்விப் பட்டேன். அத்தகைய காட்சியைக் கண்டு களிப்பதற்கு இதுவே தக்க சமயமாகும். அந்நகரின் காட்சிகளுள் இரண்டொன்றைக் கூறுகின்றேன் கேள்: "முன் காலத்தில் **அமராவதி** என்னும் பட்டினத்தை ஆண்மையோடு அரசுபுரிந்த இந்திரனுக்கு மாயம் வல்ல அவுணர்கள் தீங்கிழைத்தனர். அச்சமயம் சோழர்கட்குத் தலைவனாகிய முசுகுந்த மன்னன் சென்று தேவர்கோனுக்கு உதவியாயிருந்து அவுணர்களைத் தொலைத்தான். அதனைக் கண்டு மகிழ்ந்த தேவேந்திரன், தன் பக்கத்திலிருந்த ஒரு பெரும் **பூதத்**தை அவனுக்கு உதவி செய்யுமாறு அனுப்பினான். அன்று முதல் அது அப்புகார் நகரில் இருந்துகொண்டு, பலி ஏற்று உண்ணும் நாளங்காடி என்று விளங்குகிறது. அன்றியும் சொல்லுதற்

கரிய பெருமையோடு கூடிய ஐவகை மன்றங்களும் உள்ளன" என்று பலவற்றைக் கூறி, அவளை அழைத்துக்கொண்டு பல ஆறுகளையும் தேசங்களையும் மலைகளையும் கடந்து வந்து சோழ நாட்டினை அடைந்தான். அடைந்தவன் தன் மனைவிக்கு ஒவ்வொன்றையும் காட்டி, 'இன்னது இத்தன்மையது' 'இன்னது இத்தன்மையது' என விளக்கினான்.

பின்பு அவ்விழாவினைப் பார்க்க வந்த கூட்டத்தார்க்கு நடுவில் நின்றுகொண்டு பலவிதத் தெய்வப் பாட்டுக்களையும், வரிப்பாட்டுக்களையும் பாடிப் பலவிதக் கூத்துக்களைச் செய்து மகிழ்விக்கும் மாதவி யென்னும் நாடகக் கணிகையைக் கண்டான். உடனே அவ் வித்தியாதரன் தன் மனைவியின் முகம் நோக்கி, "கொடி போல்வாய்! இதோ காணாய்! இவள் நடிக்கும் நடிப்பினை. இவளைச் சாதாரணமான விலைமகள் என்று கருதி விடாதே. முன் காலத்தில் இந்திரனுடைய சிறப்பமைந்த அவையிலுள்ள முனிவர் கூட்டத்தின் நடுவில் நின்றுகொண்டு உருப்பசி என்னும் தேவதாசியானவள் ஆடலும், பாடலும் அழகுறச் செய்தாள், அங்ஙனம் செய்கின்றவள் ஊழ்வினைப் பயனால் அவற்றில் சிறிது தவறினாள். அதனைக் கண்ணுற்ற நாரத முனிவர் 'நீ மண்ணிற் சென்று விலைமகளாகப் பிறப்பாய்' எனச் சபித்தனர். பெரியோர் சாப மொழியினின்றும் தப்புதல் யாரால் இயலும்? ஒருவராலும் இயலாதல்லவா? அம் முறைப்படி உருப்பசியானவள் மாதவி யென்னும் பெயருடன் இந்நகரில் தோன்றிச் சிறந்து விளங்கினாள். அத்தகைய தெய்வமாதாகிய அவள் மரபில் உதித்தவளாவாள் இங்கு நடிக்கும் இம் மாதவி, இவளது ஆடலைப் பாராய்; தேனினும் இனிய இவளது தெய்வப்பாட்டு

களைக் கேளாய்" எனப் பலவாறு எடுத்துச் சொல்லி மற்றைய வளங்களையும் காட்டிச் சென்றான்.

இவ்வாறு தொடங்கினது முதல் அவ் விழாவானது இருபத்தெட்டு நாட்கள் சீரும் சிறப்புமாக நடந்தேறியது. விழா முடிந்த மறுநாள் நகர மாந்தர் அனைவரும் விடியற்பொழுதில் எழுந்து கடலாடுதற்குச் செல்லுதல் இயல்பு. அம்முறைப்படி மக்கள் அனைவரும் திரள் திரளாகச் சென்று கொண்டு இருந்தார்கள். மாதவியும் அவ் விளையாட்டைக் காண விரும்பி, சிறந்த பட்டாடைகளை உடுத்தி நவரத்தினங்கள் வைத்து இழைக்கப் பெற்ற பல வேறு அணிகலன்களை அணிந்து கொண்டு தன் எண்ணத்தைக் கோவலனுக்கு அறிவித்தாள். அவனும், அவ்வாறே செய்யலாம் எனச் சிறந்த உடைகளைத் தரித்துக் கொண்டான். பிறகு சிறந்ததொரு வண்டியில் அவ்விருவரும் ஏவலாட்கள் சூழப் புறப்பட்டுப் பட்டினப் பாக்கத்தைக் கடந்து மருவூர்ப் பாக்கத்தின் வழியாய்ப் போய்க் கடற் கரையைச் சேர்ந்தனர்.

அங்கு வியாபாரிகள் கடற்கரைப் பக்கத்தேயுள்ள வெண் மணல்மேடுகளிலிருந்து தங்கள் தேயத்துச் சரக்குகளைக் குவியலாகக் குவித்துக்கொண்டு இன்னின்ன சரக்குகள் இங்கு உள்ளன என்பதை விளக்கும்படி திரைச் சீலைகளைத் தொங்கவிட்டு வைத்திருந்தனர். அழகிய பொருள்களும் சந்தனமும் மலரும் சுண்ணமும் விற்பவர்கள் தங்கள் இடங்களில் வைத்திருந்த விளக்குகளின் ஒளியும், தட்டார்கள் தங்களிடங்களில் வைத்திருந்த விளக்குகளின் ஒளியும், மோதகம் விற்கும் காழியர் விளக்குகளின் ஒளியும், பல்வகைப் பண்டங்

களையும் பாங்குடன் விற்கும் மகளிர்கள் வைத்திருந்த விளக்குகளின் ஒளியும், கடலிடத்துள்ள கலங்கரை விளக்கமும், மீன் விலை கூறுவோர் ஏற்றிய விளக்கு களின் ஒளியும் ஒன்றுகூடி மணலின் இடத்து விழுந்த சிறு கடுகும் தெரியுமாறு மிகுந்த பிரகாசத்தை உண்டு பண்ணின. இத்தகைய காட்சிகளால் கடற்கரை யானது பெரிய பட்டினத்தைப் போலச் சிறந்து தோன்றிற்று.

கடலாடுதற்குச் சென்ற அரசிளங் குமரரும், உரி மைச் சுற்றமும், பரத குமரரும், பலவேறு வகையான கூட்டங்களும், நர்த்தனம் செய்கின்ற மகளிரும், இசை பாடும் மாதரும், நாலா பக்கங்களிலும் ஒன்றுகூடி யிருந்தனர். கடல் துறை இடம் எங்கும் அம் மாந்தர் களின் பேரொலி மிகுந்திருந்தது. அவரவர் அவ் விடத்தே தங்குதற் பொருட்டுத் தொங்கவிட்ட திரைச் சீலைகளும், புனலாடுதற் பொருட்டுச் செய்துகொண்ட மறைவுகளும் விளங்கித் தோன்றின. இத்தகைய சிறப் பினைக் கண்டு களித்த கோவலனும் மாதவியும் குதூ கலத்துடன் தாழம்பூச் செடிகளையே வேலியாகக் கொண்டிருக்கின்ற புன்னைமரத்தின் அடியில் இயல் பாக அமைந்த வெண் மணல் மேட்டில் உட்கார்ந்திருந் தனர்.

அச் சமயத்துத் தன் பக்கம் நின்றுகொண்டிருந்த தனது தோழியாகிய வயந்த மாலையின் கையிலிருந்த நல்ல யாழை மாதவி வாங்கினள். பின் யாழ் நரம்பு களைத் திருத்திச் சுரங்களை எழுப்பி, இசைக் கூறுபாட் டைச் செவியால் உணர்ந்து நன்கு அமைந்து உளது என அறிந்து கோவலன் கையில் யாழைக் கொடுத் தாள். அதைக் கையில் வாங்கிய கோவலனும், மாதவி

யின் மனம் மகிழ்வடையும்படியாகச் சில பாட்டுக்களைப் பாடினன். அப்பாட்டுகளில் கோவலன் தனக்கு வேறொரு மாதை அன்பிற்கு உரியவளாகக் கொண் டிருப்பது போல் ஒரு குறிப்புப்பொருளும் தோன்றிற்று. அதனல் மாதவி மனதில் கோபம் அதிகரித்தது. ஆயி னும் அவள் அதை வெளிக்காட்டவில்லை. அவற்றைக் கேட்டுக் களித்தவள் போல நடித்தாள். பின்பு கோவல னிடமிருந்து யாழை வாங்கி உண்மையில் மன வேறு பாடு இல்லாதவளா யிருந்தும் அவன் செய்தது போலவே தானும் செய்ய வேண்டும் என்ற கருத்து உடையவளாய், சில வரிப்பாட்டுக்களைப் பாடினள். அதனல் கோவலனுக்கு மாதவி மனம் வேறுபட்டவள் எனத் தோன்றிற்று. அன்றியும் அவளை விட்டுப் பிரி வதற்கு ஊழ்வினையும் வந்து குறுக்கிட்டமையின் அவளைப் பார்த்து, "ஏடி!

*** அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடியார்**
**இன்சொல் இழுக்குத் தரும்.**

என்ற பெரியார் வாக்குப் பிழைபடாது என்பதை ரூபித்தாய். இதுகாறும் நின்னிடத்துப் பெற்ற இன்பம் எல்லாம் துன்பமாகக் காண்கின்றன" எனப் பலவாறு உரைத்து ஏவலர் சூழத் தன் மனைவியை நோக்கிச் சென்றான். மாதவியும் செய்வது இன்னது என்ப தறியாதவளாய்த் துணைவன் பிரிந்த துக்கத்தால் மனம் கலங்கித் தன் மனையை அடைந்தாள். அடைந்தவள், படுக்கையிற் படுத்துக்கொண்டு கோவலனை நினைந்து

* ஒருவனை அன்பினுல் விரும்பாதவர்களாய் அவனிடத்தி லுள்ள பொருளைக் கவரும் பொருட்டு அன்புடையார் போல் நடிக்கின்ற விலைமகளிரது இனிய சொற்கள் பின்பு துன்பத்தைக் கொடுக்கும்.

நினைந்து வருந்தினுள். அவ்வருத்தத்தைப் போக்குவதற்கு யாழை எடுத்துச் சுருதி கூட்டினுள். கூட்டியும் அது ஒழுங்கு படவில்லை. பின்பு சில பாட்டுக்களை வாயாற் பாடலாம் எனத் தொடங்கினுள். அஃதும் அவள் கருத்திற்கு இசைந்தபாடில்லை. என் செய்வாள் பேதை! பிறகு ஒருவாறு மனதை ஒழுங்கு படுத்திக் கொண்டு தனது துன்பத்தைக் கோவலனுக்குத் தெரிவித்து, அவனது கோபத்தை மாற்றி அழைத்துவரச் செய்யலாமென நினைத்தாள். தன் கழுத்திலணிந்த மாலையின் மத்தியிலிருந்த தாழை மடலில் ஏடொன்றை எடுத்து அதில் மலராத அரும்பொன்றை யெழுது கோலாகக் கொண்டு செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து,

"காதல! வணக்கம் பல. அடியாள் கூறும் சில சொற்களுக்குச் செவி கொடுக்கவேண்டும். அடியாள் தங்களை விட்டுப் பிரிந்த இந்நேரத்திற்குள் அடைந்த துன்பத்திற்கு ஓரளவின்று. காணுமிட மெல்லாம் உமது திருவுருவமே காண்கின்றேன். அல்லாமலும் மாரன் என்பவன் காதலரைப் பிரிந்த கன்னியரிடத்து இரக்கம் வையான் போலும். ஆதலின் ஆருயிர்த் தலைவ! அடியேன் கவலையை யொழிக்க வந்தருள்வீராக" என வரைந்தாள்.

பின்னர் தனது தோழியாகிய வயந்தமாலை என்பவளை அழைத்து, அதனை அவளிடம் கொடுத்து "நீ விரைந்து சென்று எனது காதலரைக் கண்டு அவரிடத்து எனது துன்பத்தை எடுத்துப்பகன்று இதனைக் காட்டி அவரை இங்கு அழைத்து வருவாயாக" என அனுப்பினுள்.

வயந்தமாலை அதனைப் பெற்றுச் சென்று, பெருங்குடி வணிகர் வசிக்கும் இடத்தை அடைந்தாள். அங்

குக் கோவலனைப் பார்த்தாள். இனிய சில மொழிகளைக் கூறினாள். பின் மாதவி கொடுத்த நிருபத்தை எடுத்து நீட்டினாள். அதனைப்பெற்ற கோவலன் அதிலுள்ள வேண்டுகோளுக்கு மனமிசையாதவனாய் அவளைப் பார்த்து, "பெண்ணே! இந்நிருபத்தை மீட்டும் அவளிடத்துச் சென்று கொடுத்துவிடுக. விலைமகள் விலை மகளே என்பதை நடித்துக் காட்டினாள். அவளைக் கண்டு யான் மயங்கியதும் அவளது நடிப்பாலல்லவா? யான் கொண்டிருந்த மயக்கமெல்லாம் கடலாடி வந்ததோடு கழிந்தது" என மறுத்துக் கூறி அனுப்பினான். வயந்தமாலையும் செய்வது இன்னது என்பதை அறியாது திரும்பிப்போய் மாதவியிடத்துக் கோவலனது மன நிலையை எடுத்துக் கூறினாள். மாதவி 'இன்றைய தினம் அவர் வராதிருப்பினும் நாளை அவசியம் வருவார்' என்று அவளிடம் கூறி, மணியை யிழந்த நாகம் போலவே பெருங் கவலையுடன் படுக்கையிற் படுத்துக் கொண்டாள்.

இஃது இப்படியிருக்க, அக் காவிரிப்பூம் பட்டினத்தில் மாலதி என்னும் பெயருடைய ஒரு பார்ப்பினி யிருந்தாள். அவள் தனது மாற்றாள் குழந்தைக்குச் சங்கிற் பாலைக் கொண்டு ஊட்டினாள்; அக் குழந்தை பால் புரையேறி உயிரிழந்தது. அதனைக் கண்ட மாலதி மனங் கலங்கி, "ஓ தெய்வமே! இக்கொடுவினைக்கு யாது செய்வேன். என் கணவனும் மாற்றாளும் தம் குழந்தையைக் கொன்று விட்டேன் என்று அல்லவா என்னை நிந்திப்பார்கள்" என்று பலவாறு புலம்பி அழுது அக் குழந்தையைக் கையிலேந்திக்கொண்டு அப் புகார் நகரிலுள்ள தேவர் கோயில்களுக்குச் சென்று, "ஓ! தெய்வங்காள், யான் உண்மையில் குற்றமற்றவளாக விருந்தும்

இப்பழிவந்து என்னை அடைந்த காரணம் அறியேன். என்னை அறியாது ஏதேனும் தீங்கு செய்திருப்பின், அதனைப் பொறுத்து இக்குழந்தை உயிர்பெற்று எழுமாறு செய்தல்வேண்டும்" என வேண்டினுள். அவ்வாறு வேண்டியும் அக் குழந்தை உயிர்பெற்று எழவில்லை. என் செய்வாள் அப்பெண்மணி! பின்பு அக் குழந்தையைக் கையிற்கொண்டு சென்று, **பாசண்டச் சாத்தன்** வீற்றிருக்கும் திருக்கோயிலை அடைந்தாள்.

அடைந்தவள் சாத்தனை அழைத்து, தனக்குற்ற துன்பத்தைப் போக்குமாறு வேண்டி வரங்கிடந்தாள். அச்சமயம் அதன் பக்கத்திலுள்ள சுடுகாட்டுக் கோட்டத்திலிருந்த பிணம் தின்னும் ஓர் இடாகினிப் பேய் தன் சொரூபத்தை மாற்றிக்கொண்டு வந்து அவள் முன் பெண் உருவத்தோடு தோன்றி, "பெண்ணே! நீ வீணே அழுவதிற் பயனில்லை. பழம் பிறப்பில் புண்ணியம் செய்தார்க்கல்லால் இத் தேவர்கள் வரங் கொடுக்கார். இறந்த குழந்தையை எடு பார்ப்போம்," எனக் கூறி அவள் கையிலிருந்த குழந்தையைப் பெற்று வாயிற்போட்டு விழுங்கிவிட்டது. யாது செய்வாள் மாலதி! அனலிற்பட்ட கொழுந்துபோல் பதை பதைத்தாள். அழுதாள். புரண்டாள்; ஓ! என நிலத்தில் அறைந்தாள். இவ்வாறு அவள் படும் துன்பத்தைக் கண்ட சாத்தன் அவள் முன் தோன்றி, "பொற்றொடி நங்காய்! நீ ஏன் வீணுக அழுதுகொண்டிருக்கின்றனை! நீ கொண்டுவந்த குழந்தையை நீ செல்லும் வழியிலுள்ள சோலையிற் காண்பாய்" எனக் கூறி மறைந்தான். பின்பு அச்சாத்தன் தானே அக் குழந்தையாகச் சோலையிற் சென்று கிடந்தான். மாலதியும், சாத்தன் கூறியவாறு சோலைக்குச் சென்றுள். அங்கே குழந்தை

கிடப்பதைக் கண்டாள். அளவிறந்த ஆனந்தம் கொண்டாள். உடனே அதை எடுத்து மார்போடு அணைத்துக்கொண்டு சென்று அக் குழந்தையின் தாயின்கையில் அதனைக் கொடுத்தாள்.

அக் குழந்தையாகிய சாத்தன், அவர்களிடத்தே சீருஞ் சிறப்புமாக வளர்ந்து வந்தான். உரிய பருவத்துப் பல துறைக் கலைகளையும், கற்றுத் தேர்ந்து உலகோர் புகழும்படியாக விளங்கினான். அச்சமயம் அவனுடைய பெற்றோர் இறந்தனர். சாத்தன் அவர்கட்குச் செய்யவேண்டிய ஈமக்கிரியைகளைத் தவறாமற் செய்து முடித்தான். பின்பு சில ஆண்டுகள் கழிந்தவுடன் அறிவிலும் அழகிலும் சிறந்த ஒரு மங்கையை மணந்து எட்டு வருடகாலம் அவளுடன் இல்லறத்தை நடத்தி வந்தான். அம்மங்கையின் பெயர் **தேவந்தி** என்பதாம். இவ்விருவரும் இவ்வாறு இருந்து வருங் காலத்தில், சாத்தன் தேவந்திக்குத் தனது உண்மை நிலையைக் கூறி அவளை விட்டுப் பிரிய நினைத்தான். நினைத்தவன் தேவந்தியை அருகில் அழைத்து. "நங்காய்! யான் மனித உடம்போடு கூடி யிருப்பதனால் என்னை மானிடன் என்று கருதாதே. உனது மாமியினுடைய மாற்றாளின் மனக் கவலையைப் போக்குவதற்காக இவ்வடிவத்தைப் பெற்று வந்தேன். இவ்வூரின் புறத்தேயுள்ள கோட்டத்திலிருக்கும் பாசண்டச் சாத்தன் ஆவேன்" எனத் தன் வரலாறு முழுமையும் நவின்றான். தேவந்தியும் அதனைக் கேட்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தாள். பின்பு சாத்தன் அவளது உள்ளக் குறிப்பை அறிந்து தன்னுடைய கோயிலுக்கு வந்து தன்னை வணங்கும்படி கூறினான். ஊரிலுள்ளாரிடம் தன் தன்மையைக் கூறாமல் புண்ணிய நீர்த் துறை

களிற் சென்று படிதற்குச் செல்வதாகக் கூறி வீட்டினின்றும் நீங்கினாள். தேவந்தியும் அன்று முதலாகத் தீர்த்தமாடச் சென்ற தன் காதலனுக்குத் தீங்கொன்றும் ஏற்படாதிருக்கட்டும், என வேண்டிக் கொள்வாள் போல, ஊராருக்கு ஒரு போக்குக் காட்டி, காதலனாகிய சாத்தன் கோயிலுக்குச் சென்று அவனை வணங்கிக் கொண்டு வந்தாள்.

இத் தேவந்தி கண்ணகியோடு சிறு பருவந்தொட்டுப் பழகியவள். அதனால் அவள் கண்ணகியிடத்து அளவிறந்த அன்புடைத் தோழியாக விளங்கினாள். கண்ணகி இவளிடத்தும் தம் கணவன் பிரிவால் ஏற்பட்ட வருத்தத்தைச் சொல்லாள் என்றாலும் தன் நட்புக்குரியாள் படுந் துன்பத்தை அவள் முகக் குறிப்பால் அறிந்தாள் தேவந்தி. அதற்கு மிகவும் வருந்தினாள் ; அவளது வருத்தத்தை அகற்ற ஆலோசித்தாள். வழக்கம்போல் சாத்தன் கோயிலையடைந்தாள். அங்குச் சாத்தனுக்கு அறுகும், பூவும், நெல்லுமாகியவற்றைத் தூவினாள். " என் ஆருயிரினும் இனிய கண்ணகி தன் கணவனைப் பெறுதற்குத் திருவருள் புரிவாயாக" எனப் பன்முறையும் வேண்டினாள். பின்னர் அவ்விடத்தை விட்டு நீங்கி, கண்ணகியை அடுத்து, " உயிர்த்தோழீ ! நீ கலங்க வேண்டாம். கூடிய விரைவில் பிரிந்த கணவனை அடைவாய்" என வாழ்த்தினாள். அதனைக் கேட்ட கண்ணகி "உயிரனையாய்! நீ வாழ்த்தியது பொய் படாது. கணவனோடுகூடி வாழும் வாழ்வையும் பெறுவேன் ; ஆயினும் என் நெஞ்சம் சிறிது ஐயுறுகின்றது. இங்ஙனம் ஐயுறுதற்கு ஏற்பட்ட காரணத்தையும் கூறுகின்றேன் கேள். நேற்றிரவில் ஒரு தீக்கனாக் கண்டேன். எனது காதலர் என் கையைப்

பற்றிக்கொள்ள, நானும் அவருமாக இப் பட்டினத்தினின்றும் நீங்கிப் புதியதொரு பட்டினத்தை யடைந்தோம். அங்கு சில நாள் தங்கினோம். அப் பட்டின மக்கள் எங்கட்கு அடாததொரு பெரும் பழியை ஏற்றி என்னை இகழ்ந்தனர். அதனால் காதலர்க்குத் தீங்கொன்று ஏற்பட்டதென்று அப் பட்டின வாசிகள் கூற அறிந்தேன். அலறிலேன்; வாய்விட்டுக் கதறினேன். பின் அப்பழியைத் தாங்க முடியாதவளாய் ஆடவர் காணும்படியாக அப்பட்டினம் ஆளும் அரசன் முன் சென்றேன். வீண் சொல் பேசாதவளாகிய யான் அவ்வரசனது அமைச்சரும் பிறரும் காண வழக்காடினேன். பின்னும் அவ்வரசனுக்கும் அவன் பட்டினத்தார்க்கும் பெருங்கேட்டை உண்டாக்கினேன். காணத்தகாத கனவைக் காணின் அறிவுடையோர் பிறரிடம் சொல்லார் என உலகோர் கூறுவர். ஆதலின், மேல் நடந்தவற்றை உனக்கு விவரித்துக்கூற விரும்புகிலேன்" எனக் கூறினாள்.

அவற்றைக் கேட்ட தேவந்தி அவளைப் பார்த்து "கற்பிற் சிறந்த கண்ணகி! நீ கணவனால் வெறுக்கப்பட்டவள் அல்ல. சென்ற பிறப்பில் கணவன் பொருட்டுச் செய்ய வேண்டிய நோன்பு ஒன்றைச் செய்யாது விட்டனை. அதனால் இத்தகைய தீய நிகழ்ச்சிகள் நடந்தனவாகக் கண்டிருக்கிறாய். இதன் பொருட்டுக் கவலைகொள்ள வேண்டாம். அன்றியும் இக் கனவினால் தீங்கு ஏற்படாதிருக்கும் பொருட்டுச் செய்யவேண்டியது ஒன்று உண்டு. அது என்னவென்றால் பழம் பிறப்பிற் செய்த தீவினைகளை அகற்றவல்ல இரண்டு தடாகங்கள் இருக்கின்றன. அவை காவிரியாறு கடலோடு கலக்கும் சங்கமத்துறையின் சமீபத்திலுள்ளன.

அவற்றைச் சோமகுண்டம், சூரியகுண்டம் எனக் கூறுவர். அவற்றிற் சென்று ஸ்நானம் செய்து அவற்றின் பக்கத்திலுள்ள காமன் கோயிலையடைந்து வணங்குபவர் கணவன் அன்பிற்குப் பாத்திரராவர். ஆதலின் நாமும் ஓர் நாள் அங்குச் சென்று ஸ்நானம் செய்து காமனை வணங்கி வருவோம்" எனக் கூறினள். கண்ணகி அவளை நோக்கி, "தோழீ! நீ என்னிடத்து மிகுந்த அன்புடையவளாதலின், என் துன்பத்தைப் போக்குதற்கு இவ்வாறு வழி தேடினுய். என்னிடத்து நீ கொண்டுள்ள அன்பை எழுமையும் மறவேன். அன்றியும் ஒன்று கூறுகின்றேன் கேள். பயனைக் கருதி நீர் படிதலும் தெய்வம் தொழுதலும் என்போல்வார்க்கு இயல்பன்று. கொண்ட கணவனைத் தெய்வமாகக் கருதி வாழும் கற்புடைப் பெண்டிர்க்குக் கோயிலேது? குளமேது?" எனச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அச் சமயத்து மகளிர்களெல்லாம் மாலைப்பொழுது வந்ததை யறிந்து, விளக்கேற்றித் தங்களை ஆடை ஆபரணங்களால் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது கண்ணகியின் பணிப் பெண்களுள் ஒருத்தி விரைந்து அவளிடம் சென்று, "தலைவி! நம் தலைவர் நம் இல்லத்தை நோக்கி வருகின்ருர். அவர் வரும் குறிப்போ நம்மை இனி என்றும் விட்டுப் பிரியார் எனத் தோன்றுகிறது," எனச் சொல்லிக்கொண்டிருந்தாள். அதற்குள்ளாகக் கோவலனும் விரைவாக மனையினுட் புகுந்தான். கண்ணகியின் அந்தப்புரத்தை அடைந்தான். அங்குள்ள சிறந்ததொரு ஆசனத்தில் அமர்ந்தான். அச்சமயம் கண்ணகி அடைந்த களிப்பிற்கு ஓரளவில்லை. இருவரும் ஒருவரோடொருவர் பார்த்துக்கொண்டு சிறிது நேரம் பேசாதிருந்தனர்.

பின்னர், பெருங்குடிச் செல்வன் கண்ணகியின் மேனி வாட்டத்தைக் கண்டு பெரிதும் வருந்தினான். அதற்குக் காரணமாயிருந்த தன்னை நொந்து கொண்டு அவளைப் பார்த்து " பெண்ணே !

* " இருமனப் பெண்டிரும் கள்ளுங் களவும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு "

என்ற திருவள்ளுவ நாயனாரின் பொருளுரையை அறியாது நின்னைத் தனியாக வைத்து வருந்தும்படி செய்த என்னை யாது நினைத்தாயோ! பன்னெடுங் காலமாய் என் முன்னோர் தேடிவைத்த பெரும் புகழையும், பொருளையும் கெட்ட வழியிற் போக்கி விட்டேனே ? இவற்றை நினைக்க நினைக்க என் நெஞ்சம் படும் துயரம் கொஞ்சம் அல்ல. ஒழுக்கம் தவறிய எனக்கு இனி நற்கதியும் கிட்டுமோ?', எனப் பலவாறு தன் தவறைக் குறித்து வருந்தினான்.

இவற்றைக் கேட்டாள் கண்ணகி, ' சரிதான் ; மாதவிக்குக் கொடுக்கப் பொருளின்மையால் இவ்வாறு கூறுகின்றார் போலும். எவ்வாறிருப்பினும் அவரது மனக் கவலையைத் தணித்தலே நமக்குக் கடமையாகும்' என நினைத்தாள். கணவனிடத்து எள்ளளவேனும் வெறுப்புக் கொண்டாள் இல்லை. உடனே அவனைப் பார்த்து, "ஆருயிர்த் தலைவ ! மனம் கலங்க வேண்டாம். இதோ என்பால் இன்னும் இரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைத் தருகிறேன். பெற்றுக்கொள்வீராக" எனப்புகன்றாள். கோவலன் அவள் குறிப்பை அறிந்து, "பாவாய் ! நீ கொடுக்க இருக்கும்

* " விலை மகளிரும், கள்ளும், களவும் ஆகிய இவை மூன்றும் இலக்குமியினால் விரும்பப்படாதவரது சேர்க்கையாம்,

சிலம்புகளைப் பெற்றுப் போய் மதுரையில் விற்று அப் பொருளைக் கொண்டு வாணிபஞ் செய்து தொலைத்த பொருளை மறுபடியும் ஈட்டக்கருதியுள்ளேன். நாம் இருவரும் நாளைக் காலையிலேயே இவ்விடத்தினின்றும் புறப்பட வேண்டும்'' என்று கூறினான். ஊழ்வினையும் தன் பலனை யளிப்பதற்கு வந்து நெருங்கிற்று. கண்ணகியும் கணவன் கருத்திற்கு இசைந்தாள்.

## 4. மதுரைக்கு ஏகல்

அவ்விருவரும் மறுநாள் விடியற் பொழுதில் எழுந்து ஏவலர் அறியா வண்ணம் மாளிகையினின் றும் நீங்கிச் சென்றனர். சென்றவர் பக்கத்திலுள்ள கோயிலுக்குச் சென்று, அங்கே ஆதிசேஷன் மீது அறிதுயில் கொள்ளும் திருமாலைக்கண்டு வணங்கினர். பின்னர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு புத்த சமயத் திலுள்ளதும் தேவேந்திரனால் உண்டாக்கப்பட்டது மான ஏழு விகாரங்களையும் தொழுதனர். பிறகு உலக நோன்பிகளால் ஆகாயத்தின்கண் சஞ்சரிக்கும் சார ணர்கள் வந்து தங்குதற்பொருட்டு இடப் பெற்றதும், வட்டமானதுமான கற்பீடத்தை வலமாக வந்து வணங்கினர். பின்பு மக்கள் இடையறுது போக்கு வரவு செய்யக்கூடிய கோட்டை வாயிலைக் கடந்து போயினர். போகும் வழியில் ஆங்காங்குள்ள பல சோலைகளையும் மெதுவாகக் கடந்து நீர்ப் பெருக்கை யுடைய காவிரியாற்றின் வடபுறத்திலுள்ள ஒரு பெரிய சோலையையும் கடந்து ஒரு காததூரம் போயினர். இதற்குள் கண்ணகியின் மலரடிகள் மிக வருந்தின. உடலும் தளர்ந்து மெலிவுற்றது. அச்சமயம் ஒரு குளிர்ந்த நிழலைத் தரும் சோலையை அடைந்தனர்.

அப்போது கண்ணகி தன் வருத்தத்தை வெளிக் காட்டாது மறைத்து, திருந்திய சொற்களால் "மதுரை மூதூர் யாது?" என வினவினள். அவளது மேனி வாட்டத்தை உணர்ந்தான் வணிகர் செல்வன். ஊழின் வலியை நினைத்து உள்ளம் நெக்குருகினான். பின்பு அவளை நோக்கி, "பைந்தொடீ! கவலை அடைய வேண்டாம். இதோ மதுரை வந்து விட்டது. இங்கிருந்து அது ஐந்தாறு காவததூரம் இருக்கிறது" என்றான். பின்பு கண்ணகியோடு அவ்விடத்திலேயே சிறிது இளைப்பாறி, மறுபடியும் நடந்து சென்றான். செல்லும் வழியில் எதிர்ப்பட்ட ஒரு சோலையின்கண் இருந்த தவ மூதாட்டியாகிய கவுந்தி அடிகளைக் கண்டனர். அவர் சிறப்பைக் கேள்விப்பட்டு அவர் அடிகளிற் சென்று வணங்கினர். அவ்வாறு வணங்கிய அவ்விருவரையும் கவுந்தி அடிகள் பார்த்து, "உருவிலும், குலத்திலும், உயர்ந்த ஒழுக்கத்திலும், சிறந்த குடியில் பிறந்தவர்களே! நீவிர் கொடியரைப் போல சிறந்த மாளிகையையும் பெருஞ் சுற்றத்தையும் பெற்றோரையும் விட்டுப் பிரிந்து, இவ்வாறு வருதற்குக் காரணம் யாதோ? அன்றியும், இவளை வெளியே அழைத்துக் கொண்டு வருதல் உன் குலத்திற்குத் தகுதியன்றே! இது ஒரு புறம் இருக்க, நீவிர் இப்பொழுது எங்குச் செல்லுகின்றீர் கூறுவீராக" எனக் கேட்டார். அதற்கு விடையாகக் கோவலன் "சிறந்த தவத்தீர்! யான் உம்மிடத்துச் சொல்ல வேண்டிய தொன்றுமில்லை. அடியேன், முன்னையோர் தேடிவைத்த பெரும் பொருள் முழுமையும், சிற்றினச் சேர்க்கையால் சிதைத்து விட்டேன். ஆதலின் மதுரை மூதூர்க்குச் சென்று இழந்த பொருளைத் தேட வேண்டும் என்ற எண்ணமுடையேன்.

அடைவர். ஆதலின் அதை விடுத்து சமதரை மார்க்க மாகச் செல்லுவோம் என்ருல், வானுற ஓங்கிய மரங்களி லுள்ள பலாப்பழம், மாம்பழம், இளநீர் முதலியவை தலையில் விழுந்து துன்புறுத்தும். இவற்றைவிட்டு வயல் களின் வரப்பின் வழியாகச் செல்லுவோம் என்ருல், சுரு மீன்கள் துள்ளிப் பாய்வதாலும், நீர் நாய்கள் குரைத்துக்கொண்டு வருவதாலும், நத்தைகள் எங்கு பார்த்தாலும் ஊர்ந்து செல்வதாலும், இக்குலக் கொடி பெரிதும் வருந்துவாள். இவைபோல் துன்பத்தைக் கொடுக்கக்கூடியன இன்னும் பலவுள. ஆதலின் அன் புடையாய்! உன்னையன்றி வேறு ஆதரவில்லாத இவளை அழைத்துக் கொண்டு செல்லுகையில் வழிகளை நன்கு கவனித்துச் செல்லவேண்டும்" என உணர்த் தினர். பின்னர் இவ்வடிகளோடும் கோவலனும் கண் ணகியும் புறப்பட்டனர்.

அவர்கள் வழியிலேயுள்ள வற்ருத காவிரியாற்றின் வளப்பத்தையும், தோற்றம் மிக்க பலவகையான மலர் களையும், ஓங்கி வளர்ந்த நெற்பயிர்களையும், இன்னிசை யோடு கீதங்களைப் பாடும் பல பட்சிகளையும் கண்ணுற் கண்டனர். நீர் பாய்தலால் ஏற்படும் ஒலியையும், உழ வர் மங்களப்பாட்டு ஓசையையும், உழத்தியர் குதூ கலத்தோடு பாடும் சிருங்காரப் பாடல்களையும் செவி யாற் கேட்டனர். இவ்வாறு கண்டும் கேட்டும் சென்ற தனல் நடை வருத்தம் தோன்ருது, நாள் ஒன்றிற்கு ஒரு காவத தூரமாக நடந்து காடு இடையிட்ட பலவூர் களையும், பெரியோர் உறையும் இடங்களையும், கண்டு களித்துக் கடைசியில் ஸ்ரீரங்கம் என்ற திருப்பதியை அடைந்தனர்.

அங்கே காவிரிப்பூம் பட்டினத்தில் உலக நோன்பி

களால் இடப்பட்ட கற்பீடம் என்னும் ஆசனத்தி லிருந்து கொண்டு உலகத்திலுள்ளவர்கட்குச் சிறந்த விஷயங்களை எடுத்துக்கூறும் சாரணர் இருவர் எதிர்ப் பட்டனர். அவரைக்கண்ட கவுந்தி அடிகள், அவர் களுடைய பெருமையைக் கோவலனுக்கும் கண்ணகிக் கும் எடுத்துக் கூறி, அவர்களை அழைத்துச் சென்று அச்சாரணர் திருவடிகளில் முடிபட வீழ்ந்து வணங்கி நின்றனர். அச்சாரணருள் மூத்தோன் ஒருவன் முக் கால நிகழ்ச்சிகளையும் உணர்ந்தோன். ஆதலின் கவுந்தி யின் பக்கம் நின்று கொண்டிருந்த கண்ணகி கோவல ரது பிற்கால நிகழ்ச்சிகளை எல்லாம் அறிந்தான். ஆயி னும் அவன் விருப்பு, வெறுப்பு அற்றவனாதலின் அவ் விருவருக்கும் வரக்கூடியதாக இருக்கும் துன்பத்திற்கு மனம் இரங்காது கவுந்தி அடிகளைப்பார்த்து, "கவுந்தி! பாராய் இவ்விருவர்களையும் இங்கு இழுத்துக்கொண்டு வந்திருக்கும் பழவினையை. பூமியில் போட்ட விதை யைப்போல் தன் பலனைக்கொடுக்க வருகின்ற வல்வினை யைத் தடுத்து விலக்கல்கூடுமோ? கூடாதல்லவா? அதுவேபோல் இவர்களை இங்குக் கொண்டு வந்திருக் கும் பழவினையையும், விலக்கல் முடியாது. இது நிற்க. உலகத்தில் வாழும் மக்கள், உயிர்களைப் படைத்தவ னும், அளவில்லாத அறிவையுடையவனும் அறிவிற்கு அப்பாற்பட்டவனும், கருணைக்கு இருப்பிடமானவனும், **சிநேந்திரன், சித்தன், பகவன், தருமன், புனிதன்,** என்னும் அழகிய திருநாமங்களுடையவனும் ஆகிய அருக தேவ னால் அளிக்கப்பெற்ற ஆகமம் ஆகிய விளக்கொளியைப் பெற்றாலன்றி, துன்பத்திற்கு இருப்பிடமாகிய பிறவிப் பெருங்கடலை நீந்தார்" எனக்கூறினர். அவற்றை அன் போடு கேட்ட கவுந்தி, "குற்றமில்லாதவன் ஆகிய அருக

அவ்வெண்ணந்தான் எங்களை இவ்வாறு இழுத்துக் கொண்டு வந்தது" என்றான். கவுந்தி அடிகள் அவனை நோக்கி, "கோவல! உன் கருத்து முற்றுப் பெறுவதாக. மதுரை மூதூர் செல்லும் வழியோ காடும், முள்ளும், மேடும், மடுவும் நிறைந்ததாகும். இவளது அடிகளோ பஞ்சினு மென்மையுடையனவாகும். ஆதலின் இவள் அவற்றை எவ்வாறு கடத்தல் கூடும். உங்களை இவ் வாறு இழுத்துக் கொண்டு வந்த விதியின் வலியே வலிது. இம்மட்டோடு நும்மிடத்திற்குச் செல்லுங்கள் என யான் கூறினும் கேளீர். அது நிற்க, யான் குற்ற மற்ற அறிவுடையவர்களிடம் சென்று தரும உபதேசம் கேட்க வேண்டும் என்ற விருப்புடையேன். ஆதலின் யானும் உங்களோடு மதுரை மூதூர்க்கு வருகின்றேன்" என்றார். அங்ஙனம் கூறிய அவரைக் கோவலன் கையாற்றொழுதேத்தி, "அடிகாள்! இனி இவளைப் பொறுத்த கவலை எனக்கு இன்றோடு ஒழிந்தது. அவ ளும் வழிநடைத் துயரத்தைப் பொருட்படுத்தாள் எனப் புகழ்ந்து கூறினான்.

அப்பொழுது கவுந்தி அடிகள், "கோவல! மதுரை செல்லும் வழியில் உள்ளனவற்றை நீ பார்த்திராய். இடையிடையே துன்பத்தைக் கொடுப்பன பலவுள. அவற்றைக் கூறுகிறேன் கேள். சூரியன் வெம்மையைத் தாங்க முடியாத இவளை அழைத்துக் கொண்டு சோலை யின் வழியாகச் செல்லுவோம் என்றால், அங்கங்கே கிழங்கெடுப்போர் தோண்டியுள்ள பல குழிகள் இருக் கும். அக்குழிகள் பக்கங்களிலுள்ள மரங்களின் சரு கும், இலையும் உதிர்ந்து விழுந்து மேவியிருக்கும். அவற்றை யறியாத புதியவர், அவ்விடத்துக் காலை வைப்பாராயின் பள்ளத்தில் விழுந்து துன்பம் பல

தேவன் ஓதிய ஞானத் திருமொழிக்கு அல்லாமல் வேறு ஒன்றிற்கும் என் செவிகள் இடங்கொடா. காமனை வென்றோனாகிய அவனது ஆயிரத்தெட்டு நாமங்களைத் தவிர வேறொன்றையும் என் நா நவிலாது. ஐம்பொறிகளை அடக்கியவனது பாதங்களை அல்லாமல் பிற தெய்வங்களின் பாதங்களை என் கண் காணா; அருள் அறங்கொண்டோனுக்கு அல்லாமல் பிறரைக் கண்டால் என் உடல் பூமியில் பொருந்தாது. அளவில்லாத இன்பத்தைக் கொடுக்கும் அவனது வாய்மொழிக்கு அல்லாமல் வேறு ஒன்றை ஓத என் மனம் இசையாது'' என்று புகழ்ந்து பாராட்டினர்.

அதைக் கேட்ட சாரணர், 'பிறவிக்குக் காரணமான வினைகள் கவுந்தியை விட்டுக் கெடுக' எனக் கூறி ஆகாயமார்க்கமாக விரைந்து போயினர். தம் கண் காண ஆகாயமார்க்கமாகச் சென்ற அவர்களைக் கவுந்தி முதலான மூவரும், கண்ணிமையாது நோக்கித்தொழுது பிறகு காவிரியாற்றை ஓடத்தாற் கடந்துபோய் அவ்விடத்து எதிரேயுள்ள சிறந்த சோலை ஒன்றில் சற்று இளைப்பாறினர்.

அவ்வமயத்து, பயனில்சொல் பேசுவோன் ஒருவன் தன் விலைமகளோடு அம்மூவரும் இருக்கும் சோலையை அடைந்தான். அங்கேயிருந்த கோவலனையும் கண்ணகியையும் கண்டு 'அழகிற் சிறந்த இவர்கள் யாரெனக் கேட்டறிவோம்' எனத் தம்முள் சொல்லிக் கொண்டு கவுந்தியிருக்கும் இடத்தை அடைந்தனர். கவுந்தியடிகளும் அவர்கள் வரும் குறிப்பையறிந்து அவர்களை நோக்கி, ''நீவிர் கருதி வந்த காரியம் என்ன?'' என்று கேட்டனர். அதற்கு அவர்கள், ''அருந்தவத்தீர்! உம்மோடு வந்திருக்கும் இவர்கள் யாவர்? இவர்களைக்

கண்டால் காமனும் ரதியும் வேறு உருவம் பெற்று இவ்விடம் வந்திருக்கிறார்களோ என்று ஐயம் ஏற்படுகிறது. இவர்களைப்பற்றி எமக்குக் கூறுவீராக" எனக் கேட்டனர். அதற்கு அடிகள், "நீங்கள் கருதியது சரிதான். ஆனால் இவர்கள் காமனும் ரதியும் அல்லர்; எனது அருமைப் புதல்வர்கள் ஆவர். கணவனும் மனைவியும் நெடுந் தூரம் நடந்து வந்ததனால் இளைப்போடு இருக்கின்றனர். ஆதலின் இப்பொழுது அவர்களோடு வீணுரையாடாமல் விலகிச் செல்லுங்கள்" என்றனர். அவற்றைக் கேட்ட அவ்விருவரும் "இன்னும் ஒரு சந்தேகம் ஏற்பட்டு விட்டது. முதலில் இவர்கள் எனது மக்கள் என்றீர். இப்பொழுது கணவன் மனைவி என்று குறிக்கின்றீர். ஒரு வயிற்றுப் பிறந்தோர் இங்ஙனம் மணமகனும் மணமகளும் ஆதல் எவ்வாறு கூடும்? எல்லாம் அறிந்த நீவிர் இங்ஙனம் கூறியது எதனாலோ?" என நகையாடிக் கேட்டனர்.

அத்தீய சொற்களைக் கேட்ட கண்ணகி உடல் நடுங்கிக் கையால் காதை மூடிக்கொண்டாள். அவ்வாறு கண்ணகி படுந் துன்பத்தைக் கண்ட அடிகள் அவ்விருவரையும் பார்த்து; "நீங்கள் முள்ளடர்ந்த காட்டில் இருக்கும் கிழநரிகளாகக் கடவீர்" எனச் சபித்தனர். பெரியோர் சாபமொழி வீண்போகாதாதலால் அவ்விருவரும் அக்கணத்திலேயே முதுநரிகளாய் ஊளையிடலாயினர். அக்குரலைக்கேட்ட கண்ணகியும் கோவலனும் திகைத்து, கவுந்தியைத் தொழுது, "சீரிய தவத்தீர்! அறிவிலார் அறியாமையால் ஏதேனும் கூறிவிட்டால் அது அவரது அறிவின்மை எனக்கருதியல்லவோ பொறுக்கவேண்டும். ஆதலின் இவர் பிழையைப் பொறுத்து இவர்கட்கு இவ்வுருவம் நீங்கும் காலத்தை

யும் உரைத்தருள்வீராக" என வேண்டினர். கவுந்தியும் அதற்குச் சம்மதித்து, "இவர்கள் உறையூரின் புறத்தே யுள்ள காட்டில் ஒரு வருடகாலம் சுற்றித் திரிந்து பிறகு முன்னைய உருவத்தைப் பெறுவாராக' எனச் சாபத்தை மாற்றினர்

பிற்பாடு அம்மூவரும் அச்சோலையைவிட்டுப் புறப் பட்டு உறையூர்க்குச் சென்று அங்குள்ள அருகன் கோயிலில் எழுந்தருளிய அருகதேவனை வணங்கினர். பிறகு அக்கோயிலில் இருந்த முனிவர்களுக்குத் தாம் வரும் வழியில் நடந்த செய்திகளையும் ஸ்ரீரங்கத்தில் சாரணர்களைக் கண்டு வணங்கியதையும், அவர்கள் கூறியவற்றையும், கவுந்தி அடிகள் எடுத்துக் கூறினர். பிறகு அன்றைப் பொழுதையும் அங்கேயே கழித்து விட்டு மறுநாள் பொழுது புலர்ந்ததும் புறப்பட்டனர். சூரியன் தன் கிரணங்களைப் பரப்பி உச்சி வருவதற்கு முன் ஒரு காத தூரம் சென்றனர். சென்றவர் பின் வெயிலின் கொடுமையைத் தாங்க முடியாதவர்களாய் ஒரு சோலையின் பக்கத்திலுள்ள மண்டபத்தில் இருந் தனர்.

அச்சமயத்தில் வேதியன் ஒருவன் "அரசர்க்கு அரசனாகிய பாண்டியன் நீடூழி வாழ்வானாக. அவனது பகைவர் அழிந்து ஒழிவாராக!" என்று பலவாறு வாழ்த்திக்கொண்டு அம்மூவர்கள் இருக்கும் இடத்தை நெருங்கினான். அவனைக் கண்ட கோவலன், "ஐய, உமது ஊர் யாது? நீர் இவ்வழியாக எங்குப் போகின்றீர்?" எனக் கேட்டான். மறையோன், "ஐய, யான் குடகு மலையின் சமீபத்திலுள்ள **மாங்காடு** என்னும் ஊரில் உள்ளவன். சிவந்த மலையினிடத்தே நீலமேகம் படிந் திருப்பது போல, திருவரங்கத்தே ஆயிரம் பணா முடி

களையுடைய ஆதிசேஷனாகிய படுக்கையில் திருமால் பள்ளிகொண்டிருக்கும் திருக்கோலத்தையும், இன்னும் அப்பெருமான் மேகமானது ஒரு உருவமெடுத்துத் தன் வலக்கரத்தே சூரியனையும், இடக்கரத்தே சந்திரனையும் தாங்கி, மின்னலாகிய உடையைத் தரித்து நின்றாற் போல, சக்கரப் படையையும், சங்கையும், வலக்கரத்திலும் இடக்கரத்திலும் கொண்டு பொன்னுடை தரித்து நின்று கொண்டிருக்கும் திருக்கோலத்தையும் காணும் பொருட்டுப் போகிறேன். யான் வரும் வழியில் பாண்டிய நாட்டின் வளப்பத்தையும், பாண்டியனது கொடை, கருணை, செங்கோல் முதலியவற்றையும், கண்ணாரக் கண்டு வந்தேன். ஆகையால் அப்பாண்டியனை நாவார வாழ்த்திக்கொண்டு வருகிறேன்'' எனக் கூறினான்.

அவற்றைக் கேட்ட கோவலன், ''ஐய, நீவிர் கண்டு களித்து வந்த பாண்டிய நாட்டை யாங்கள் சென்று அடைதற்கு உரிய நேர் வழியை எமக்குச் சொல்லலாகுமோ?'' என வினவினன். ''வணிகர் பெரும! சொல்லுவதைக் கேட்பாயாக. கொடிய சூரியன் வெப்பஞ் செய்தால், முல்லை நிலனும், குறிஞ்சி நிலனும் தம் இயல்பு கெட்டுப் பாலை நிலத்தின் இயல்பை அடையுங்காலம் இதுவாகும். இத்தகைய கொடிய கோடை காலத்திலோ, பஞ்சினும் மெல்லிய அடிகளையுடைய இக்குலக் கொடியை அழைத்துக்கொண்டு வந்தீர். நீவிர் போகும் வழியோ கல்லும் முள்ளும் செடியும் அடர்ந்த வனாந்தரமாகும். நீரூற்று என்பது கிடையாது. புயற்காற்றும், வழி மயக்கமும், பேய்த்தேரும் தோன்றும். இத்தகைய பாலை நிலத்தைக் கடந்து போய் கொடும்பாளூர், நெடுங்குளம், என்னும் இரண்டு ஊர்

களுக்கும் இடையிலுள்ள ஏரியின் கரையைப் பின்பற்ற வேண்டும். அக்கரையைப் பின்பற்றிச் சென்றால் சிவ பிரானது கையிலுள்ள திரிசூலம்போல் மூன்று வழிகள் பிரிவதைக் காண்பீர்கள். அவற்றுள் வலப்பக்கத்தி லுள்ள வழியைப் பின்பற்றிச் செல்வீராயின், அவ்வழி யிலே நீர்ப் பசையில்லாது காய்ந்த தலைகளையுடைய வெண்கடம்பும் உலர்ந்த தலைகளையுடைய உவமையும், சொறசொறப்புள்ள அடியையுடைய வாகையும், நீண்டு உயர்ந்த மூங்கில்களும், நீரின்றிக் கற்றுழைகள் கரிந்து கிடக்கும் இடங்களும், உண்ணும் நீர் விரும்பிய காட்டு முயல்கள், நாயினது நாவினின்றும் வடிகின்ற நீரை நாடி நிற்கும் இடங்களும், பரந்த காடுகளும், வேடுவர் இருப்பிடங்களும், விளங்கித் தோன்றும். இவற்றைத் தாண்டிச் சென்றால் வாழையும், கரும்பும், தினையும், சாமையும், வரகும், மஞ்சளும், கமுகும், தெங் கும், மாவும் ஆகியவை சூழ்ந்திருக்கப்பெற்றதாகிய சிறு மலை யென்னும் பெயரோடு கூடிய ஒரு மலை தோன்றும். அம்மலையை வலமாகக்கொண்டு இடது பக்கத்திலுள்ள வழியைப் பின்பற்றிப் போவீராயின் பாண்டியன் திரு நாட்டையடையலாம்.

" அவ்வாறன்றி இடப்பக்கத்துச் செல்லும் வழி யில் செல்ல விரும்பின், அதனையும் கூறுகின்றேன். அவ் வழியில் இடையிடையே பெரிய தடாகங்களும், ஆழ மான வயல்களும், பல மரங்களையுடைய சோலைகளுமாக இருக்கும். இவற்றைக் கடந்து அப்பாற் செல்லின் திரு மால் உறையும் மலை (அழகர் மலை) தோன்றும். அம் மலையில் அறிவை மயக்கும் பிலத்துவாரம் ஒன்று உண்டு. அப் பிலத்துவாரத்தின் உட்சென்றால், **புண்ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தி** என்னும் மூன்று தடா

கங்கள் இருக்கின்றன. அவை தேவரும் கண்டு வியக்கும் தன்மையுடையன. அவற்றுள் புண்ணிய சரவணம் என்னும் தடாகத்திற் சென்று மூழ்குவீராஞல் இந்திரஞல் செய்யப்பட்ட ஐந்திரம் என்னும் வியாகரணத்தின் ஞானத்தைப் பெறுவீர். பவகாரணியில் மூழ்குவீராஞல் இப்பிறப்பிற்குக் காரணமாகிய சென்ற பிறப்பின் நிகழ்ச்சியை அறிவீர். இட்ட சித்தியில் மூழ்கிஞல் இட்ட சித்திகள் அனைத்தும் அடைவீர்.

" இப் பிலத்துவாரத்திற்குட் சென்று அவற்றைக் காண விரும்பிஞல் அம்மலையில் எழுந்தருளியவஞகிய திருமால் அடிப்போதுகளை மனத்தில் நிறுத்திக் கொண்டு பல முறை துதித்து அம்மலையை மூன்று முறை வலமாக வருதல் வேண்டும். அவ்வாறு வந்தால் உங்கட்கு எதிராகச் சிலம்பாறு என்னும் ஓர் நதி தோன்றும். அந்நதியின் கரையிலுள்ள கோங்கு மரநிழலில் ஒளி வீசும் மேனியை யுடைய **வரோத்தமை** என்னும் ஓர் அரக்கி தோன்றுவாள். அவள் யான் இம்மலையடிவாரத்தில் வசிப்பவள்; என்பெயர் வரோத்தமை என்பாள். நீங்கள் இம்மைக்கு இன்பந் தருவனவும், மறுமைக்கு இன்பம் கொடுப்பனவும், இவ்விரண்டு மல்லாமல் எக்காலத்தும் இன்பத்தை அநுபவிக்கும் வழியையும், கூறுவீராக. கூறிஞல் உங்கட்கு யான் வேண்டிய தொழிலைச் செய்வேன். அப்பிலத்துவாரக் கதவினையும், இப்பொழுதே திறந்திடுவேன் எனக் கூறுவாள். அவள் கேட்ட விஞக்களுக்கு விடை கூறி அதனுட் செல்வீராஞல், அங்கே அநேக வாயிற்கதவுகள் காணப்படும். அவற்றையும் தாண்டிச் சென்ருல் இரட்டைக் கதவுகளுடைய ஒரு வாயில் தோன்றும். அவ்வாயிலில் **வட்டிகைப் பூங்கொடி** என்பவள் வெளிப்

பட்டு முடிவில்லாத இன்பம் எது எனக் கேட்பாள். அதற்கு விடை கூறின் உங்கட்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்வாள். விடைபகரா விட்டாலும் அதற்காக உங்களை வருத்தாள். செல்லக்கருதிய இடத்திற்கு அனுப்புவாள். பின்பு நீங்கள் அத் தடாகங்கள் உள்ள இடத்தைத் தெரிந்து, நீங்கள் விரும்பிய தடாகத்தில் மூழ்கி அதனால் ஏற்படும் பலனை அடைவீர்களாக. பொய்கையில் மூழ்குங்கால் ஐந்தெழுத்துக்களாலும், எட்டெழுத்துக்களாலும் ஆகிய திருமந்திரங்களை மனத்தால் நினைத்துக் குளித்தல் வேண்டும்.

"இத்தகைய தடாகங்களில் பலனை அடைய விரும்பாவிட்டால், அம்மலையில் எழுந்தருளிய அழகனது அடித்தாமரை மலரை அன்புடன் நினைப்பீராக. அங்ஙனம் நினைத்துச் சென்றால் அவ்வழகனது கருடப்புள் எழுதிய கொடி நிலைநிற்கும் இடத்தைப் பார்ப்பீர்கள். பிறகு உள்ளே சென்று அவனைத் துதித்துப் பணியுங்கள். அவனது திருவடிப் பேற்றால் பிறவிப் பெருங்கடலை நீந்தி அழியாத இன்பத்தை அடையலாம். இவற்றுள் உங்கள் கருத்திற்கு இசைந்ததைச் செய்து அப்பால் மதுரையை அடைவீராக; இனி அவ்விரண்டிற்கும் இடையில் உள்ள வழியைப் பற்றியும் சிறிது கூறுகின்றேன். இவ்வழி அவ்விரு வழிகளிலும் சிறந்தது. இதில் அங்கங்கே சோலைகளும் ஊர்களும் நீர்த்துறைகளும் உண்டு. இவற்றைத் தாண்டி அப்பால் சென்றால் செல்லுதற்கரிய வழியாக, சிறிது தூரம் இருக்கும். அதில் பிறருக்குத் துன்பத்தை உண்டு பண்ணும் பூதம் ஒன்று உண்டு. அது முதலில் ஒருவரையும் வருத்துவதில்லை; ஆனால் நாம் மயங்கக்கூடிய காரியங்களைச் செய்யும். அம்மயக்கத்திற்கு உட்பட்டோரை

அழைத்துச் சென்று கொல்லும். இனிய மொழிகளால் வழிச் செல்லுவோரையும் தடுக்கும். இதைக் கடந்து சென்றால், மதுரையை அடையலாம். இம்மூவகை வழிகளில், எது உம்மால் விரும்பப்படுகிறதோ அவ்வழியிற் சென்று மதுரையை அடைவீராக. யானும் திருமாலைக் கண்டு பணியச் செல்கின்றேன்" எனக் கூறினான்.

அவ்வாறு கூறிய அந்தணனைக் கவுந்தி அடிகள் பார்த்து, "மறையவ! பிலம்புக வேண்டியது எங்கட்கு இல்லை. இந்திரன் வியாகரணத்திலுள்ளவற்றை எமது பரமாகமத்தில் நீ கண்டதில்லையோ? இறந்த பிறப்பில் அடைந்ததெல்லாம் பிறந்த பிறப்பில் காணவில்லையோ? சத்தியம் தவறாது உயிர்களைக் காப்பாற்றுவாருக்குக் கிடையாப் பொருள் எவையேனுமுண்டோ? ஆதலின் அவற்றிற் சென்று மூழ்காமலே அவற்றை அடைவோம். நீ கருதி வந்த இடத்தை நோக்கிச் செல்வாயாக. யாங்களும் எங்கட்கு ஏற்றதொரு வழியை நோக்கிச் செல்கின்றோம்" எனக் கூறிவிட்டுக் கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக் கொண்டு சென்று பக்கத்திலுள்ள ஒரு பதியில் உறைந்தனர்.

மறுநாள் விடியற்பொழுதில் புறப்பட்டு மறையவன் உரைத்த கொடும்பாளூர், நெடுங்குளம் என்னும் இரண்டிற்கும் இடையிலுள்ள ஏரியின் கரைவழியாகப் போய் அங்குள்ள சூலம் போல் பிரிகின்ற மூவகை வழிகளில் இடையிலுள்ள வழியைப் பின்பற்றிச் சென்றனர். ஒரு காத தூரம் சென்றவுடன் கண்ணகிக்கும், கவுந்தி அடிகட்கும் நடைக்களைப்பினால் தாகமேற்பட்டது. அதை யறிந்த கோவலன், அவ்விருவரையும் ஓரிடத்தில் இருக்கச் செய்துவிட்டு நீர் கொண்டு வருவதற்குப் புறப்பட்டான். போகும் வழியில் முன்பு

மறையோன் கூறிய கானுறை தெய்வமொன்று மாதவி யின் தோழியாகிய வயந்தமாலை உருக்கொண்டு வந்து குறுக்கிட்டது. அது கோவலன் அடியில் வீழ்ந்து அவனைப் பார்த்து, "அருட்பெரும் வள்ளால்! உமது வருத்தத்தைப் போக்கும்பொருட்டு மாதவி வரைந்து கொடுத்த நிருபத்தை யான் உம்மிடம் கொண்டு வந்து காட்டியும் நீர் அதைப் புறக்கணித்து விட்டீர். அவளோ, 'நான் வரைந்த நிருபத்தில் குற்றம் ஒன்று மில்லை. நீ என் காதலனிடத்துக் கூறிய வார்த்தை களில் ஏதேனும் குற்றம் இருக்கலாம். இல்லாவிடில் நொடிப்பொழுதேனும் என்னை மறவாதவர் இவ்வாறு மறந்திருப்பரோ? எனப் பலவாறு தூற்றினாள். அல்லாமலும் செய்வது அறியாது மயங்கிக் கண்ணீர் வடித்து, 'அறிவுடையவர் இகழும் விலைமகளிரது வாழ்க்கை இவ்வளவுதான் போலும்!" எனப் பலவாறு பிதற்றினாள். அத்துடன் நில்லாமல் கணமேனும் விட்டுப் பிரியாத என்னையும் 'என்முன்நில்லாதே அப் பாற் செல்வாயாக' எனப் பிடர் பிடித்துத் தள்ளினாள். அவளால் தள்ளப்பட்டு வரும் வழியில் நீர், பாண்டிய நாட்டை நோக்கிச் செல்லுவதாகச் சிலரால் அறிந் தேன். ஆதலின் நும்மைக் காண வேண்டி, துய ரடைந்து இவ்விடம் வந்துகொண்டிருந்த வாணிகஞ் செய்வோர் கூட்டத்துடன் கலந்து வந்து சேர்ந்தேன். முன்னைய பிறப்பில் சிறிது புண்ணியம் செய்திருந்தமை யால் இவ்விடத்திலேயே உம்மைக் கண்டுகொண்டேன். பெருங்குடி வணிக! அவளால் வெறுக்கப்பட்ட அடி யாட்கு நீர் கூறுவது யாது?" என நடித்து நின்றது.

கோவலன், அவ் வனதேவதையின் தோற்றத்தை யும், சொல்வன்மையையும் உற்று நோக்கினான்.

பின்னர் வேதியன், இவ்விடத்து மதி மயக்கும் தெய்வம் ஒன்று உண்டு எனக் கூறினனே, அது தானோ இத் தெய்வம்? அல்லாவிடில் உண்மையில் மாதவி அனுப்பிய வயந்தமாலை தானோ? எனத் தன்னுள் ஆலோசித்தான். பின்னர் இதன் உண்மையை இப்பொழுது அறிகிறேன் என, தனக்குத் தெரிந்த துர்க்கையின் மந்திரத்தை உருவிட்டான். அதை அறிந்த அத்தெய்வம் அவனைப் பார்த்து, "கோவலா! யான் வயந்தமாலை அல்லேன்; இக்காட்டில் வசிக்கும் வனதேவதை யாவேன்; உன் அழகைக் கண்டு மயங்கினேன். ஆதலால் இவ்வாறு நடித்தேன். இதனைக் கவுந்தி அடிகட்கும் கற்புநெறி தவருத கண்ணகிக்கும் கூற வேண்டாம். அவர்கள் அறியின் அவர்கள் இடும் சாபமாகிய அம்பிற்குத் தப்ப முடியாது" என வணங்கிப் போயிற்று. பிறகு கோவலன், பக்கத்திலுள்ள தடாகத்திற்குப் போய் தாகத்தைத் தணித்துக்கொண்டு ஓர் இலையைத் தொன்னையாகச் செய்து அதில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தான். அவ் விருவரும் அதனைப் பருகிக் களைப்பு நீங்கி இருந்தனர். பின்பு கவுந்தி, கண்ணகியின் மேனி வாட்டத்தைப் பார்த்து, சூரிய வெப்பத்தில் நடக்கலாற்ருள் என்பதை அறிந்து, குரவமும், வேங்கையும், கோங்கும், ஆகிய பல மரங்களையுடைய சோலையிடத்து, மறவர்களுக்கு வெற்றியைக் கொடுத்து அதற்குக் கைம்மாருக அவர்கள் கொடுக்கும் பலியைப் பெறும் ஐயை கோயிலைக் கண்டார், அங்கே கோவலனையும் கண்ணகியையும் அழைத்துச் சென்று அவ்விடத்தில் அமர்ந்து இருந்தார்.

அச்சமயத்தில் அக்கோயிலில் உள்ள ஐயைக்குத் தொண்டு இயற்றும், வேடுவர் குடியிற் பிறந்த தேவ

ராட்டியானவள், அவ்விடத்து நின்றுகொண்டு மெய்மயிர் சிலிர்த்து, கைகளைத் தூக்கிக்கொண்டு பலவகை ஆட்டம் ஆடினாள். பின்பு பக்கத்திலுள்ள மறவர்களைப் பார்த்து, "எயினர்காள்! உங்கள் இனத்தார்கள் எத்தனை பேர் நோயாலும், பேயாலும் கஷ்டப்படுகின்றனர். உங்கள் வீடுகள் எத்தனை பாழ்பட்டன. உங்கள் தொழிலாகிய வழிப் பறித்தலும், பசுக்கவர்தலும், எங்கே வைத்து வீட்டீர்கள். மறக்குடிக்கு உரிய வீரத்தையும், கோபத்தையும், கம்பீரத்தையும் எங்குக் கொண்டு போட்டீர்கள்? ஏ! மறவர்காள்! நீங்கள் எனக்கு உயிர்ப்பலிகொடுத்து எத்தனைகாலம் ஆயிற்று! இனியாகிலும் உங்கள் குலத்தொழிலைக் கைக்கொள்ளுங்கள். எனக்குக் கொடுக்கவேண்டிய உயிர்ப்பலியையும் கொடுங்கள். இல்லாவிடில் எவ்வகையிலும் நீங்கள் பெருமை பெறமாட்டீர்கள்" எனக் கோபாவேசத்துடன் கூறினாள்.

உடனே குறவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, ஐயைக்கு விழாச் செய்யவேண்டும் எனப் பேசிமுடித்தனர். பின், முன் செய்து வந்ததுபோல் தம் பழைய குலத்திற் பிறந்தவளாகிய குமரியை அழைத்து அவளுக்குச் சடைபின்னி அச்சடையைப் பொன் கயிற்றால் கட்டி வைத்தனர். அதன்மேல் பன்றியின் சிங்கப் பல்லை ஒடித்துப் பிறைச் சந்திரன் என்று சொல்லும்படியாகச் சாத்தி வைத்தனர். புலிப்பற்களை வரிசையாகக் கோத்துத் தாலியாகக் கட்டினர். அப்புலித் தோலை மேகலாபரணம்போல் தரிக்கும்படி செய்தனர். பின் வில்லைத் தூக்கி அவள் கையிற் கொடுத்து அவளைப் பெரிய கொம்புகளையுடைய மான்மீது எழச் செய்தனர். அவளோடு மயிலும், கிளியும், பிறவும் காளிக்

THE MADURA TAMIL SANGAM

குக் காணிக்கையாகக் கொண்டு சென்று (பல) வாத்தியங்கள் ஒலிக்க ஐயை திரு முன்பு, அழகிய பொருள்களும், சுண்ணமும், பூவும், புகையும், மாமிசச் சோறும், மற்றுமுள்ளனவும் படைத்தனர். யாவரும் ஒன்று கூடி ஐயையை வணங்கி அவள் முன் நின்றுகொண்டு,

* சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்தி
செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்ருயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்த வேநிற்பாய்.

என வாயாரத் துதித்தனர். உடனே துர்க்காதேவி, மகிழ்ந்து தேவராட்டியின்மீது பிரவேசித்தனர். தேவராட்டியோ, தன்னை யறியாது மயங்கி, பலவகை ஆட்டம் ஆடினுள். பின் அங்குக் கோவலனுடன் இருந்த கண்ணகியைச் சுட்டி, இவளோ,

கொங்கச் செல்வி குடமலையாட்டி
தென்தமிழ்ப்பாவை செய்த தவக்கொழுந்து
ஒருமா மணியா யுலகிற் கோங்கிய
திருமா மணி.

---

* கங்கா நதியைச் சடைமுடியின் மீது அணிந்த சிவபிரானது இடப்பாகத்தில் இருக்கின்ற உமாதேவியைப்போல, உருவு கொண்டு மறைகள் போற்ற, அவற்றிற்குத் தோன்ருமல் நிற்கின்ற நீ இப்பொழுது சங்கு சக்கரங்களைக் கையில் ஏந்திக் கொண்டு, சிவந்த கண்ணையுடைய சிங்கமாகிய சினவிடையிலே இருக்கின்ருய். ஆதலால் எளியேன்கட்கு இனி யாதொரு துன்பமும் இல்லை.

இங்கு இருக்கின்ற இவர் கொங்கு நாட்டினையாளும் செல்வி; குடநாட்டினையாளும் செல்வி; இனிய தமிழ் நாட்டினையாளும் பாவை. இவ்வாருதற்கு முன்னைப் பிறவியிற் செய்த தவத்தினுல் முளைத்த கொழுந்து போல்வாள்; இவ்வுலகிற்கு மாணிக்கம்போல் விளங்கும் பெண்ணுருக்கொண்ட திருமணி.

எனப் பலவாறு புகழ்ந்தனள். அப்புகழ் மொழியைக் கேட்ட கண்ணகி, 'இத்தேவராட்டி மதிமயங்கினாள். அதனால் இவ்வாறு கூறினாள்' எனச் சொல்லிக்கொண்டு வெட்கத்தால் எதிரே நில்லாது, கணவனது பின் புறத்தை அடைந்தாள். பின்பு, துர்க்கா தேவி, வேடுவர்கட்கு வேண்டிய வரத்தைக் கொடுத்துச் சென்றனள். அதைப் பெற்று வேடுவர்களும் தத்தம் வீட்டிற்கு ஏகினர். பிறகு கோவலன் கவுந்தியைப்பார்த்து, "அடிகாள்! நாம் செல்லும் வழி, காடும் மலையும் பிறவும் உடையதாயினும், அவற்றில் வாழும் விலங்குகள் செல்வோரைத் துன்பம் செய்யா. பிறரை வருத்தும் தெய்வமும் துன்பத்தை உண்டுபண்ணாது. வழிப் பறிப்போர் கொடுமையும் அங்கு இல்லை. இதனால்தான் பாண்டியன் செங்கோல் செழித்து ஓங்கி நின்றது. அதனால் சூரியோதய காலத்திற் சென்று கஷ்டப்படுவதிலும், இரவில் இனிதாக நடந்து செல்லுதல் ஏற்றதாகுமல்லவா?" என்றான். கவுந்தியும் அதற்குச் சம்மதித்தார். பின்னர் சந்திரன் வரவை எதிர்நோக்கியிருந்து, அவன் கிரணங்களை வீசி வெளிப்பட்டவுடன் மூவரும் புறப்பட்டனர்.

புறப்பட்டுச் செல்லுகையில் நடையால் மெலிந்த கண்ணகியைக் கோவலன் பார்த்து, "பெண்ணே, செல்லும் வழியில் கரடி, புலிகள் குறுக்கிடும். சிங்கம் கர்ச்சிக்கும். ஆந்தை குழறும். இவற்றிற்கு அஞ்சாது என் பின் வருவாயாக" எனக் கூறி அவள் கையைப் பற்றிக்கொண்டு நடக்கலானான்; கவுந்தி அடிகளும் நடைவருத்தம் தோன்றாதிருக்கும் பொருட்டு, பல கதைகளைக் கூறிக்கொண்டு சென்றனர். அதனால் கண்ணகிக்கு வருத்தம் என்பது சிறிதும் தோன்றாமல்

இருந்தது. இவ்வாருகப் பொழுது புலரும் வரையும் சென்று, பின்பு அவ்விடத்திலுள்ள பார்ப்பனச் சேரியில் போய்த் தங்கினர். அச்சமயம் கோவலன் காலைக் கடனை முடிக்கும்பொருட்டு அதன் பக்கத்திலுள்ள ஒரு சோலையை அடைந்தான்.

அடைந்தவன் தான் விலைமகளை விரும்பிச் சென்று செல்வமெல்லாம் தொலைத்ததையும், கண்ணகி வருந்தும்படியாக நடந்துகொண்டதையும், நினைத்து நெருப்பிற்பட்ட மெழுகுபோல் உருகினுன். அப்பொழுது மாதவியானவள் கண்ணகியுடன் கோவலன் பாண்டிய நாட்டை நோக்கிச் சென்றதாகக் கேள்வியுற்று வருந்தியவளாய் வரைந்து கொடுத்தனுப்பிய ஓலை முறியை எடுத்துக்கொண்டு கௌசிகன் என்னும் மறையோன் பல விடங்களிலும் கோவலனைத் தேடிக் காணுது, கவலையடைந்து வருபவன், தற்செயலாகக் கோவலன் இருக்கும் இடத்தை அடைந்தான். அம்மறையோன் கோவலனது வாடிய மேனியையும், நகையிழந்த முகத்தையும் கண்டு, இவன் கோவலனே; அன்றி வேருெரு ஆண் மகனே, எனச் சந்தேகப்பட்டான். பின் அச் சந்தேகம் நீங்குதற்பொருட்டு குருக்கத்தி படர்ந்த நிழலையுடைய ஓர் இடத்தை அடைந்து அக்கொடியைப் பார்த்து, “ஏ மாதவி! காதலன் பிரியக் கண்ணீர் வடித்து மாலையைப் பரித்தெரிந்து வாட்டமுற்றிருக்கின்ற எம் மாதவியைப் போல் நீயும் இளவேனிலின் பிரிவுக்கு வருந்தி மலரில்லாது வாட்டம் அடைகின்ருய். இதற்குக் காரணம் உங்கள் இருவர்க்கும் உள்ள பெயரின் ஒற்றுமைதானே?” எனக் கூறினுன். அதைச்செவியேற்ற கோவலன் அவனை நெருங்கி, “அந்தண! நீ இப்பொழுது கூறியதின்பொருள் யாது?” எனக்கேட்டான்.

கௌசிகன் சரிதான் 'கோவலன் இவனே என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை' என்று உடல் பூரித்தான். பின் அவனைப் பார்த்து, 'கோவல! உம் பிரிவிற்கு வருந்தி உமது பெற்றோர்கள் ரத்தினம் இழந்த நாகம் போல் வருந்துகின்றனர். புகார் நகர மாந்தர் படுந்துயரம் கொஞ்சம் அல்ல. உற்றார் உறவினர்கள் செய்வதறியாது ஏக்கம் அடைந்திருக்கின்றனர். வயந்தமாலை மூலம் அனுப்பிய லிகிதத்தை நீ மறுத்தமை கேட்டு, வருந்திக்கொண்டிருந்த மாதவி, உம் பிரிவைக் கேட்ட மாத்திரத்தில் பேர் இடும்பை அடைந்தனள். அச்சமயம் அவளிடம் சென்றிருந்த என்னை அவள் பார்த்து, 'எனது துன்பத்தைப் போக்கக் கூடியவர் நீவிர் ஒருவரே' எனத் தாழ்ந்து இக் கடிதத்தையும் வரைந்து கொடுத்தாள். பின் 'அடியாள் பொருட்டு இதனைக் கொண்டு சென்று, எனது கட்டழகனுக்குக் காட்ட வேண்டும்' என என்னை வேண்டினாள். அதனால் உம்மைப் பல விடத்தும் தேடிப்பார்த்துக் காணாது இவ்விடத்தை அடைந்தேன்'' என்று சொல்லிக் கையிலிருந்த கடிதத்தை எடுத்து நீட்டினான். கோவலனும் அதை வாங்கிப் பிரித்தான். அதனுள்

* '' அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி.''

* தேவரீர் திருவடிகளைத் திக்கு நோக்கி வணங்கினேன். இவ்வோலையில் எழுதிய அடியாளது புன் மொழியை திருவுளத்திற் கொண்டருள வேண்டுகின்றேன். பெற்றோர்க்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை விட்டும், கற்பை ஆளும் கண்ணகி

என்று ஒரு செய்யுள் வரையப்பட்டிருந்தது. கோவலன் பார்த்தான். 'சரிதான். உண்மையில் மாதவி மனம் மாறினுளில்லை. யானே அதனைக் குற்றமாக எண்ணினேன். ஊழ்வினையே யிவ்வாறு எண்ணுதற்குக் காரணமாயிருந்தது' என்று தெளிந்து அவளிடம் கொண்டிருந்த கோபம் தணிந்தான். பின்னர் மாதவி வரைந்த செய்யுளே, தான் தன் பெற்றோர்க்குத் தெரிவித்துக்கொள்ள வேண்டிய

"குரவர் பணிவிடைகளைத் தவிர்ந்ததொரு தவறன்றியும், குலக்கொடியாளோடு இரவிடை வீட்டினின்றும் நீங்கிய தவறு ஒன்று. இவ்விரண்டிற்கும் மன்னித்தருள்வீராக. இங்ஙனம் வரைந்ததில் குற்றம் இருப்பினும், அது அறிவிலான் சொல் என்று அகல விட்டிடுக"

என்ற விஷயத்தையும் ஒருவாறு உடையதாயிருத்தல் கருதி, மறையவனைப் பார்த்து, "மறையவ! என் பொருட்டாக இதனைக்கொண்டு சென்று என் தந்தையிடம் கொடுத்து அவர் துன்பத்தை அகற்றுவீராக" எனக் கூறியனுப்பினுன். பிறகு தன் செய்கடனை முடித்துக் கொண்டு, கண்ணகியும், கவுந்தியும் இருக்கும் இடத்தைக் குறுகினுன். பிறகு கவுந்தி முதலிய மூவரும் அவ்விடத்தினின்றும் புறப்பட்டனர். போகும் வழியில் துர்க்கையின் வீரத்தைக் குறித்துப்பாடிச் செல்லும் பாணர்களோடு கோவலன் அளவளாவி

---

யோடு, இரவிலே நகரை விட்டும், செல்லுதற்கு நேர்ந்த பிழை யாது? அதனை அறியமாட்டாதவளாய் யான் பெரிதும் கவலை அடைகின்றேன். அப்பிழை உண்மையில் என்னதே யெனினும் பெருமை யுடையீர்! உம்மைப் பணிகின்றேன்; தேவரீர் அதனைத் திருவுளம் பற்ருது அருளுதல் வேண்டும்.

"மதுரை இன்னும் எவ்வளவு காததூரம் இருக்கிறது?" எனக் கேட்டான். அப்பாணர்கள், "பெரும! சங்கப் புலவர் நாவால் இசைத்த செய்யுளோடு பல வகை மணங்கமழும் தென்றற்காற்று வந்தது பாராய்; ஆதலின் அப்பதி சமீபத்தில் உள்ளதே" என்று கூறினர். அதனைக் கேட்ட அம்மூவரும் பகற்பொழுதை அங்கேயே ஓரிடத்திற் கழித்துவிட்டு, இரவிற் புறப்பட்டுச் சென்றனர். சிறிது தூரம் சென்ற அளவிலே மதுரை நகர் தேவர் கோயில்களிலும், அரச மாளிகையிலும் அறையும் முரச ஓசையும், அந்தணர் வேத ஒலியும், யானைகளின் முழக்கமும், கூடிய பேரொலியானது அவர்களது செவியிற் கேட்டது. அதனால் களிப்படைந்து விரைந்து சென்று, குரவமும், வகுளமும், கோங்கும், வேங்கையும், சேடலும், செருந்தியும் ஆகிய பலவகை மரங்கள் அடர்ந்த வையைக் கரையை அடைந்து ஓடத்தில் ஏறி, அதனைக் கடந்து, கீழ்த்திசையிலுள்ள அருக முனிவர் வசிக்கும் பள்ளியை அடைந்து ஆங்கே யிருந்தனர்.

அப்பொழுது கதிரவன் தனது ஆயிரம் கிரணங்களையும் பரப்பி, கீழ்த்திசையில் தோன்றினான். சோலைகளிலும், வயல்களிலுமுள்ள பறவைக்கூட்டங்கள் ஆரவாரித்தன. சிவபிரான் கோயிலிலும் திருமால் கோயிலிலும் பேரிகையும், சங்கும் ஒலித்தன. அப்பொழுது கோவலன் கவுந்தியைப்பார்த்து, "தவத்தீர்! அறிவுடையார் அருவருக்கத் தக்க செயலை மேற்கொண்டு, பொருளைப் போக்கினேன். அத்துடன் நில்லாமல் இவளைத் தனியே அழைத்துக்கொண்டு காடும் மலையும் கடந்து, இவளுக்குத் துன்பம் உண்டு பண்ணினேன். இவ்வாறு அறியாத் தேயத்தை

அடைந்து வாழவேண்டிய காலம் வரும் என்று கனவிலும் கருதவில்லை. இத்தகைய துன்பங்கள் வருவதற்கு முன்னைப் பிறப்பில் எத்தகைய தீமை செய்தேனோ? அறியேன், பெரியீர்! முதலில் தங்களைப் பார்த்த அளவிலே 'யானும் உங்களோடு வருகின்றேன்' எனக் கூறினீர்கள். அது முதலாக, கண்ணகிநும் திருவடிக் காவலைப் பெற்றாள். அதனால் யான் முன்பு கொண்டிருந்த கவலைகள் ஒழிந்தன. ஆதலின் அடியேன் மதுரை நகரினுட் சென்று ஆங்குள்ள பெருங்குடி வணிகர்களைக்கண்டு, என் குல முறை கூறி உறவாடி வருகின்றேன். இதுவிஷயத்தில் உங்கள் கருத்து யாதோ?" என மனம் நைந்து கூறினான்.

## 5. கோவலன் மதுரை வளம் கண்டு மீளல்

அவற்றைக் கேட்ட கவுந்தி, அவனைப்பார்த்து, "உயர்குடி வணிக! கவலை கொள்ள வேண்டாம். 'முன்னைப் பிறப்பில் செய்த தீவினையின் பலனைப் பின்னைப் பிறப்பில் அடைவர்' என்பது நீ அறிந்ததல்லவா? நீ சென்ற பிறப்பில் அநேக நல்வினைகளைச் செய்து கடைசியில் ஒரு கொடிய தீவினையையும் செய்துள்ளாய். அதனால்தான் புகார் வாழ்வை, குற்றம் நீங்கிய செல்வத்தை, அருமைப் பெற்றோரை, உற்றார் உறவினரை, உயிரினும் இனிய நட்பினரைப் பிரிந்து துயரடைந்தாய். இனி இவற்றை எண்ணி வருந்துவதிற் பயன் இல்லை. தர்மோபதேசம் செய்பவர், உலகத்தாரைப் பார்த்து, 'பிற உயிர்கட்குத் துன்பம் செய்யாதிர்கள்.' அத்துன்பம் பின்பு உங்களுக்குத் துன்பத்தைக் கொடுக்கும்' என, நாக்கடிப்பாகவும், வாய்ப் பறையாகவும் சாற்றுகின்றனர், இதனிடத்து நம்

பிக்கை இல்லாதோர் தீமை புரிந்துவருந்துகின்றனர். அத்தீமைதான் பலனைக் கொடுக்குங்காலையில் அவர் வருந்துகின்றனர். நிறைந்த அறிவு உடையவர்களோ பழவினையின் பலனை அனுபவிக்குங்காலத்து அதற்காக மனம் வருந்தார்.

"இனி அறம், பொருள், இன்பம், என்ற மூன்றி னுள் பொருள் இன்பங்களை அடைய விரும்புவோர் முதலில் இன்பத்தையும், பிறகு பெருந்துன்பத்தையுமே அடைவர். அறம் செய்பவரோ முதலில் சிறிது துன்பத் தையும், பிறகு பெரிய இன்பத்தையும் அடைவர். இவற்றை அறியாமல் ஒன்றை மற்றொன்றாக உணர்ந்து கஷ்டப்படுவாரும் உண்டு. இதுபற்றியல்லவா,

* "பிரிதல் துன்பமும் புணர்தல் துன்பமும்
உருவி லாளன் ஒருக்கும் துன்பமும்
புரிகுழல் மாதர்ப்புணர்ந் தோர்க் கல்லது
ஒருதனி வாழ்க்கை உறவோர்க்கு இல்லை"

எனக் கூறியுள்ளார். இது ஒரு புறம் இருக்க, முன்னை ஊழ்வினையால் கோசல மன்னன் கேகயன் மகளுக்கு முன் கொடுத்த வரத்தை மாற்றுவதற்கு முடியா தவனாய், அவள் சொற்கொண்டு கண்மணிபோன்ற தம் புதல்வனைக் கானகம் போகுமாறு கட்டளையிட்டான். அதனைத் தலைமேல் தாங்கிச் செல்லுங்கால் இடையிலே மனைவியை விட்டுப்பிரிதலாலே, பெருந்துன்பம் அடைந் தவன் நான்முகனைப் பெற்ற திருமால் என்பதை நீ

* தேடிய பொருள் தன்னைவிட்டு நீங்குதலால் வரும் துன்பங்களும், இழந்த பொருளை அடையும்பொருட்டு நேரும் துன்பங்களும், உருவில்லாத வறுமை படுத்தும் துன்பங்களும், மகளிரோடு சேர்ந்தார்க்கு உண்டாகும். பற்றற்ற தனி வாழ்க் கையையுடைய பெரியோரிடத்து உண்டாகா.

அறியவில்லையா ? புட்கரன் என்னும் கொடியவனோடு சூதாடி, நாடு இழந்து நகர் இழந்து அரசியலும் இழந்து, காட்டில் காதலியை விட்டுப் பிரிந்தான் நளச் சக்கரவர்த்தி. ஒன்றைப் பெறக் கருதி அவ்வாறு விட்டுப் பிரியவில்லை. ஊழ்வினை தள்ளச் சென்று துன்பம் பல அடைந்தான். ஆதலால் காடடைந்து துயர் அடைந்த வகையில் நீயும் அவர்களை ஒத்தவன் தான். என்றாலும் நீ அவர்களிலும் சிறந்தவன் ஆகின்றாய். எதனால் எனில், அவர்கள் மனைவியை விட்டுப் பிரிந்து வருந்தினார்கள். நீயோ மனைவியுடன் கூடியிருக்கும் வாழ்வைப் பெற்றாய். ஆதலின் வருந்த வேண்டாம். மதுரை நகரின் உட்சென்று விருந்து எதிர் கொள்வாரைக் கண்டு திரும்புக'' எனத் தேற்றி அனுப்பினார்.

அதனைக் கேட்டு நின்ற கோவலன் விடைபெற்றுக் கொண்டு மதுரையை நோக்கிச் சென்றான். செல்லுகையில் அறிவாளிகள் வசிக்கும் பெரிய வீதிகளையும், அரசரும் கண்டு அதிசயிக்கும் கடை வீதியையும், பருத்தி நூலாலும், எலி மயிராலும், பட்டாலும், அரிய தொழில்களைச் செய்யும் நெய்தற்றொழிலாளர் வீதியையும், நாற்சந்தி முச்சந்தி கூடும் இடங்களையும், மாட மாளிகைகளையும், பிறவற்றையும் கண்டு களிப்படைந்து, கருதி வந்த காரியத்தை மறந்து கவுந்தியிடம் சென்று நகரின் வளப்பத்தையும், நகராளுவோன் சிறப்பையும் எடுத்துக் கூறிக்கொண்டிருந்தான். அவ்வமயம் காவிரிப்பூம் பட்டினத்துக்குச் சமீபத்திலுள்ள **தலைச் செங்காடு** என்னும் ஊரினனும், கோவலனுக்கு நட்பாளனுமாகிய **மாடலன்** என்னும் மறையோன் பொதியமலைக்குச்சென்று அதனை வலங்கொண்டு, பின்னர் குமரியாடித் தன் ஊரை நோக்கி வருகின்றவன், வழி நடந்த

களைப்பால் கோவலன் இருக்கும் இடத்தை அடைந்தான். அவனைக் கண்ட கோவலன் எதிர் சென்று வணங்கினான். மாடலன் கோவலனது குறிப்பால் அவனது கவலையை உணர்ந்து, "பெரும! இத்தகைய கோலத்தோடு இங்கு வர வேண்டிய காரணம் என்ன? பெண்ணிற் சிறந்த கண்ணகியை வீட்டை விட்டு அழைத்து வந்தனையே. இதனைப் பார்க்க என் மனம் படும் துயரம் கொஞ்சம் அல்ல.

"இனியோய்! அக்காலத்தில் மாதவிக்குப் பெண் குழந்தை பிறக்க, அக்குழந்தைக்கு நின்குல தெய்வத்தின் பெயராகிய மணிமேகலை என்பதனைச் சூட்டி மங்களம் கொண்டாடிய தினத்தில் மாதவியும் நீயும் இரப்போர்க்குச் செம்பொன்னை அள்ளி இறைத்தீர்கள். அப்பொழுது பொன் பெற வேண்டி, வந்து கொண்டிருந்த ஓர் முதிய இரவலனை அவ்வழி ஓடி வந்த மதயானை ஒன்று கையாற் பற்றியது. நீ அதனைத் தெரிந்து இரக்கத்தோடு சென்று, அந்த யானையின் மதத்தை அடக்கி அம்முதியவனை அதினின்றும் தப்புவித்த கருணை வள்ளல் அல்லவா?

"இன்னும் ஒருகால் பார்ப்பினி ஒருத்தி அன்போடு வளர்த்த கீரியையும், குழந்தையையும் தனிமையாக வைத்து விட்டு நீர் கொண்டு வருவதற்குச் சென்றாள். அச்சமயம் ஒரு பாம்பு அக்குழந்தையின் பக்கத்தே வந்தது. அதைக் கண்ட கீரி அப்பாம்பைக் கடித்துத் துணித்து இரத்தம் படிந்த வாயுடன் தான் செய்த காரியத்தைக் காட்டுவதற்குப் பார்ப்பினியை எதிர் நோக்கிச் சென்றது. அப்பொழுது குடத்துடன் வந்த பெண்மணி கீரியின் வாயிலுள்ள இரத்தத்தைக் கண்டாள். அது தன் குழந்தையைக் கொன்று விட்டதாக

நினைத்தாள். உடனே தன் இடுப்பிலுள்ள குடத்தைத் தூக்கி அதன்மேற் போட்டாள். அவ்விடத்திலேயே அது உயிர் துறந்தது. அதனை யறிந்த பார்ப்பினியின் கணவன் அப்பாவம் நீங்குதற்பொருட்டு புண்ணிய தீர்த்தம் ஆடுதற்கு வடதிசைநோக்கிச் செல்லலாயினன். அதனைக் கண்ட பார்ப்பினி அவனைப் பின் தொடர்ந் தாள். அவன் அவளைப் பார்த்து, "ஏடி! உன்னோடு வாழும் வாழ்க்கையை விரும்பேன். வடமொழி வாசகம் வரைந்துள்ள இவ்வோலையை வடமொழி வல்லாரிடம் சென்று காட்டுக" என்று அதனைக் கொடுத்தனுப் பினன். அவளும் அதனை ஏந்திக் கொண்டு பல இடங் களிலும் அலைந்து 'இவ்வோலையைப் பார்த்து என் துன் பத்தைப் போக்குவீரோ' எனக் கூறினள். அதனைக் கண்ட நீ அவளை அழைத்து அவள் துயரைக் கேட்டு, ஓலையிலுள்ள செய்யுளின் பொருளை அறிந்து, அதன் பிரகாரம் அவள் பாவம் நீங்கும்பொருட்டுத் தானம் பல செய்வித்தாய். வடதிசையை நோக்கிச் சென்ற அவள் கணவனைத் தேடி அழைத்து அவளிடம் சேர்த்தாய். அவர்கள் தரித்திரத்தை போக்குவதற்குப் பொன் பல கொடுத்தாய். இத்தகைய நல்ல காரியங் களைச் செய்த உத்தமன் அல்லவா?

"மற்றும் ஒரு சமயம் பத்தினியொருத்தி மீது, அறிவில்லாத வறுமையாளன் ஒருவன், அவள் கணவ னிடத்தில் 'உன் மனைவி தவறுபட்ட ஒழுக்கம் உடையாள்' எனச் சிலவற்றைக் கூறினன். கூறின வுடனே அவனுக்குத் தண்டனையிடுதற்கு, நல்வழியில் தவறியவர்களைக் கொன்று தின்னும் சதுக்கப் பூதம் தன் கைப்பாசத்தால் அவனைப் பற்றி யிழுத்தது. அதனைக் கண்ட அவன் தாய் தன் ஒரு மகனை யிழத்

தற்கு வருந்திக் கதறினாள். அவள் துயருக்கு இரங்கிய நீ அப்பூதத்தினிடம் சென்று, "ஏ பூத நாயகனே! அடியேன் உயிரைக் கொண்டு இவனை விட்டிடுக" என வேண்டிக் கொண்டாய். அது கேட்ட அப்பூதம், "இக் கீழ்மகனுடைய உயிருக்குப் பதிலாக உனது உயிரைக் கொண்டு மேலான கதியை இழக்கும் முறைமை என்னிடத்தில் இல்லை" என மறுத்துவிட்டு உன் கண் முன்னே அவனை அறைந்து விழுங்கிற்று. அதனால் பெருங் கவலை கொண்ட அவனது அன்னையை அழைத்துச் சென்று அவளைத் தேற்றி, அவளுக்கும் பசிப்பிணி தோன்றாதவாறு பொருள் கொடுத்துக் காத்த புண்ணியன் அல்லவா?

"பெருங்குடி வணிக! நீ இவ்வாறு செய்தற்கரிய செயல் அல்லவோ இம்மையில் செய்திருக்கின்றாய். யானறிய இதுவரை யாதொரு தீய செயலும் நின்னிடம் காண்கிலேன். அங்ஙனமிருக்க இக்குலக் கொடியை அழைத்துக் கொண்டு வந்து துன்பமடைவது முன்னைப் பிறப்பிற் செய்த கொடுவினையோ" எனக்கூறி வருந்தினான்.

அது கேட்ட கோவலன், 'நண்ப! நேற்றிரவு நான்காம் யாமத்தில் ஓர் தீக்கனாக் கண்டேன். அதனை உன்னிடம் கூறாதிருக்க முடியவில்லை. கூறுகின்றேன் கேள். இக்கண்ணகி இம்மதுரையில் ஓர் கீழ்மகனால் கடுந் துயரடைய, யான் ஆடையின்றி ஓர் கடாவின் மேல் ஏறினாற்போலவும், பிறகு அவளுடன் மோக்ஷ உலகத்தை அடைந்தாற்போலவும், மாதவி மணிமேகலையைப் புத்தருக்கு அளித்தாற்போலவும் கண்டேன். அவை விடியும் வேளையில் கண்டேனாதலின் விரைந்து பலிக்கும் என நினைக்கின்றேன்" எனக் கூறினான்.

அவற்றைக் கேட்ட மாடலனும் கவுந்தியும் அவனைப் பார்த்து, "கோவல! கவலை கொள்ளாதே. ஊழினை வெல்வார் யாவர். நிற்க. இவ் வறப்பள்ளி யிருக்கை, துறவிகளுக்கு அல்லாமல் மற்றவருக்குப் பொருந்தாது. ஆகையினால் கண்ணகியை அழைத்துக் கொண்டு நகரினுள் செல்வாயாக. அங்குள்ள வணிகச் செல்வர்கள் உன்னை மாசாத்துவான் குமாரன் என்று அறிந்தால் போற்றித் தம்மிடத்து வைத்துக்கொள் வார்கள்" என்று கூறிக்கொண்டிருக்கையில் மாதரி என்னும் ஓர் முதிய யாதவ குலப் பெண்ணொருத்தி வந்து கவுந்தியைக் கண்டு பணிந்தாள்.

கவுந்தி, அவளுடைய பணிவைக் கண்டு, "பசுக் களைக் காத்து அதன் பயனை மனிதர்க்குக் கொடுக்கும் ஆயரது வாழ்க்கையில் கெடுதல் இல்லை. இம்முதியவள் நற்குண நற்செய்கைகள் உடையவளாகக் காண்கின் றாள். ஆதலின் இவளிடம் கண்ணகியை அடைக்கல மாக வைப்பதில் யாதொரு தீங்கும் ஏற்படாது" என நினைத்து அவளைப் பார்த்து, "மாதரி! சற்றுக் கவனிப் பாயாக. இவ் வாண்மகன் இப்பொற்றொடியின் மணாள னாவான். இவனது பெயர் கோவலன் என்பது. இவ் விருவரும் தம் இருப்பிடமாகிய புகாரினின்றும் இங்கு வந்திருக்கின்றனர். இவனது தந்தையோ செல்வத்திற் சிறந்த மாசாத்துவான் என்னும் பெயரினன் ஆவான். இந்நகரிலுள்ள வணிகருள் அவனை யறியாதார் ஒரு வரும் இல்லை. அவர்கள் இவரது வரவை அறிந்தால் வந்து அழைத்துக்கொண்டு போய் உபசரிப்பர். ஆதலின் அவர்கள் இவரை அறியும் வரையும் இக்குலக் கொடியை உன்னிடம் அடைக்கலமாக வைத்தேன். அவளை அழைத்துச் சென்று நன்னீராட்டிக் கண்களில்

மை தீட்டி, கூந்தலில் பூச் சூட்டி, தாயும் தந்தையும் நீயாயிருந்து இவளைக் காப்பாயாக. அல்லாமலும், முதியவளே! இப்பெண்மணி என்னோடு காடும் மலையும் கடந்து கஷ்டப்பட்டாள். மண்மகள் கண்டறியாத இவளது அடிகள் பாலைவனத்தில் பட்டபாட்டைச் சொல்ல முடியாது. அச்சமயத்திலும், கணவன் மீது கோபம் கொள்ளாது, அவனது மேனி வாட்டத்திற்கு மனம் வருந்தினாள். இங்குக் கூறியவற்றால் அவளது கற்பின் திறத்தைக் காண்பாயாக.

"கற்பென்னும் குணத்தை ஆபரணமாக உடைய இத்தெய்வத்தை அல்லாமல் வேறு சிறந்த தெய்வத்தை யான் கண்டிலேன். அதுவும் அல்லாமல் 'பத்தினிப் பெண்டிர் இருந்த நாட்டில் கால மழை பொய்க்காது; வளம் பிழைத்தலை அறியாது, வேந்தர் செங்கோல் மாறாது' என்று உலகத்தார் உரைக்கும் நல்லுரையை நீ அறிந்தவள் அல்லவா? இன்னும் தவத்தோர் ஒப்பு வித்த அடைக்கலப் பொருள் முதலில் சிறிதாக இருப் பினும் பின்பு அது பெரிய இன்பத்தைத் தருவது ஒன்றாகும். இதற்கொரு உதாரணமாக உண்மையாய் நடந்த கதை ஒன்றைக் கூறுகின்றேன் கேள்.

"காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள கற்பீடத்தின் கண்ணே சாரணர்கள் இருந்து கொண்டு சாவகர்க்குத் தருமோபதேசம் செய்து கொண்டிருந்தனர். அச்சமயம் பொன் அணிந்து பூ மாலை அணிந்து அழகு நிறைந்த தேவ உடலோடு ஒருவன் வந்து நெருங்கினான். அவன் அவ்வளவு அழகிற் சிறந்திருந்தும் அவனது கைகளில் ஒன்று மாத்திரம் குரங்கின் கையாக விருந்தது. அதைப் பார்த்த சாவகர்கள், ஆச்சரியம் அடைந்து சாரணரைத் தொழுது "சுவாமி! இஃதென்ன ஆச்சரியமாக இருக்

கிறது. இவருடைய வரலாற்றை எங்கட்குக் கூறுவீராக" என வேண்டினர்.

"அதைக் கேட்ட சாரணர்களுள் ஒருவன் அவர்களைப் பார்த்து, 'சாவகர்களே! முன்னொரு காலத்தில் இப்பட்டினத்தில் எட்டி என்னும் பட்டம் பெற்றவனும், **சாயலன்** என்னும் பெயருடையவனும் ஆகிய ஒரு வணிகன் இருந்தான். அவன் மனைவி நல் வாழ்வை அடையக் கருதி, தவத்தினன் ஒருவனை அழைத்து, உணவு படைத்தாள். அச்சமயம் அவ்வூரார் துரத்தப்பட்டு உணவின்றி வருந்திய குரங்கொன்று அவ் வணிகனது வீட்டை நோக்கி வந்து தவத்தினன் பக்கத்தில் சென்று அமர்ந்து கொண்டது. பிறகு 'நீ உண்டு கழித்த அன்னத்தையும், நீரையும் கொடுத்துக் காப்பாயாக' என உரைப்பதுபோல் அவன் முகத்தைப் பார்த்தது. தவத்தினன் அதனைக் கண்டு அவ்வணிகன் மனையாளைப் பார்த்து, 'பொற்றொடி! இதனை அற்பக் குரங்கென்று இகழாதே. உனது மக்களோடு ஒப்ப வள்ர்த்துக் காப்பாயாக' எனக் கூறிப் போயினன். அன்று முதல் அவளும் அதனை அன்பாக வளர்த்து வந்தாள். அது சில காலம் இருந்து பின் இறந்தது. தவத்தினன் தன்னிடம் அடைக்கலமாகக் கொடுத்த குரங்கு இறந்ததைக் குறித்து அவள் வருந்தினள்.

'பின்பு அக்குரங்கின் இழி பிறப்பு நீங்கும் பொருட்டு அதற்கென்று முன் பகிர்ந்து வைத்திருந்த செல்வத்தைக் கொண்டு பல தான தருமங்கள் செய்தாள். அதன் பயனாக அக் குரங்கானது மத்திய தேசத்தில் உள்ள **வாரணசி** என்னும் நகரத்திற்கு அரசனாகிய **உத்திர கௌத்தன்** என்பவனுக்குத் திருக்

குமாரனாய்ப் பிறந்து அறிவிலும், திருவிலும், உருவிலும், பிறவற்றிலும் சிறந்து முப்பத்திரண்டு வருடம் அரசு புரிந்து, சிறந்த பல தருமங்களைச் செய்து, கடைசியில் இத் தெய்வ யாக்கையைப் பெற்றது. அதுதான் இங்கு உள்ள தேவ குமாரன். இவன் 'முன்னைப் பிறப்பில் சாயலன் மனையாள் செய்த தானப் பயனால் இப் பேறு பெற்றான்' என்பதை உலகத்தார்க்கு உணர்த்தவும் அதனால் செய்நன்றி மறவாமையைக் குறிப்பிக்கவும் இக் குரங்குக் கரத்துடன் வந்திருக்கின்றான். அடைக்கலத்தைக் காத்த சாயலனும், அவனது மனைவியும் என்றும் அழியாத மோக்ஷ இன்பத்தை அடைந்தனர் எனக் கூறினான்.

"ஆதலின் மாதரி! இனிக் காலம் தாழ்த்தாது கண்ணகியை அழைத்துச் செல்" என்று கவுந்தி கூறினார். மாதரியும் அவ்வாறே செய்வதாக ஒப்புக்கொண்டு அடிகளைப் பணிந்து கோவலனையும் கண்ணகியையும் அழைத்துக்கொண்டு, நகரின் மதில் வாயிலின் உட்புகுந்து சென்று, தனது வீட்டை அடைந்தாள். அங்கே தன் வீட்டிற்குச் சமீபத்தில் உள்ளதும், வேலியே மதிலாகவுடையதும் குளிர்ந்த கொட்டகைகள் உடையதுமான செம்மண் பூசப்பட்ட புதிய வீட்டில் அவர்களை இருத்தினாள். பின்னர் தன் குல மங்கையர் சூழக் கண்ணகியைப் புதுப்புனல் ஆட்டினாள். பின்பு பலவாறு உபசரித்தவளாய், "தேவி! எதற்கும் மனம் தளர வேண்டாம். இதோ உம் முன்னிலையில் நிற்கின்றனளே, இவள்தான் என் மகள் ஐயை யென்னும் பெயர் உடையவள் ஆவாள். இவள் உமக்கு வேலைக்காரியாக இருந்து வேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பாள். நாங்களும் எங்கள் கண்ணின் கருமணியே

போல் உங்களைக் காப்போம்" எனப் பல தேறுதல் கூறினாள். பின் தன் மகளிடம் சமையலுக்கு வேண்டிய பண்ட பாத்திரங்களையும் கொடுத்தனுப்பினாள்.

ஐயை அவற்றை எடுத்துக்கொண்டு கண்ணகியோடு சென்று அவளுக்கு வைக்கோலால் அனல் ஊதிக் கொடுத்தனள். கண்ணகி, சமையல் அறையினுட் சென்று அறுசுவை உணவு ஆக்கினாள். பிறகு கணவனது பாதங்களை நல்நீர் கொண்டு கழுவி வணங்கி, அவனை ஓர் தடுக்கு ஆசனத்தில் அமரச் செய்தாள். அவனுக்கு முன் வாழை இலையும், நீரும் கொண்டு வந்து தரையில் சிறிது நீர் தெளித்து இலையை விரித்து அமுது படைத்தாள். கோவலனும் செய்ய வேண்டியதைச் செய்து பின் உணவை உட்கொண்டான். அவர்கள் செயல்களைப் பார்த்து, அப்புறத்து இருந்து கொண்டிருந்த மாதரியும், ஐயையும், "இவ்வாண்மகன் அவ்வட மதுரையில் ஆயர் பாடியில் அசோதை பெற்றெடுத்த காயாம்பூ நிறத்தை யுடைய கிருஷ்ணனோ? இப்பெண் மணி முன்பு நம் குலத்தில் காளிந்தி யாற்றின் கரையிடத்துக் கண்ணபிரானது துயர் நீக்கிய நப்பின்னைப் பிராட்டியோ? இவர்களது காட்சி கண்ணுக்கு அடங்காத காட்சியாக வன்றோ யிருக்கிறது" எனப் புகழ்ந்து கொண்டிருந்தனர்.

கோவலன் உண்டு முடிந்தவுடன் சற்று நேரம் இளைப்பாறினான். அப்பொழுது கண்ணகியை அருகில் அழைத்து, "கற்பின் செல்வி! என் பெற்றோர், கல்லும், முள்ளும் அடர்ந்த காட்டு வழியிலே, கண்ணகி எங்ஙனம் நடந்து சென்றாளோ, கோவலன் அவளைத் தனித்து அழைத்துச் செல்லுதற்கு எவ்வாறு துணிந்தானோ எனப் பலவாறு இரங்கித் துயரடைவார்களே. நாம்

இவ்வளவு துயரடைந்தது கனவோ ? அன்றி நனவோ? யாதென்று அறிய முடியாதவனு யிருக்கிறேன். நன வாயின் முன்னைப் பிறப்பிற் செய்த தீவினையோ ? உள் ளம் கலங்கி யிருக்கிறேன். ஆதலால் ஒன்றும் அறிய முடிய வில்லை. வீணர்களோடும், வம்பர்களோடும் சிநேகம் செய்தேன். அறிவீனருடைய பயனற்ற மொழி யையும், சிரிப்பையும், இனிதெனக் கொண்டிருந்தேன். இவ்வாறு ஒழுக்கம் தவறியதால் பெற்ருேர்க்குத் தொண்டு செய்தலை வெறுத்தேன். இவ்விதமாக ஒழுக் கம் தவறிய எனக்கு, இனிநற்கதி கிடைக்குமோ ; கற் பின் கொழுந்தே, யான் இத்தகைய கொடிய தொழில் கள் எல்லாம் செய்திருந்தும் 'கண்ணகி என்னுெடு வருக' என யான் அழைத்த மாத்திரத்தில் இவனுெடு செல்லுதல் கூடாது என்று நினையாமல், தாமரையை வென்ற முகத்தோடு, என்னுேடும் வந்து விட்டாயே. ஐயோ ! என்ன தொழில் செய்தாய்" என இளகிய மனத்தோடு கூறினுன்.

அதனைக் கேட்ட கண்ணகி, "தலைவ! இல்லறத தார்க் குரிய வழிபாடுகளைத் துறந்த யான் தேவரீர் மாறுபட்ட நடையை யுடையவராயினும், உம்மை யன்றி எனக்கு வேறு தெய்வம் இல்லையாதலால் உங்க ளோடு வருவதற்குச் சம்மதித்தேன்" எனக் கூறினள்.

பிறகு கோவலன், "தாய் தந்தை முதலான உற வினரையும், வேலையாட்களையும் துறந்த பொன்னே! கொடியே! புனை பூங்கோதாய்! நாணின் பாவாய்! கற்பின் கொழுந்தே! நாணமும் மடனும், நல்லோரைத் துதித்தலும், சிறந்த கற்பும், ஆகிய இந்த நான்கையுமே துணையாகக் கொண்டு யான் சென்று வரும் வரையு தனித்து இருப்பாயாக. யான் உன் காற்சிலம்பு ஒ

றைக் கொண்டு காட்டி விற்று வருகின்றேன்" எனக் கூறி அவளை மார்புறத் தழுவினன். அவளை விட்டுப் பிரிதற்குக் கண் கலங்கினன். அதனைக் கண்ணகி கண்டால் வருந்துவாள் என நினைத்து, கண்ணில் ததும்பிய நீரைத் துடைத்துக்கொண்டு சிலம்பைப் பெற்று வீட்டை விட்டு நீங்கினன்.

## 6. கோவலன் கொலை

அவ்வாறு நீங்கிச் சென்று கொண்டிருக்கையில் ஓர் எருது எதிராக அவனைப் பாய வந்தது. கோவலன் அதனைத் தீய சகுனம் என்று அறியாமல் பல தெருக்களையும் கடந்து கடைத் தெரு வழியாய்ப் போய்க் கொண்டிருந்தான். அச் சமயத்தில் தட்டார்கள் நூற்றுவர் தன்னைச் சூழ்ந்துவர, அரசனால் கொடுக்கப் பெற்ற சால்வையை அணிந்து செல்லும் தட்டான் ஒருவனைக் கண்டான். கண்டு, 'இவன் பாண்டியனால் மதிக்கப் பெற்று, பட்டமும் பரிசும் பெற்ற தலைமைத் தட்டான் போலும்' என்று நினைத்து அவன் பக்கம் சென்று, " அரசன் தேவி காலில் அணியத்தக்க சிலம்பு ஒன்று என்னிடம் இருக்கிறது ; நீ அதனை விலை மதிக்கக் கூடுமோ" எனக் கேட்டான். இயமன் போலும் தோற்றத்தை யுடைய அத் தட்டான், " அடியேன் ஆபரணங்களை விலை மதிக்க அறியேன் என்றாலும், அரசர்க்கு வேண்டிய ஆபரணங்களைச் செய்யும் வலிமை யுடையேன்" எனத் தாழ்ந்து கூறினன். கோவலன் தான் கொண்டு வந்திருந்த மூட்டையிலிருந்த சிலம்பை எடுத்து அவன் கையிற் கொடுத்தான். பொன்னாலாகிய சிலம்பின் வேலைத் திறத்தைக் கண்ட அத் தட்டான் மற்றும் அதனிடத்து வரிசையாக அழுத்தப் பெற்ற

நவரத்தினங்களின் அமைப்பைப் பார்த்த வண்ண மாகவே இருந்தான். அவன் மனமோ வஞ்சகத்தில் ஆழ்ந்தது.

பின்பு அத் தட்டான் கோவலனைப் பார்த்து, "பெரியீர்! இச் சிலம்பு எங்கள் அரசன் பெருந்தேவி அணிதற்கு ஏற்றது. அவரை அல்லாமல் இதனைப் பொருள் கொடுத்து வாங்குவார் ஈங்கில்லை. ஆதலின் யான் சென்று அரசனுக்குச் சொல்லித் திரும்பி வருகின் றேன். அதுவரையும் அடியேன் வீட்டிற்குப் பக்கத்தி லுள்ள இவ்விடத்தில் இரும்" எனக் கூறிச் சென்றான். கோவலனும் தட்டான் வரவை எதிர்பார்த்துக்கொண்டு அவன் காட்டிய இடத்தில் இருந்தான். தட்டான் மனத்திற்குள், "நமக்குச் சிறிது நல்ல காலம் இருக் கிறது. நாம் திருடிய கோப்பெருந் தேவியின் சிலம்பு நம்மிடத்திலுள்ளதென்று பிறர் அறிவதற்குள் இதை அரசனிடம் காட்டி, இவ் வணிகன் மீது களவுக் குற்றம் சுமத்துவேன். நாம் களவினின்றும் தப்புதற்கு இது தான் தக்க சமயம்" என்த் தீர்மானித்துக் குதூகலத் துடன், அரசன் மாளிகையை அடைந்தான்.

இஃது இவ்வாறிருக்க, மதுரைக் காவலனாகிய பாண்டியன் நெடுஞ் செழியன் தன் சபையினிடத்து ஆடிய நாடகக் கணிகையரது ஆடல், பாடல், அழகு முதலியவற்றைக் கண்டும், கேட்டும், மயங்கினான். அதனை அறிந்த அவனது மனைவி, கோப்பெருந்தேவி யானவள் தன்னைக் கவனிக்க வில்லையென்று ஊடல் கொண்டு தன் அந்தப்புரத்தை அடைந்தாள். மன்னன் அவளிடம் மிகுந்த அன்புடையனாதலின், அவள் ஊட லைத் தணிக்கக் கருதி, தோழியர் சூழ்ந்து வர அவள் மாளிகையை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

தட்டான் அவ்வாறு சென்று கொண்டிருந்த மன்னனை அடைந்து முழந்தாளிட்டுப் பணிந்து, "மன்னர் மன்ன! கன்னமிடாமலும், ஆயுதங்களில்லாமலும் மந்திர உதவியால் அரண்மனைக் காவலர்களை மயக்கி தேவியின் சிலம்பைக் களவாடிச் சென்ற கள்வன் நகர்க் காவலர் கண்ணிற்கும் தென்படாமல் மறைந்து வந்து அடியேன் வீட்டிற்குச் சமீபத்திலிருக்கின்றான்" என விண்ணப்பித்தான். மன்னனுக்கு, சென்ற பிறப்பிற் செய்த ஊழ்வினை தன் பலனைக் கொடுத்தற்கு வந்து சேர்ந்ததால் அவன் சிறிதும் ஆராயாமல் காவலர்களை அழைத்து, "நீங்கள் விரைந்து சென்று அச்சம் இல்லாமல் அரண்மனை புகுந்து சிலம்பைக் கவர்ந்த கள்வன், இத் தட்டான் கூறிய இடத்தில் இருப்பானாயின் அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டு வாருங்கள்" எனக் கட்டளையிட்டான்.

உடனே தட்டான் தன் எண்ணம் நிறைவேறியதற்கு மகிழ்ந்து காவலாளர்களை அழைத்துச் சென்று, ஊழ்வினையால் தள்ளப்பட்டு வந்திருக்கும் கோவலனை அடைந்தான். அடைந்தவன் கோவலனை நோக்கி, "பெரியீர்! இதோ வந்து நிற்பவர் மன்னனால் சிலம்பை விலை மதித்தற்கு அனுப்பப்பட்டவராவர். அதனை அவர்கட்குக் காட்டுவீராக" என்றான். கோவலனும் சிலம்பை எடுத்துத் தட்டான் கையிற் கொடுத்தான். அத்தட்டான் கோவலனுக்கு அப்பால் சிறிது தூரத்தில் அவர்களை அழைத்துக்கொண்டு சென்று, அரசியின் சிலம்பிற்கும், அதற்கும் உள்ள ஒற்றுமையை எடுத்துக்கூறி, "இவனே கள்வன்; இதுவே பெருந்தேவியின் காற்சிலம்பு" எனக் கூறிச் சாதித்தான்.

காவல் வீரருள் அறிவுடைய சிலர் "என்ன ஐயா!

இவருடைய தோற்றமும், பேசும் பேச்சும், அவரது களங்கமற்ற சிந்தையைக் காட்டுகின்றனவே. அதனால் இவர் கள்வர் என்று சொல்லப்படுவாரும் அல்லர். கொல்லப் படுவாரும் அல்லர்" என மறுத்துக் கூறினர்.

வன்னெஞ்சத் தட்டான் அவரை நோக்கி, "காவல் வீரர்காள்! திருடர்களின் சாமர்த்தியத்தை நீங்கள் அறிய மாட்டீர்கள். அவர்கள் மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்னும் இவ் வெட்டையும் தங்கட்குக் கருவியாகக் கொண்டு பிறர் பொருளை அபகரிப்பர். அதன்படி இக் கள்வனது மருந்தினால் மயக்கம் அடைந்து கொல்லாது விடில் அரசன் ஆணை உம்மைக் கொல்லும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இன்னும் அக் கள்வருடைய தொழில் முறையைச் சிறிது கூறுகின்றேன்; கேளுங்கள். அவர்கள் களவு நூலில் கற்ற மந்திரத்தை ஓதுவார்களானால் நமது கண்ணுக்குத் தெரியமாட்டார். தமது தெய்வத்தை மனதில் நினைப்பார்களானால், இது உம்முடைய பொருள்தான் என நமக்குக் காட்டியே எடுத்துச் செல்வர். கைம்மருந்தால் நம்மை மயக்குவிப்பாரானால் நாம் இருந்த இடத்தை விட்டு அப்பாற் செல்லவும் கூடுமோ? இன்னும் அவர்கள் நல்ல சகுனம் வாய்த்தால் அல்லாமற் பெறுதற்கு அரிய பொருள் வலிய வந்து கிடைப்பினும் அதனைத் தீண்டார். தந்திரக் களவைக் காட்டுக என்றால் தேவலோகத்திற்குச் சென்று, இந்திரன் மார்பில் அணிந்திருக்கும் இரத்தின மாலையைக் கொண்டு வருவர். இந்தப் பொருளைக் கொள்ளுதற்கு இவ்விடமே தக்கதென நினைப்பார்களாயின், அவ்விடத்தில் அவரைக் காண்பது யாரால் முடியும். காலம் பார்த்தும், கருவியைக்

கைக் கொண்டும், பொருள்களை அபகரிக்கக் கருதுவார் களானால் அவர்கள் களவை ஆயிரம் கண்ணுடையவர் களாலும் காண முடியாது. இரவும் பகலும், அவர் களுக்கு ஒன்றே. அவர்களது சாமர்த்தியத்தை எடுத் துக் கூற ஆதிசேடனாலும் முடியாது. நிற்க, முன்பு நம் அரண்மனையில் நடந்த களவொன்றைக் கூறுகின் றேன்; கேளுங்கள். கள்வன் ஒருவன் நமது மன்ன னிடத்தில் தூதன் உருக் கொண்டுவந்து பகற்பொழு தில் இருந்தான். அவன், நமது இளங்கோ பள்ளியறை யினுட் தூங்குகையில் பெண் உருக் கொண்டு போய் அவர் கழுத்திலிருந்த முத்தாரத்தைக் கழற்றினான். அதை அறிந்த நம் இளங்கோ வாளைக் கையிலெடுத் தார். கள்வனோ அதைத் தெரிந்து அவ்வாளின் உறை யை மெல்ல எடுத்து அவர் குத்துந்தோறும் உறையை வாளிற்குக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

"இளங்கோ, இருளா இருந்தமையால் அவன் செய்ததை முன் அறியாமல் பின் கவனித்து அவனுடன் மல்யுத்தம் தொடங்கினார். அக் கள்வனோ, தந்திரமாக, தூண் ஒன்றைத் தானாக அவருக்குக் காட்டி மறைந் தனன். அவனை இதுவரையும் கண்டு பிடித்தவர் ஒரு வரும் இல்லை. இதனை நீங்களும் அறிந்திருக்கலாம்" எனக் கூறி முடித்தான்.

தட்டான் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த அவ்வீரருள் இளையவன் ஒருவன் மற்றைய வீரரை நோக்கி, "நண்பர்காள், என்முன் நடந்ததைச் சொல்லு கிறேன் கேளுங்கள். ஒரு கள்வன் ஒரு நாளிரவில் ஒரு வீட்டினுள் நுழைந்து பொருளைத் திருடிக் கொண்டு சென்றான். அச் சமயம் காவல் செய்து கொண்டிருந்த யான் வாளைக் கையிற்கொண்டு அவனை நெருங்கினேன்.

அவனே என் கைவாளையும் பறித்துக் கொண்டு பறந்து விட்டான். நீல ஆடை தரித்திருந்தான். ஆதலால் அவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இருளொடு இருளாய்ச் சென்றனன். ஆதலின் இக்கள்வருடைய தன்மையை அறிய முடியாது. இப்பொழுது இவனை விட்டுவிட்டால் அரசனது ஆணை, எப்பாடு படுத்துமோ அறியேன்" என்றான்.

அவன் அவ்வாறு கூறவே, அவ்வீரருள் அறிவில்லாதவனும், கட்குடியனும், கொலைப் பழிக்கு அஞ்சாதவனுமாகிய ஒரு மூடன் கோவலனைத் தன் கைவாளால் வெட்டினான். அந்தோ! பெற்றோர்க்கு அவன் ஒரே திருக்குமாரன். பல அறங்களைச் செய்தவன். கருணைக்கு இருப்பிடமானவன். முன்னைப் பிறப்பில் செய்த தீவினையால், இழுத்துக் கொண்டு வரப்பட்டுக் கொலையுண்டு உயிர் துறந்தான்.

மறுநாட் காலையில் மன்னவன் மாளிகையில் மங்கள வாத்தியம் முழங்கிற்று; மாதரி அதைக் கேட்டு எழுந்து, கால், கை, முகம் சுத்தி, செய்து கொண்டு, இன்று அரண்மனைக்கு நெய் அளக்க வேண்டிய நாள் என்று தன் மனதில் கூறிக்கொண்டு மத்தும், கயிறும் எடுத்துக்கொண்டு தயிர்த் தாழியின் பக்கம் போய்ப் பார்த்தாள். பார்த்தவள் தன் மகள் ஐயையைக் கூப்பிட்டு "மகளே, தாழியில் பிரையிட்ட பால் தோய்ந்திலது. நம் கொல்லையிலுள்ள காளைகளின் கண்களிலிருந்து நீர் ததும்புகின்றன. வெண்ணெயும் உருகவில்லை. பசுக்கள் அச்சத்தோடு கதறுகின்றன. இவற்றால் நமக்கு ஏதோ ஒரு தீங்கு வரப்போகிறதென்று தோன்றுகிறது. எனினும் நாம் எதற்கும் அஞ்சவேண்டாம். முன்பு கண்ணபிரான் பின்னைப் பிராட்டியா

ரோடும், பலராமரோடும் ஆடின குரவைக் கூத்தை இப்பொழுது கண்ணகியார் கண்களிக்க ஆடிக் கண்ணனைத் துதித்து நமது துயரைப் போக்கிக் கொள்வோம்" என்றனள். பின்பு ஆய்ச்சியர்கள் பலர் கூடினார்கள். மாதரி அவர்களைப் பார்த்து. "பெண்காள், பின்னைப் பிராட்டியின் தோழியரான ஏழு மாதர்கள் ஏழு விதமான காளைகளை வளர்த்தார்கள். அக்காளைகளை அடக்கித் தழுவக் கூடியவனே பின்னைப் பிராட்டிக்கு நாயகன் என அவர்கள் கருதினார்கள்" என்று விரித்துக் கூறினாள். பின் ஆயமகளிர் எழுவரைத் தெரிந்தெடுத்து, "அக்காலத்தில் அவர்கள் ஆடியது போல நாமும் ஆடுவோம்" எனக் கை கோத்துக் கொண்டு, குரவைக் கூத்தாடினாள். அதில் ஆய்ச்சியர்கள் "கடல் கடந்த மாயவன் இங்கு வருவானேயானால், அவனது இனிய குழலோசையை நாம் கேட்போமல்லவா" எனப் பலவாறு புகழ்ந்தாடினர். பிறகு "கம்சனுடைய வஞ்சகத்தினின்று நீங்கியவனும், பாண்டவர்களுக்காகத் துரியோதனனிடத்துத் தூதாகச் சென்றவனும் ஆகிய திருமாலை வாழ்த்தாத நாவானது நாவாகாது" என்று வாழ்த்தியும், ஆடிப் பாடிக் கண்ணனைத் துதித்து, "ஏ கருணை நிதி, பசுக்கள் துயர் நீங்கவும், எம் துயர்கெடவும், மன்னவன் மாற்றாரை வென்று வாழவும். அருள்புரிவீராக" என வேண்டிக் கூத்தை நிறுத்தினர். முடிந்தவுடன் திருமாலைப் பூஜை செய்வதற்காக, நீராடும் பொருட்டு மாதரி வைகைக்குச் சென்றாள். அச்சமயத்தில் நகரினுள் கோவலன் கொலையுண்டதை அறிந்து வந்த ஆயர் முதுமகள் ஒருத்தி வேகமாய்ச் சென்று, கண்ணகிக்கு அதனைக் கூறாமல் பக்கத்திலுள்ள பெண்களிடம் கூறிமனம்

கலங்கினாள். கண்ணகி, அவள் குறிப்பை அறிந்து, ஐயையைப் பார்த்து, "நங்காய்! என் உடல் நடுங்குகிறது. நாக்குழறுகிறது. என் கணவர் இன்னும் வந்தார் இல்லையே, என்ன மாயமோ? அறியாதவளாயிருக்கிறேன். இவர்கள் என்னைப் பார்த்த வண்ணமாய் வருத்தம் அடைகின்றனர். இவர்கள் கூறியது யாது? மறையாது உள்ளத்தைக் கூறுவாயாக" என வேண்டினாள். உடனே ஐயை, "அம்மையே! யாது கூறுவேன். நகரினுட் சென்ற நம் தலைவரை அரண்மனைச் சிலம்பு திருடிய கள்வன் என்று குற்றம் சாட்டி, கொலை செய்துவிட்டனராம். என் செய்வோம். என் செய்வோம்" என்று பெருங் குரலோடு அழுதாள்.

அச்சொற்களைக் கேட்ட மாத்திரத்தில் கண்ணகி மெய்சுருண்டாள்; கொதித்தாள்; பதைத்தாள்; குலைவுற்றாள்; மின்போல் துடித்தாள்; சோர்ந்தாள்; சுழன்றாள்; துள்ளினாள்: துயரை உயிரோடும் குழைத்தாள்; குதித்தாள்; விழுந்தாள்; புரண்டாள்; உடல் முழுதும் வியர்த்தாள்; உயிர்த்தாள்; வெதும்பினாள்; எழுந்தாள்; மலர்க்கரத்தை நெறித்தாள்; சிரித்தாள்; ஏங்கினாள்; அழுதாள்; தொழுதாள்; 'கொழுந! ஓ' என்றாள்.

இவ்வாறு துயரடைந்த கண்ணகி பக்கத்திலுள்ள பெண்களைப் பார்த்து, "நீங்கள் எல்லோரும் கேளுங்கள்" எனக் கூறி, சூரியனைப் பார்த்து, "வெய்யோனே! நீ அறியாத பொருள் ஒன்றும் இவ்வுலகில் இல்லை. உண்மையில் என் காதலர் கள்வரோ?" எனக் கேட்டாள். அதற்கு மறுமொழியாக ஆகாயத்திலிருந்து, "நங்காய், உனது காவலன் கள்வன் அல்லன். அவனைக் கள்வன் என்று கொன்ற இப்பட்டினம் அக்கினியால்

அழியும்" என்று ஒரு குரல் கேட்டது. கண்ணகி அதைக் கேட்டு, தன்னிடத்திலுள்ள மற்றொரு சிலம்பை எடுத்துக் கொண்டு, நகரினுட் சென்றாள். சென்றவள் அந்நகரிலுள்ள கற்புடைய மங்கையர்களைப் பார்த்து, "மகளிர்காள்! என் காதலர் கொண்டு வந்த சிலம்பிற்கு ஒப்பாகவுள்ளது இது. காதலர் அதனை விற்கக் கொண்டு வந்தார். அதனை அபகரிக்கும் பொருட்டு அவரைக் கள்வன் என்று கொன்று விட்டனரே. ஐயோ! இதுதானா செங்கோல் முறைமை. நன்று. நன்று. உலகிற் பிறரடையாத துன்பத்தை அன்றோ யான் அடைந்தேன், பெண்காள்! என் காதலரைக் கண்டு ஒரு வார்த்தை யாகிலும் அவரிடம் யான் கேளேனாயின் என்னைக் கள்வன் மனைவி என்று அழையுங்கள்" எனக் கூறிக்கொண்டு அழுதாள். அவ்வாறு அழுகின்ற கண்ணகியை நகர மாந்தர் கண்டனர். "ஆ! இது என்ன அநியாயம். மன்னவன் இப்பெண்ணிற்கு இறக்கும் வரையும், துன்பத்தை உண்டுபண்ணி விட்டானே. அவனது வளையாத செங்கோலும் இவள் காரணத்தால் வளைந்து விட்டதே. அடைந்தார்க்கு இன்பம் அளிக்கும் அவனது குளிர்ந்த குடையும் வெப்பம் தருவதாயிற்றே. ஐயோ! சிலம்பை ஏந்திக்கொண்டு இப்பெண்மணி துயர் அடைகின்றாள். பலவாறு கதறுகின்றாள். புலம்புகின்றாள். இவளால் இனி யாது ஏற்படுமோ?" என இரங்கிக் கூறினர். பின்னர் "இது என்ன நீதி? ஒரு சிலம்பின் பொருட்டா மன்னன் மதி இவ்வாறு மாறிற்று" எனப் பழிதூற்றிக் கொண்டு அந்நகர மக்கள் பேசுவாராயினர்.

பின்பு அம்மக்கள் மன்னவனால் வெட்டுண்டு கிடந்த கோவலனைக் கண்ணகிக்குக் காட்டினர். கண்

ணகி, மண்ணிற் கிடக்கும் காதலனைக் கண்டாள். துடி துடித்து வீழ்ந்தாள். எங்குப் பார்த்தாலும் இரத்த மயமாயிருக்கின்ற காதலனைக் கட்டித் தழுவினுள். பின்னர் எழுந்து மயிலென வீழ்ந்தாள்; உருண்டாள்: புரண்டாள். "கண்ணிற்கு இன்பம் அளிக்கும் கட்டழகா! கண்ணகி வருந்தாதே. இதோ விரைவில் சென்று திரும்புவேன் என்று என்னைக் கட்டித் தழுவி இனிய சொல் கூறிய சீராளா! உமது இக் கோலத்தைக் காணவோ ஏழையேன் பெண்ணுகப் பிறந்தேன்? உம்மைக் கள்வன் என்று கொன்ற இக்கொடிய பாண்டியன் நாட்டில் கற்புடைப் பெண்டிரும் இருக்கின்ருரோ? அறிவிற் சிறந்த பெரியோர்களும் இருக்கின்ருர்களோ? தெய்வமும் இருக்கின்றதோ?" எனப் பலவாறு புலம்பி அழுது கோவலனைக் கட்டிக்கொண்டு, "தலைவ! திருவாய் திறந்து அடியாளுக்கு ஏதேனும் சில வார்த்தை கூறுவீராக" என வேண்டினள்.

அப்பொழுது கோவலன் உயிர் பெற்றெழுந்து, "மாதே! மதிபோலும் நின்முகம் வாடியதே" என்று அவள் கண்ணீரைத் துடைத்து, "நீ இவ்விடத்து இருப்பாயாக" எனக் கூறி விண்ணுலகம் அடைந்தனன். கண்ணகி அதைக் கேட்டு, "இனி இவ்விடத்துச் சற்றும் இரேன். கணவனைத் தேடிச் சென்று அடைதல் எனக்கு எளிய காரியமே என்ருலும் எனக்கு உள்ள கோபத்தைத் தணித்துக் கொள்ளுதற்குக் கொடுங்கோற் கொற்றவன் ஆகிய பாண்டியனிடம் சென்று எதன் பொருட்டு என் கணவனைக் கொன்ருய் என்பேன். அவன் பிழையை அவனுக்கு உணர்த்தி, அவன் பட்டினத்தை அக்கினிக்கு இரை யாக்குவேன்" எனக்

கூறிக்கொண்டு நெடுஞ்செழியன் அரண்மனை வாயிலை அடைந்தாள்.

## 7. கண்ணகி வழக்குரைத்தல்

இஃது இவ்வாறாக, பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவி தன் தோழியை நோக்கி, "ஏடி! யான் நேற்றுக் கண்ட கனவை என்னென்று கூறுவேன். நமது செங்கோலும், வெண் குடையும் சாயக் கண்டேன். ஆராய்ச்சி மணியின் ஒலி அதிரக் கேட்டேன். இந்திரவில் இரவில் இடக் கண்டேன். பகலில் நக்ஷத்திரங்கள் உதிரக் கண்டேன். இவற்றால் நமக்கு யாது வருமோ அறியேன். இதனை அரசனுக்கு உணர்த்துவோம் வருவாயாக" என்றனள். அப்பொழுது பணிப்பெண்கள் மங்களப் பொருள்களை ஏந்திக் கொண்டு 'பெருந்தேவி வாழ்க' எனக் கூறி அவளைச் சூழ்ந்துசென்றனர். இவ்வாறு பெருந்தேவி மன்னனை அடைந்து, தான் கண்ட கனவுகளை எடுத்துக் கூறிக்கொண்டிருந்தாள்.

அச்சமயம் கண்ணகி அரண்மனை வாயிலை அடைந்து வாயிற்காப்போனைப் பார்த்து,

* "வாயிலோயே! வாயிலோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப்பாயே."

* "உணர்ச்சியற்ற பஞ்சேந்திரியங்களு டையவனும், முறை தப்பியவனும் ஆகிய அரசனுக்கு வாயில் காப்போனே! நீ சென்று உன் அரசனிடம், சிலம்பு ஒன்றைக் கையிலுடையவளும், கணவனை யிழந்தவளுமாகிய ஒருத்தி தலைவாசலில் வந்து நிற்கின்றாள்; என்று உரைப்பாயாக."

என்று கோபத்தோடு கூறினாள். அதனைக் கேட்ட வாயில் காப்போன், விரைந்து சென்று, அரசனை அடைந்து பணிந்து, "அரசர் பெரும! நம் அரண்மனை வாயிலில் ஓர் பெண் வந்திருக்கின்றாள். அவளைக் கண்டால் துர்க்கா தேவியோ; காளி தேவதையோ; துன்பத்தைச் செய்யும் பிடாரியோ என்று சந்தேகம் ஏற்படுகிறது. அவள் பொன் சிலம்பேந்திய கையினளாயும், கணவனையிழந்த கன்னிகையாயும், தோன்றுகின்றாள்" எனக் கூறினான். மன்னன் அதனைக் கேட்டு, "காவல! அவளைச் சீக்கிரமாக இங்கு அனுப்புக" என்றான். காவலனும் விரைந்து போய் கண்ணகியை அரசனிடம் அனுப்பினன். கண்ணகியும் வேகமாய் அரசன் எதிரில் போய் நின்றாள். அவள் கோலத்தைக் கண்ட மன்னன், "பெண்ணே! கண்களில் நீரை வடித்துக் கொண்டு இங்கு வந்த காரணம் என்ன? நீ யாவள்?" எனக் கேட்டான்.

அவ்வாறு கேட்ட அளவிலே பெருஞ் சினத்தோடு, "அறிவில்லாத மன்னனே! சொல்லுகின்றேன் கேள். தன்னை அடைக்கலம் அடைந்த புருவின் பொருட்டுத் தன் உடலைச் சதை சதையாக அரிந்துகொடுத்த கருணை மன்னனும், கன்று இழந்த பசுவின் துயர் கண்டு தனது ஒரே புத்திரன் மீது தேர்க்காலைச் செலுத்திய நீதி மன்னனும், அரசு செலுத்திய சோழ நாட்டின்கண்ணுள்ள புகார் நகரில் வாழ்வேன். குற்றமற்ற சிறப்பையுடைய மாசாத்துவான் என்னும் பெருங்குடி வணிகனது மருகி ஆவேன். உன்னுடைய கொடுங்கோலால், என் சிலம்பை விற்கும் பொருட்டு வந்து கொலையுண்டு இறந்த கோவலன் மனைவி ஆவேன். என்னைக் கண்ணகி என்று அழைப்பார்கள்" என்று கூறினள். பாண்டி

யன் அதைக் கேட்டு, "பொற்றொடி, நீ கூறியவை சரி தான். எனினும் எனது ஆட்சி முறையைக் கொடுங் கோல் எனக் கூறி, பெண்கள் அறிவு அறியாமையை யுடையது என்று பெரியோர் கூறும் வாக்கை நிலை நாட்டினாய். இதுவா கொடுங்கோல்? கொடியவர்களை அரசன் தண்டித்தல் பயிருக்குக் களை எடுப்பது போல் ஆகும் என்பதை நீ அறியாயோ?" என்றான். "வேந்தே! நீ கூறுவது மிக அழகு! யான் அவற்றை அறிவேன். 'ஒருவனிடத்திலுள்ள குணத்தையும், குற்றத்தையும் நன்கு ஆராய்ந்து அவனிடத்தில் அதிகமாய் இருப்பது கொண்டு செய்யத் தக்கதை அறிந்து அல்லவா செய்ய வேண்டும்' என நீதி நூல் கூறுகின்றது. நீ இவ்வாறு செய்த செயலை எந்த அரசர், எந்த அமைச்சர், எந்த அறிவாளிகள், சிறந்ததென்று கூறுவார்கள்? அறிவற்ற அரசனே! என் காதலரிடம் கவர்ந்து நின்னிடம் சேர்க் கப்பெற்ற சிலம்பினுள் இருக்கும் அரி, மாணிக்கம் ஆகும். உனது மனைவியின் சிலம்பிலுள்ளவை யாவை? இரண்டையும் கொண்டு வந்து உடைத்துப் பார். பின்பு அதிலிருந்து உனது ஆட்சி முறையை அறிந்துகொள்" என்றாள்.

"பெண்ணே! நீ இப்பொழுது கூறியது சரிதான். எனது சிலம்பிலிருக்கும் அரி முத்தாகும். இதோ உன் கணவனிடமிருந்து கொண்டு வரப்பட்ட சிலம்பு இருக் கிறது" என்று அதனை எடுத்து அவள் முன் வைத்தான். கண்ணகி அதனை எடுத்துக் கை வலிமையோடு நிலத் தில் வீசினாள். அச் சிலம்பு படீரென்று உடைந்து மாணிக்க அரிகளைச் சிதறிற்று. கண்டான் காவலன், "ஆஹா! கெட்டு விட்டேன். வஞ்சகத் தட்டான்

சொல்லை நம்பி அல்லவோ, நீதி தவறினேன். யானே அரசன்; யானே கள்வன்; பாண்டியர் பழங்குடிக்குப் பழி தேடி விட்டேன். இப் பாதகம் புரிந்த யான் உயிரோடிருத்தல் கூடாது. என் உயிர் இத்துடன் கெடுக'' எனப் பலவாறு புலம்பிக்கொண்டு சிங்காதனத்தின் மீதே உயிர் துறந்தான். கோப்பெருந்தேவி அதைக் கண்டு கண்ணீர் வடித்து, "பெற்றோரையும், உறவினரையும், பிறரையும் இழந்துவிட்டால் அவர் முறை கூறிப் பிறரை அழைக்கலாம். கணவனை யிழந்தவள் அவ்வாறு அழைத்தல் கூடுமோ? —கூடாதல்லவா'' என்று கூறி அழுதுகொண்டு, கண்ணகியின் அடிகளில் வீழ்ந்தாள்.

அவ்வாறு அழுகின்ற கோப்பெருந்தேவியைக் கண்ணகி நோக்கி, "நங்காய்! அறிவில்லாத யான் ஒன்றும் அறியேன் என்றாலும்,

* பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தானே வரும்

என்று கூறிய திருவள்ளுவர் திருமொழி பொய் படுமோ? என் உடல் நடுங்குகின்றது. நா குழறுகின்றது. கோபம் அதிகரிக்கின்றது. யான் உத்தமக் கற்புடைய பெண்டிர் வாழ்ந்த நாட்டில் பிறந்தவள். அக்கற்புடைய மங்கையருள் சிலரைப் பற்றிக் கூறுகின்றேன் கேள். தன் மாற்றாளும், உலகோரும் காணும்படி சான்றாகிய வன்னி மரமும், லிங்கமும், கிணறும், மதுரையில் தோற்றுவித்துத் தனது கற்பின் பெருமையைக் காட்டிய ஒருத்தியும்; காவிரியாற்றின் கரையில் கூடி விளையாடிக்

* ஒருவன் பிறருக்குத் துன்பத்தை முன்னாளில் உண்டு பண்ணுவானேயானால், அவனுக்குப் பின்னாளில் பெரிய துன்பம் தானே வந்து சேரும்.

கொண்டிருந்த சிறுமியரில் ஒருத்தி, தன் ஆயத்தார் அங்குச் செய்து விளையாடிய பாவையைச் சுட்டி, 'இப்பாவையே நின் கணவன்' என்று மற்றொருத்தியிடம் கூறினாள். அவளும் அதைப் பொய்யென்று கருதாது மெய்யென்று கொண்டு அதனை அலைகொண்டு செல்லுமே என்ற அச்சத்தால் பிரிதற்குச் சகியாதவளாய், ஆயத்தார் வீடு நோக்கிச் செல்லவும் தான் செல்லாது காத்து நின்று, பெரும் புகழ் அடைந்த பெருங் கற்பினள் ஒருத்தியும்; தன் கணவனாகிய சேரன் ஆட்டனத்தியை, களார் என்னும் ஊரில் வெள்ளம் அடித்துக்கொண்டு போக, தான் அதன் பின் சென்று 'கணவனே! கணவனே' என்று வருந்திக் கொண்டிருக்கையில், தெய்வம் அவள் கற்பை மதித்து, அவனைக் கொண்டுவந்து அவளிடம் சேர்க்க, கணவனைப்பெற்று, ஆனந்தம் அடைந்தவளும்; சோழன் கரிகாலன் மகளுமாகிய ஆதிமந்தி என்பவள் ஒருத்தியும்; உத்தமக் கற்புடைய பெண்டிர்க்கு, பிறர் தன்னை நினைக்கப் பெறுதலும் குற்றமாகும் என்னும் கருத்துடையவளாய்ப் பொருள் சேகரிக்கச் சென்ற கணவன் மீண்டும் வரும்வரையும், கல் உருவாய்க் கிடந்து கணவன் திரும்பிய அளவில் கல் உரு நீங்கிப் பண்டைய நல் உருப்பெற்றுச் சிறந்தாள் ஒருத்தியும்; சிறுமியர் இருவர் சிற்றிலாடும் பருவத்தில் ஒருத்தி மற்றொருத்தியைப் பார்த்து, 'நாம் கணவனை அடைந்து இன்பம் அடையும் காலத்தில் பெண் மக்கள் எனக்கும், ஆண் மகன் உனக்கும் பிறத்தல் கூடுமாயின், அவ்விருவரையும் மணம் முடித்தற்கு இசைவாயோ' என்றாள். மற்றவளும் அதற்கு இசைந்தாள். பின்பு சிலகாலம் கழித்து அவ்விரு மகளிரும், மணம் முடித்து வாழ்கின்ற காலத்தில் அங்ஙனமே மக்களைப் பெற்றனர். அம் மக்களுள்

ஆண் மகவுக்கு ஒரு கால் முடமாக இருந்தது. பின்பு அக்குழந்தைகள் வளர்ந்து மணப்பருவம் எய்தியநாளில் பெண்ணைப் பெற்றவள் தன் கணவனைப் பார்த்து முன் விளையாடுங் காலத்தில் நடந்ததனைக் கூறி 'அறியாப் பருவத்தில் அறியாது கூறினேன். இப்பொழுது அதற்கு என்ன செய்யலாம்?' என்று கேட்டாள். அதைக் கேட்டுக் கொண்டிருந்த அவளது பெண், தாயுரைத்த சொல் பொய் படாதிருக்கும் பொருட்டும், தாய் முன்னே கொடுக்கச் சம்மதித்ததால், அவன் தனக்கு நாயகன் என்று மதித்தும், புதிய சேலையைத் தரித்து, குழலைக் கட்டித் தலையை வணங்கி நின்றாள் ஒருத்தியும் ஆகிய பெண்கள் பிறந்த நாட்டில் பிறந்தேன். யானும் இப் பெண்களோடு சமமாக எண்ணப்படும் பெருமையுடையவள் என்றால், இம்மன்னனை அழித்ததோடு நிற்காமல், இம் மதுரையையும் அழிப்பேன். நல்ல வழியில் நடந்த எனது வல்லமையைப் பார்'' என்று வீரமொழி கூறி, அவ்விடத்திலேயே தன் கையிலிருந்த சிலம்பை எறிந்துவிட்டு, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டாள். கோப் பெருந்தேவி அவற்றைக் கேட்டு, அடியற்ற மரம்போல் கீழே விழுந்து உயிர் துறந்தாள்.

கோபங் கொண்ட கண்ணகி பின்பும் அது தணியாதவளாய், வீதிகள் தோறும் சுற்றிவந்து, ''பெண்காள்! மைந்தர்காள்!! வானவர்காள்!!! நீங்கள் எல்லோரும் கேளுங்கள். குற்றமில்லாத என் கணவனைக் கொன்ற இந் நகரின் மீது யான் அடங்காத கோபங் கொண்டிருக்கிறேன்'' என்று கூறி, வலக்கையால் இடமார்பைத் திருகி எறிந்தாள். எறிந்தவுடனே, நீலமேனியும், செஞ்சடையும் வெண்பல்லுமுடைய அக்கினிக்

கடவுள் தோன்றினன். தோன்றிக் கண்ணகியைப் பார்த்து "பெண்ணே! உனக்குப் பிழைசெய்தகாலத்தில் 'இப்பாண்டியன் நாட்டை அழிப்பாய்' என்று முன்பு யான் ஓர் கட்டளையைப் பெற்றிருக்கிறேன். இந்நகரில் உனக்குப் பிழை செய்தார் யாவர்?" எனக் கேட்டான். அதற்குக் கண்ணகி, "பார்ப்பாரும், அறவோரும், பசுக் கூட்டங்களும், கற்புடைய மங்கையரும், முதிர்ந் தோரும், குழந்தைகளும் ஆகிய இவர்களை விட்டு, கொடியவர் பக்கமே சென்று சேர்க" எனக் கட்டளை யிட்டாள். உடனே மதுரை பற்றி எரியத் தொடங் கிற்று.

## 8. மதுரை தீக்கிரையாதல்

அச்சமயம், நகர்க்காவல் தெய்வங்கள் எல்லாம் நகரை விட்டு நீங்கின. அமைச்சர், புரோகிதர் முதலி யோரெல்லாம் சித்திரம் போல் உயிரிழந்து நின்றனர். யானைப் பாகரும், குதிரை வீரரும், வாள் வீரரும், பிறரும் மதிமயங்கி ஓடியாடி நின்றனர். கடை வீதியும் கொடித்தேர் வீதியும், நால்வகைச் சாதியார்களும் வசிக்கும் வீதிகளும் ஆகிய விடங்களில் உள்ளவர்கள் எல்லாம் செய்வதறியாது தியங்கினர்.

பசுக் கூட்டங்களெல்லாம் ஆயர்களிருக்குமிடத்தை யண்டி உயிர் பிழைத்தன. யானைகள் குதிரைகள் முதலிய உயிர்ப் பிராணிகள் எல்லாம் காற்றிலும் வேகமாய் ஓடி உயிர்தப்பித்தன. ஆடவர்களும், மகளிர் களும் தத்தம் குழந்தைகளை யெடுத்துக் கொண்டு நகரை விட்டு நீங்கினர். கற்புடைய பெண்களில் சிலர் "கணவனை யிழந்த இக்காரிகை சிலம்பைக் கையிற் கொண்டு, அரசனை வென்று நகரை அக்கினிக்கு இரை

யாக்கிய செயல் மிகவும் நன்று!" என்று புகழ்வாராய், அக்கினி தேவனை வணங்கலாயினர். நாடக மேடைகளில் நடித்துக் கொண்டிருந்த நாடக மகளிர்களும், பாடகர்களும், இசைக் கருவியாளர்களும் அவ்விடத்தை விட்டு விரைந்து சென்று, "மன்னனைச் சிலம்பினால் வென்று, நகரைத் தீக்கிரையாக்கிய இப் பெண்மணி எந் நாட்டாளோ? யாருடைய மகளோ?" எனப் புகழ்ந்து பேசினர். நகரில் கேட்கும் படியான வேத வொலியும், யாகஞ் செய்வோர் ஓசையும், கோயில்களில் கடவுளை வணங்குவோர் பேரொலியும், கடைத்தெருவின் பெரிய ஓசையும் அவிந்து அடங்கின.

இவ்வாறு செய்த கண்ணகி, பின்பும் கோபம் தணியாதவளாய், பெருமூச்செறிந்து கொண்டு அந் நகரின் பெரிய தெருவுகளிலும், சிறிய முடுக்குகளிலும் போவதும் வருவதுமாக இருந்தாள். அச்சமயம் மதுரையை முன் காவல் செய்துகொண்டிருந்த மதுராபதி யென்னும் தெய்வமானது, பாண்டியனுக்குக் குலதெய்வமாதலால், கண்ணகிக்கு முன்னே சென்று நிற்க வெட்கப்பட்டு, அவளுக்குப்-பின்னாகச் சென்று, "பெண்ணரசே! வருந்தாதே. நீ கொண்ட கோபம் தணிவாய்" என்றது. கண்ணகி திரும்பிப் பார்த்து "நீ யார்? எனது துன்பத்தை அறிவாயோ?" என்றாள். அத்தெய்வம், "நங்காய்! யான் அறிவேன். யானும் உன் கணவன் இறந்ததற்குக் கவலை யடைகின்றேன். உன் கணவனுக்கு இத்துன்பம் ஏற்பட்டதன் காரணத்தையும் கூறுகின்றேன்; கேள் :

"இப்பாண்டியன் இதுவரையும் நீதி தவறினன் இல்லை. இவனது பகைவர் பழி தூற்றுவதைத் தவிர, குடிகள் பழி தூற்றுவதை யான் கேட்டறியேன்.

அல்லாமலும், இவனது முன்னோர்கள் எல்லாம் நீதி தவறாது நன்னெறியில் நடந்துவந்திருக்கிறார்கள். அவர்களுடைய பெருமையைக் காட்ட முன் நடந்தவற்றில் இரண்டொன்றைக் கூறுகின்றேன் ; கேட்பாயாக

"முன் காலத்தில் **கீரந்தை** என்னும் ஓர் பிராமணன் இருந்தான். அவன் தன் மனைவியிடம் 'உன்னை அரசன் காப்பான். யான் காசிக்குச் சென்று வருகின்றேன்' எனக் கூறிவிட்டுச் சென்றான். சென்றவன் சிலகாலம் கழித்து வீட்டை வந்தடைந்தான். அன்றிரவு தன் மனைவிக்குத் தான் போய் வந்த வரலாற்றைக் கூறிக்கொண்டு இருந்தான். இஃதிவ்வாறாக, முன்பு அந்தணன் கூறியதைக்கேட்டு, அதன்படி பாண்டியன் அவளைக் காத்து வந்தான். அவன் வழக்கம்போல் நகர்சோதனைக்குப் புறப்பட்டான். புறப்பட்டவன், 'ஆளில்லா அந்தணன் வீட்டில் ஆள் அரவம் கேட்கிறதே, யாதென்று அறிவோம்' எனத்தன்னுள் நினைத்துக்கொண்டு, அவ்வீட்டுப் பக்கம் சென்று, கதவைத் தட்டினான். அவ்வளவில் பிராமணன் சந்தேகப்பட்டு 'யார்?' என அதிகாரத்துடன் கேட்டான். உடனே பாண்டியன் அதைக் கேட்டு, பிராமணன் சந்தேகத்தை நீக்குவதற்காக, அத்தெருவிலுள்ள வீடுகள்தோறும் அவ்வாறு செய்து சென்றான். மறுநாள் மறையவன் சந்தேகத்திற்குத் தன் கை காரணமாயிருந்தது குறித்து, அறிவாளர் உத்தரவுப்படி அதனை வாள்கொண்டு துணித்தான். அவ்விதம் துணிக்கப்பட்ட கைக்குப் பதிலாக, பொன்னால் கை செய்து சேர்க்கப்பட்டது. இதனால் அவனுக்கு அன்று முதல் **பொற்கைப் பாண்டியன்** என்று பெயர் வழங்கலாயிற்று. இதனால் இவ

னுடைய தொல்குலம் எப்பேர்ப்பட்டது என்று தெரிகிறதல்லவா ?

"காவிரி பாய்தலால், வளப்ப மிக்க சோழநாட்டின்கண் **பராசரன்** என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன், **மாந்தரஞ் சேரல் இரும்பொறை** என்னும் சேர மன்னனுடைய கொடையைக் கேள்விப்பட்டு, அவன் நாடு சென்றான். சென்றவன் சேரன் சபையிலுள்ளவர்களை வாதில் வென்று, சிறந்த பரிசில்களைப் பெற்றான். பின்பு அரசனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, தன் நாட்டை நோக்கித் திரும்பினான். திரும்பி வரும்வழியில் பாண்டிய நாட்டிலுள்ள **திருத்தங்கல்** என்னும் ஊரில் தங்கினான். அச்சமயம் அங்கு விளையாடிக்கொண்டிருந்த பார்ப்பனச் சிறுவர்கள் வந்து அவனைச் சுற்றிக்கொண்டனர். பராசரன் அவர்களைப் பார்த்து, 'சிறுவர்காள்! உங்களில் யார் நான் கேட்கும் வேதத்தைச் செவ்வையாகச் சொல்லுகிறார்களோ அவர்களுக்கு யான் பெற்று வந்த பரிசில்களைக் கொடுப்பேன்' என்றான். அப்பொழுது **வார்த்திகன்** என்னும் மறையவனுடைய புதல்வன், **தட்சிணாமூர்த்தி** என்பவன், பராசரன் கேட்டதைச் சந்தம் தவறாமல் கூறினான். பராசரன் அதைக்கேட்டு ஆச்சரியப்பட்டு, தான் பெற்று வந்த ஆபரணங்களையெல்லாம் அவனுக்கு இனமாகக் கொடுத்துச் சென்றான். சிறுவன் பெற்ற பொருள்களைக் கண்டு பொறாமை கொண்ட சிலர், வார்த்திகன் களவாடினான் என்று அவன் மீது களவுக் குற்றஞ் சுமத்தி அவனைச் சிறையில் அடைப்பித்தனர்.

"அதனைக் கேட்ட அவனுடைய மனைவி **கார்த்திகை** என்பவள் அழுதாள்; விழுந்தாள்; புரண்டாள்; 'ஐயோ' வென்று ஏங்கிக்கொண்டு உண்ணாது இருந்

தாள். காவல் வீரர்கள் ஆராயாது வார்த்திகனைச் சிறை செய்ததால், மதுரையிலுள்ள காளிதேவதையின் கோயில் கதவுகள் மூடிக்கொண்டன. பாண்டியன் அதனை யறிந்து, 'நம்மை அறியாமல் நகரில் ஏதேனும் தீங்கு ஏற்பட்டதோ? அல்லாவிடில், காளிதேவதைக் கேற்பட்ட கவலை யாதோ?' என்று மனம் வருந்தினான். பின்பு அமைச்சரையும், தூதுவர்களையும் அழைத்து 'அதன் காரணத்தை விசாரியுங்கள்' என அனுப்பினான். அவர்கள் சென்று அறிந்து, வார்த்திகனைப் பாண்டியன் முன்னிலையிற் கொண்டுபோய் நிறுத்தினர். பின்பு நடந்தவற்றையும் கூறினர். பாண்டியன் அதனைக் கேட்டு, வார்த்திகனைப் பார்த்து, 'அந்தணரே! உம்முடைய தன்மையை யறியாமல் இவ்வாறு செய்தது என் காவல் வீரர்கள் தவறுதலாகும். ஆதலின் அறிவில்லாத இவர்கள் செய்த பிழையைப் பொறுத்தருள்வீராக' எனக் கூறி அவனுக்குத் திருத்தங்கல் என்ற ஊரையும், வயல்களையும் கொடுத் தனுப்பினான். உடனே காளி தேவதையின் கோயிற்கதவுகள் திறந்து கொண்டன.

"பாண்டியன் அதனை யறிந்து மகிழ்ந்தான். பின்பு காளிக்கு விழா நடத்தி, வேண்டிய சிறப்புச் செய்தான். இத்தகைய நீதி மன்னர் மதுரைமா நகரத்தோடு கேடு அடைவான் என்று ஓர் ஜோதிடனும் கூறி யிருக்கின்றான். அல்லாமலும் உன் கணவன் இத்தகைய கேடு அடைதற்குக் காரணமாக முற்பிறப்பில் நடந்ததைக் கூறுவேன்; கேள்*

"கலிங்க தேசத்து, சிங்கபுரத்தில் பரதன் என்னும் பெயர் உடையவன் ஒருவன் இருந்தான். அவன் அந்

* இவ்வரலாற்றின் விரிவு முன்னரே கூறப்பட்டது.

நகரத்தரசனிடம் வேலைபார்த்து வந்தான். அவன் தனக்குப் பகைவனாகிய சங்கமன் என்பவனை மாற்றரச னது ஒற்றன் என்றழைத்துச் சென்று, தன்னுடைய அரசனிடம் காட்டிக் கொல்வித்தான். அதனைத் தெரிந்த அச் சங்கமன் மனைவியாகிய நீலியென்பவள் 'எமக்கு இக் கொடுமை செய்தார், மறு பிறப்பில் இது போன்ற கொடுமைக்கே ஆளாகுவாராக' என்று சபித்து உயிர் துறந்தாள். அவ்வினையாலும் சாபத்தின் உண் மையாலும் அப் பரதனென்பவன் உன் கணவனாகிய கோவலனாகப் பிறந்து, அடாப் பழிக்கு ஆளாகிக் கொலையுண்டிறக்க நேரிட்டது. ஆதலால், வினைப்பயனை அவன் அடைதற்கும், அரசரோடு மதுரை கேடடை தற்கு நின்ற காலக் கோளுக்கும் ஏற்ப இது நடந்தது. அல்லாமல் பாண்டியனுடைய கொடுங்கோன்மையால் நடந்திலது. நீ கொண்ட கோபந் தணிக. கண்ணகி! நீ இன்றைக்குப் பதிநான்காவது நாளில் உன்னுடைய கணவனை வானவர்வடிவில் கண்டு அடைவாய்'' எனக் கூறித்தேற்றி, அக்கினியைத் தணிக்கும்படி செய்தது.

பிற்பாடு, கண்ணகி கோபந் தணிந்து 'என் கண வனைக் கண்டால் அல்லாமல், ஓரிடத்தில் இருத்தலும் செய்யேன், நிற்றலும் செய்யேன்!' என்று வீரமொழி கூறி, துர்க்கை கோயிலுக்குச் சென்றாள். அங்குத் தன் கை வளையல்களை யுடைத்தெறிந்து விட்டு, காடென் றும், மேடென்றும் பாராமல் மதுரையைக் கடந்து, போய், மலை நாட்டிலுள்ள திருச்செங்குன்று என்னும் மலைமீதேறி, அழகிய ஒரு வேங்கை மரத்தின் நிழலில் சென்று நின்றாள்.

அச்சமயத்தில், பயிர்களை அழிக்கும் குருவிகளையும் கிளிகளையும் துரத்திக் கொண்டு மலையினிடத்துள்ள

அருவிகளிலும், சுனை நீரிலும் மூழ்கி வந்த குறத்தியர்கள் கண்ணகியைப் பார்த்து, "எங்கள் வள்ளியம்மை போன்றவரே! இவ்வேங்கையின் நிழலில் மனவருத்தத்தோடு வந்து நிற்க வேண்டிய காரணம் என்ன?" என்று வினவினர். அதற்குக் கண்ணகி, "முன் செய்த தீவினைப்பயனால், கணவனை யிழந்தேன். அதனால் மனங்கமழ் மதுரையையும் பாண்டியனையும் கேடடையும் படியாகச் செய்து, இங்கு வந்திருக்கின்றேன்" என்றாள். அதனைக்கேட்ட அக் குற மங்கையர்கள் கண்ணகியைக் கை கூப்பித் தொழுதார்கள்.

அச்சமயம் கோவலன், தேவர்கள் சூழ, விமானத்தினின்றும் கீழே இறங்கினான். கண்ணகி கணவனைக் கண்டு ஆனந்தமடைந்து, அவனைத் தொழுது அவனோடும் விமானத்திலேறி, தேவர்கள் மலர் மாரி பொழிய வானுலகம் அடைந்தனள். அச்செயலைக் கண்ணாரக் கண்ட குறவர் குறத்தியர் ஆச்சரியமடைந்து, தம் கூட்டத்தாரைப் பார்த்து, "சிறு குடியீரே! இங்கு வந்து நின்ற மங்கையினும் சிறந்த தெய்வம் கண்டிலோம். அதனால், இவ்வேங்கை மர நிழலில் அம்மங்கையை நம் குலதெய்வமாக வைத்து வணங்குவோம்; வருவீராக; இப்பொழுதே வந்து சிறு பறை முழங்குவீராக; கொடு மணியடிப்பீராக; குறிஞ்சிப்பண் பாடுவீராக; நறும் புகை செய்வீராக; மலர்களைக் கொண்டு தூவுவீராக; மலையில் விளையும் பொருள்கள் செழித்து வளருகவெனப் பணிவீராக" என்றனர். பின்பு, அம்மலைக் குறவர்கள் எல்லாம் ஒன்றுகூடிக் குரவைக் கூத்தாடி விழா நடத்திப் பத்தினிப் பெண்ணாகிய கண்ணகியை வணங்கினார்கள்.

## 9. செங்குட்டுவன் சிலை எடுக்கச்செல்லல்

அச்சமயம் சேர நாட்டை யாண்ட **சேரன்செங்குட்டுவன்** என்பவன், தன் மனைவி **வேண்மாளோடும்**, தம்பி * **இளங்கோவடி**களோடும் நால்வகைப் படைகள் சூழப் புறப்பட்டு, சோலைகள் சுற்றியிருக்கின்ற மலைக்காட்சி காணுதற்குச் சென்றான். சென்றவன், மலையிலிருந்து செல்லும் யாற்றின் கரைக்கண் உள்ள மணல் மேட்டில் இருந்து கொண்டு கோங்கு, வேங்கை, கொன்றை, நாகம், ஆரம் முதலிய மரங்களில் உள்ள வண்டுகளின் பாடல்களைக் கேட்டும், மலை வளப்பத்தைக் கண்டும் இன்புற்றிருந்தனன்.

அவ்விடத்து, குரவைக் கூத்தின் ஒலியும், கொடிச்சியர் பாட்டொலியும் ; வள்ளைப் பாட்டின் ஓசையும் ; அருவி நீர் பாயும் ஓசையும் ; குறவர்கள் தேனுண்டு ஆர்ப்பரிக்கும் ஓசையும் ; கொடுவரியும், கொல்களிறும் போர் புரியும் முழக்கமும் ; செங்குட்டுவனது சேனைகளின் முழக்கமும் ஒன்றுகூடி, எங்கும் பேரொலியாக இருந்தது. குறவர்கள் அரசன் வரவையறிந்து, அதனைக் கண்டு கொள்வதற்காக, யானைக் கொம்பும், அகிலின் குப்பையும், மதுவின் குடமும், சந்தனக் குறையும், ஏல வல்லியும், இருங்கறி வல்லியும், தெங்கின் பழமும், தேமாங்கனியும் ஆகிய மலையிலுள்ள பல பொருள்களைச் சுமந்து கொண்டுவந்து அரசனுக்குக் காணிக்கையாக

---

* இவ்விளங்கோவடிகள் தான் சிலப்பதிகார மென்னும் இக் கண்ணகி கோவலன் கதையை, தெள்ளிய மதுரஞ் சேர்ந்த சீரிய கூரிய தீஞ் சொல் வவ்விய பனுவல்களால் யாத்தவர். வித்தகர் போற்றும் முத்தமிழ்ப் புலமை படைத்தவர். இளமையிலேயே துறவு மேற்கொண்டவர். கூலவாணிகன் சாத்தனார் இயற்றிய மணிமேகலையைக் கேட்டவர்.

வைத்து, அவன் அடியில் வீழ்ந்து வணங்கினர். பின்பு, அவனைப் பார்த்து, "மன்னர் மன்ன! அம்மலையிலுள்ள ஓர் வேங்கை மர நிழலில், கடுந்துயர் அடைந்த காரிகை யொருத்தி வந்து நின்றனள். சிறிது நேரத்திற்கெல்லாம் தேவர்கள், அவளுடைய காதலனோடு வந்து அவனை அவளுக்குக் காட்டி, அக்காரிகையையும் விமானத்தில் ஏற்றிக் கொண்டு விண்ணகஞ் சென்றனர். யாங்கள் இதனைக் கண்ணாரக் கண்டு, ஆச்சரிய மடைந்தோம். அவள் எந்நாட்டாளோ? யார் மகளோ? அறியோம்" என்று பணிவோடு பகர்ந்தனர்.

அச்சமயத்து, செங்குட்டுவனைக் கண்டு பேசிக் கொண்டிருந்த, கூலவாணிகன் சாத்தனார், கண்ணகி கோவலனை மணந்துகொண்டது முதல் மதுரைமா நகரைக் கண்ணகி நெருப்பிற்கு இரையாக்கியது வரை, நடந்தவை யனைத்தும் எடுத்துக் கூறினார். சேரன் அவற்றைக் கேட்டு, தன்னைப்போல் புகழும் பெருமையு முடைய பாண்டியன் மாய்வுக்கு மனம் வருந்தினான். பின், "முறை தப்பியதன் செயல், என் போன்றார் செவிக்கு வருவதற்கு முன், ஊழ்வினையால் வளைந்த கோலை உயிர் கொடுத்து மீட்டும் செங்கோலாகச் செய்தான். அரசர்கள் அளவிறந்த இன்பங்களை யனுபவித்தற்கு வல்லவராயினும், தம்முடைய கடமைகளைக் கருதிப் பார்க்குமிடத்து, எத்துணையான துன்பங்களை அடைகின்றனர்? அன்றியும் நாட்டில் மழை வளம் குறையினும் அச்சம்; மன்பதைகளைக் காப்பதில் யாதேனும் குறை நேரிட்டால் அதனினும் மிக அச்சம்; இவற்றால் மன்னனாய்ப் பிறப்பது பெருந் துன்பமே யாகும்" எனக் கூறினான். பின்னர் தன் மனைவி, வேண்மாளை நோக்கி, "அணியிழாய்! இச் சாத்தனார் கூறியவற்றைக்

கேட்டாய் அல்லவா! கணவனிறந்தவுடனே தன்னுயிரையும் மாய்த்துக் கொண்ட, அறக் கற்புடைய கோப்பெருந்தேவி மிக்கவரோ? அன்றிக் கோபந்தணியாமல், நம் நாடு வந்த மறக் கற்புடைய கண்ணகி மிக்கவரோ? இவ்விருவருள் யாரை நீ பாராட்டுகிருய்?'' எனக் கேட்டான். வேண்மாள், "அரசே! கணவன் பிரிவதற்குச் சகியாது அவ்விடத்திலேயே தன்னுயிரை மாய்த்துக் கொண்ட கோப்பெருந்தேவி தேவருலகிற் சிறந்துவிளங்கட்டும். நம் நாடடைந்த இப் பத்தினிக் கடவுளை நாம் வழிபட வேண்டும்'' என்ருள்.

செங்குட்டுவன் அவள் கூறியதைக் கேட்டு, தன் பக்கத்திலிருந்த அமைச்சரை நோக்கினுன். அவன் கருத்தை அறிந்த அமைச்சர்கள், "மன்னர் திலக! இப் பத்தினிக் கடவுளை, இமயமலையிலேனும், பொதியை மலையிலேனுமுள்ள கல்லைக் கொணர்ந்து பிரதிட்டை செய்தல் தக்கதாகும். இமயத்தில் கல் எடுத்தால், அதனைக் கங்கையிலும், பொதியையிற் கல் எடுத்தால், அதனைக் காவிரியிலும் நீர்ப்படை செய்தல் வேண்டும்'' எனக் கூறினர்.

அரசன் அதைக் கேட்டு, "அமைச்சர்காள்! பொதியையிற் கல் எடுத்துக் காவிரியில் நீர்ப்படை செய்தல் எம்போன்றவர்க்குப் பெரிய காரியமன்று. இமயத்தில் கல்லெடுத்து, கங்கையில் நீர்ப்படை செய்து கொண்டு வருதலே பெருமையாகும். நாம் விரும்பும் இப்பொருளை இமயவரசன் கொடானுயின் வஞ்சிப் பூவைச் சூடிப் படையெடுத்து, அவனுடைய வலியைத் தொலைத்து, நம் வீரத்தைக் காட்டுவோம்'' என்ருன்.

செங்குட்டுவன் வீரமொழியைக் கேட்ட **வில்லவன் கோதை** என்னும் அமைச்சனெருவன் எழுந்து, "மன்

னர் மன்ன! நீ நீடு வாழ்வாயாக. அக்காலத்தில் சோழனும் பாண்டியனும் உன்னோடு எதிர்த்துப் போர்புரிய முடியாது, தோற்று ஓடிய செய்தி இவ்வுலகம் அறிந்த காரிய மல்லவா? அன்றியும், கொங்கணர், கலிங்கர், கொடுங்கருநாடர், பங்களர், கங்கர், வடவாரியர்கள் முதலியவர்களுடன் நம் தமிழ்ப்படை கலந்து போர் புரிந்த காலத்தில், யானையைச் செலுத்தி உழக்கிய செயல் என் கண்ணை விட்டகலவில்லை. உன் அன்னையாரைக் கங்கையிற் கொண்டுபோய் நீராட்டிய காலத்தில் எதிர்த்து வந்த ஆரிய மன்னர் ஆயிரவர்க்கு முன் நீ ஒருவனே நின்று போர் புரிந்த செயலை யமனும் அறிவானல்லவா? இத்தகைய அருஞ்செயல் புரிந்த நீ ஒரு கல் கொண்டு வருவதற்காக இமயஞ் செல்லுதலை மேற்கொண்டாய். இதனை வடபால் உள்ள மன்னர்கட்கு, வில்லும், கயலும், புலியும் பொறித்த ஓலையைப்போக்கி, அவர்கட்கு அறிவிப்போம்" எனக் கூறினன்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த அழும்பில்வேல் என்னும் அமைச்சன் எழுந்து, "பல நாட்டரசர்களின் தூதுவர்களும் நம் நகர்க்கண் இருக்கின்றார்கள். அவர்கள் இச் செய்தியை தத்தம் நாட்டரசர்க்குச் சென்று கூறுவர். ஆதலின், வச்சிரக் கோட்டத்திலுள்ள முரசை, கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி, நம் நகர்ப் புறத்து அறைதலொன்றுமே போதும்" எனக் கூறினன்.

உடனே செங்குட்டுவன் மலையினின்று மிறங்கி, தனது வஞ்சி நகரை அடைந்தான். முரசறைவோனிடம் முரசு அறையுமாறு கூறினன். உடனே முரசறையும் வள்ளுவன் யானைமீது முரசையேற்றி, முதற்கண் மன்னனை வாழ்த்தி, "எமது மன்னன் இமயத்தில் ஒரு கல் கொண்டுவருவதற்குப் போகின்றான். அதனால்

வடபால் உள்ள மன்னவரெல்லீரும் திறைப் பொருளோடு வந்து கண்டு கொண்மின். காணுவதற்கு விரும்பாவிட்டால், காட்டினுள் மறைந்தும், மனைவியரைத் துறந்தும் வாழுமின்'' என முரசறைந்தான்.

பின்னர், செங்குட்டுவன் சிங்கஞ் சுமந்த செழுமணித்தவிசில், அமைச்சரும், காலக்கணிதரும், வாட்கைவீரரும் சுற்றியிருக்க வீற்றிருந்தான். அவ்வமயம் அரசன், வாட்கைவீரரை நோக்கி, ''தமிழ் நாட்டில் நன்னீர் படிதற்கு வடநாட்டிலிருந்து வந்த முனிவர்கள் என்னை வந்து சந்தித்தனர். அவர்கள், ஆரிய மன்னர்களாகிய **விசயனும் கனகனும்**, தமிழ்நாட்டு மன்னர்களின் வீரத்தை அறியாத வேற்று மன்னர்களுடன் கலந்து கொண்டு, தமிழ் நாட்டு மன்னர்களை இகழ்ந்து பேசினதாகக் கூறினார்கள். அவர்களது இகழ்ச்சியைப் பொருட்படுத்தாது விட்டிடின், அவ்விகழ்ச்சி தமிழ்வேந்தர் மூவர்க்கும் பேரிழிவாகும். ஆதலின், இமயத்திற்குச் சென்று ஆங்கு எடுக்கும் கல்லை அவ்வாரிய மன்னர்கள் முடித்தலையிலேற்றிக் கொண்டு வருதல் வேண்டும். யான் அவ்வாறு செய்யத் தவறுவேனாயின், யுத்தகளத்தில் எதிர்த்த பகைவரை முதுகிடச் செய்ய முடியாதவனாய் மன்பதையைத் துன்பப்படுத்தும் கொடுங்கோலனாகக் கருதப்படுவேன்'' என வஞ்சினங் கூறினான். அரசன் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்த வீரருள் ஒருவன்; ''மன்ன! வட அரசர்கள், சோழ பாண்டியர்களை இகழ்வார்களே அல்லாமல் உன்னை இகழமாட்டார்கள். அன்றியும் நின்னை, இகழ்ந்து வாழ்வாரும் உண்டோ? கொண்ட கோபம் தணிவாயாக'' எனக் கூறினான்.

அப்பொழுது **நிமித்திகன்**, அரசனை நோக்கி, ''அரசே, இக்காலம் படையெழுச்சி செய்தற்குத் தக்கதாக

இருக்கிறது. ஆதலின், இப்பொழுது படைகளை அனுப் பின் மன்னர் எல்லாம் நின்திருவடியைத் தொழ வரு வர்'' என்று கூறினன். உடனே அரசன் "வாளும் குடையும் வடக்கு நோக்கிச் செல்லட்டும்'' எனக் கட் டளையிட்டான். வீரர்கள் ஆரவாரித்தனர். முரசங்கள் முழங்கின. உடனே படை வீரர்கள், வாளும் குடையும் புறவீடு செய்து, பின் திரும்பி வந்து அரசனை அடைந் தனர். அரசன் படை வீரர்கட்கு ஒரு பெரு விருந்து செய்து வெற்றிக்குரிய வஞ்சி மாலையைத் தரித்துக் கொண்டான்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் சிவபெருமான் கோயிலுக்குச் சென்று வலம் வந்து தொழுது, அந்த ணர்கள் புரிந்த வேள்வித் தூமத்தையும் ஏற்றுக் கச்சை யானையிலேறினன். அச்சமயம் அங்குள்ளார், 'எம் கோ என்றும் வாழ்க' என வாழ்த்தி, **திருவனந்தபுரத்தில்** அரவப் பாயலில் யோகநித்திரை செய்யும் **திருமாலைப்** பூசித்த பொருள்களைக் கொணர்ந்து கொடுத்தனர். அரசன் அவற்றைப் பணிவோடு வாங்கி, தோளில் அணிந்து கொண்டு புறப்பட்டான். அச்சமயம் நாடக மடந்தையர்கள் கூப்பிய கையினராய் அரசனை ஏத்திக் கொண்டு சென்றனர். இவ்வாறாக, சேரன் நெடுங்காலம் பிரயாணஞ் செய்து போய், **நீலகிரியை** யடைந்து அங்கே அன்று தங்கினன். அப்பொழுது ஆகாய வழியாகச் சென்று கொண்டிருந்த முனிவர் சிலர், அவ்விடத்தி லுண்டாகிய சேனைகளின் ஒலியைக் கேட்டு, இறங்கி அரசன் முன் சென்றனர். அவர்களைக் கண்ட அரசன் இருக்கையை விட்டெழுந்து பணிந்து நின்றான். அம் முனிவர்கள், "செங்குட்டுவ! நீ நீடு வாழ்வாயாக. நாங்கள் பொதியை மலைக்குப் போகின்றோம். போகும்

வழியில் உன் படைகளின் ஆரவாரத்தைக் கேட்டு, நீ இமயத்திற்குச் செல்லுகின்றாய் என்பதை அறிந்தோம். அவ்விடத்திற்குச் சென்றால், அங்குள்ள அந்தணர்களைக் காத்தல் உனது கடனாகும்" எனக் கூறிப் போயினர். பின்பு செங்குட்டுவன் கொங்கணர், கருநாடர் முதலியவர்களுடைய ஆடலையும் பாடலையும் கண்டு கேட்டு வியந்து, அவர்கட்கு வேண்டிய பரிசில்கள் கொடுத்து இன்புற்றிருந்தான்.

அச்சமயத்தில், வாயில் காப்போன் ஒருவன் அரசனையடைந்து, "பெரும! நம் தலைவாசலில், **நூற்றுவர் கன்னர்** அனுப்பிய **சஞ்சயன்** முதலாயினார், நூறு நாடக மடந்தையருடனும், இரு நூற்றெட்டுக் குயிலுவருடனும், நூறு நகைவேழம்பருடனும், நூறு தேர்களுடனும், ஐந்நூறு யானைகளுடனும் பதினாயிரஞ் சிறந்த குதிரைகளுடனும், பலசரக்கேற்றிய பதினாயிரம் வண்டிகளுடனும் வந்திருக்கின்றார்கள்" என்றனன். அரசன் அதைக் கேட்டு, "அவர்களை இங்கனுப்புக" எனக் கட்டளையிட்டான். காவலனும் விரைந்து சென்று, அவர்களை அரசன் முன் அனுப்பினான். சஞ்சயன் முதலாயினர் அரசன் திருமுன் சென்று வணங்கி, "அரசே! உனது நண்பர்களாகிய நூற்றுவர் கன்னர், இதோ உள்ள திறைப் பொருள்களை உன்னிடம் கொண்டு சேர்க்குமாறு கூறினர். அன்றியும் அவர்கள், நீ இமயத்திற்குச் செல்வது சிறந்த ஓர் கல் கொண்டு வரும் பொருட்டாதலின், அத்தொழிலைத் தாங்களே செய்து முடித்துத் தருவதாகவும் நின் திருமுன் விண்ணப்பிக்கும்படி கூறினர்" என்று சொன்னார்கள். சேரன் அவற்றைக் கேட்டு அவர்களைப் பார்த்து, "ஆரிய மன்னன் **பால குமாரன்** மக்கள், கனகனும், விசயனும் வேற்று மன்

னர்களுடன் சேர்ந்து கொண்டு தமிழ் நாட்டு மன்னர் களின் வீரத்தை அறியாது இகழ்ந்து பேசினராம். அதனால் மிகுந்த கோபங்கொண்டுள்ளது எனது சேனை. இதனை அவர்கட்குத் தெரியப்படுத்தி, கங்கையைக் கடத்தற்கு மரக்கலம் விரும்பினேன் எனக் கூறுக" எனச் சஞ்சயன் முதலாயினோரை யனுப்பினான்.

## 10. ஆரிய மன்னரை வெல்லுதல்

அச்சமயத்தில், பாண்டியன் அனுப்பிய திறைப் பொருள்களைத் தூதுவர்கள் கொண்டு வந்து கண்டனர். பின்னர், அரசன் சேனைகளோடு புறப்பட்டுச் சென்று, நூற்றுவர் கன்னர் தயாரித்து வைத்திருந்த மரக்கலங் களில் ஏறி கங்கையின் வட கரையை அடைந்தனன். அவன் வரவை அறிந்த கன்னர்கள் எதிர் கொண்டு அழைத்து மரியாதை செய்தனர். பின் அதினின்றும் நீங்கி வடபால் சென்று, மாற்றூர் நாட்டின் புறத்தில் படை வீடு செய்து கொண்டு தங்கினான்.

இஃது இவ்வாறிருக்க, கனகவிசயர்கள் சேரன் தம் மீது படையெடுத்து வந்திருப்பதை உணர்ந்து உத்தரன், பைரவன், விசித்திரன், சித்திரன், சிங்கன் முதலிய வடதிசை மன்னர்களைத் துணையாக அழைத்துக் கொண்டு 'தமிழ் நாட்டு மன்னனது வீரத்தைப் பார்ப்போம்' எனக் கடல் போன்ற சேனைகளுடன் வந்து எதிர்த்தனர். பார்த் தான் செங்குட்டுவன். யானை மேல் பாயும் சிங்கம் போல, அம்மன்னர்களின் சேனைகள் மேல் பாய்ந்து அழித்தான். தம் வெற்றிக்கு அடையாளமாகத் தும்பை மாலையைத் தரித்தான். இவனது வீரத்தைக் கண்டு அஞ்சி ஒடுங்கிய மற்றைய வீரர்களில் செங்குட்டுவ னிடத்திலிருந்து தப்புதற்காகத் துறவி வேடங் கொண்

டனர் சிலர்; பிணம் போல் கிடந்தனர் சிலர்; "ஐய! யாம் நினது அடைக்கலம் ஆவோம்" எனக் கூறினர் சிலர். இப்படியே ஒவ்வொருவரும் தப்பித்துக் கொண் டனர். கடைசியில் கனகனும், விசயனும், நூறு தேர் வீரர்களும் செங்குட்டுவனால் சிறை பிடிக்கப்பட்டனர். இவ்வாறாக, "தேவாசுரப் போர் பதினெட்டு வருடத் திலும், இராம இராவணப் போர் பதினெட்டு மாதங் களிலும், பாரதப் போர் பதினெட்டு நாட்களிலும், செங்குட்டுவன் கனக விசயர்களுடன் புரிந்த போர் பதினெட்டு நாழிகையிலும் முடிந்தது" என்று உலகம் புகழுமாறு போர் முடிந்தது.

பிறகு செங்குட்டுவன், முனிவர்கள் நீலகிரியிற் சந்தித்துக் கூறியதை நினைத்து, வில்லவன் கோதை யுடன் பல வீரர்களை வட திசையிலுள்ள மறையவர் களைக் காக்கும் பொருட்டனுப்பினான். பின் கைத் தொழில் தேர்ச்சி மிக்க கல் தச்சரை அழைத்து, கண்ணகிக்குக் கல் உரு அமைக்கச் செய்தான். அவர்கள் கண்ணகிக்கும் சிலையுருவிற்கும் வேற்றுமை தோன்றா வண்ணம் செய்து முடித்தனர். சேரன் அதனைக் கண்டு பெரிதும் வியந்து, தான் சிறைப்படுத்திய கனகவிசயர் தலையில் ஏற்றிக் கங்கையின் வட கரையை அடைந் தான். அச்சிலையை ஆகமங்களில் கூறிய முறைப்படி நீர்ப்படை செய்தான். பிறகு தன் படைகளுடன் மரக் கலங்களில் ஏறித் தென் கரையை அடைந்து, அங்கே ஆரிய மன்னர்கள் தயாரித்திருந்த பாசறைகளில் போய்த் தங்கினான். அப்பொழுது போரில் காயமடைந்த வீரர்க் கும், எதிர்த்து நின்று போர் செய்து உயிரிழந்தவரது மக்களுக்கும் மற்றுமுள்ள வீரர்களுக்கும் பொன்னாற் செய்த மலர்களைப் பரிசிலாக வழங்கினான்.

[stamp]

அச்சமயத்தில் கங்கை நீராடிப்போந்த மாடல மறையோன் சேரனையணுகி, "மன்னர் மன்ன! நீ நீடு வாழ்வாயாக. மாதவி மடந்தை பாடிய கானல் பாணி யானது, கனக விசையர்களுடைய முடித் தலையை அன்றோ நெரித்தது" எனக் கூறினான். செங்குட்டு வன் அதைக்கேட்டு, "மறையவ! இவ்விடத்திலிருக்கும் அரசர்கள் அறியாதபடி ஓர் நகைமொழி கூறினாய். நீ இவ்வாறு கூறியதன் பொருள் யாது?" எனக் கேட்டான்.

அதற்கு மறையோன், "மன்ன! முன் புகார் நகரில் கோவலன் என்னும் ஓர் வணிகப் பெருந்தகை இருந் தான். அவன், தன் காதற் பரத்தை மாதவியோடு கடலாடுதற்குச் சென்றான். சென்றவன், மாதவியோடு கடற் காட்சிகளைக் கண்டு இன்புற்றிருந்தான். அச்சம யம் மாதவி சில கானல் வரிப்பாட்டுகளைப் பாடினாள். அதைக்கேட்ட கோவலன் மாதவி மனம் வேறு பட்ட வள் எனக் கருதினான். அவன் அவ்வாறு கருதுதற்கு, முன்னைப் பழவினையும் ஒத்திருந்தது. அதனால் கோவலன் அவளை விட்டுப் பிரிந்து, கண்ணகியோடு சிலம்பு விலை பகரும் பொருட்டு மதுரைக்குச் சென்று கொலையுண்டு இறந்தனன். அதனையறிந்த அவன் மனைவி கண்ணகி, பாண்டியனையும் அவன் நகரையும் அழித்து, உன் நாட்டை அடைந்தாள். அவ்வாறு அடைந்த நங்கை இப்பொழுது நின்னால் கனக விசயர் களின் சிறந்த முடியையுடைய தலையிலேறினாள் அல்லவா? இவற்றைத் தான் மறைத்து அவ்வாறு கூறினேன். இனியான் இங்கு வர நேர்ந்த காரணத்தை யும் கூறுகின்றேன்" என்றான்.

" முன்பு, யான் பொதியை மலையை அடைந்து

வலங்கொண்டு, குமரியில் நீராடி வரும்வழியில் பாண்டியன் நாட்டை அடைந்தேன். அங்கே கோவலன் சிலம்பு காரணமாகக் கொலையுண்டிறந்ததும், கண்ணகி, வாய்மொழியால் நெடுஞ்செழியன், 'பாண்டியர் தொல்குலம் என்முதற் பிழைத்ததே' என ஏங்கி உயிர் நீத்ததும், கணவன் பிரிவிற்குச் சகியாது கோப்பெருந்தேவி, அவ்விடத்திலேயே சித்திரம் போலிருந்ததும், ஆயர்பாடியில் மாதிரி, அடைக்கலப் பொருளை இழந்தோமே என வருந்தித் தீக்குளித்ததும், கவுந்தியடிகள் சபிக்கிறேன் எனக்கொண்ட கோபத்தைப் பாண்டியன் இறந்து விட்டமையால் தணித்துக் கோண்டு உண்ணுதிருந்து உயிர் நீத்ததும் உணர்ந்தேன். பிறகு, அவ்விடத்திலிருந்து என் ஊரை அடைந்து, அங்கு அச்செய்தியை எனக்கு வேண்டியவரிடம் கூறி, மனம் வருந்தினேன். அச்செய்தியை அறிந்த கண்ணகி தந்தையும், கோவலன் தந்தையும் துயர்க்கடலுள் மூழ்கித் துறவிகளாயினர். கோவலன் தாயும், கண்ணகியின் தாயும் மைந்தனுக்கு உற்றதும் மடந்தைக்கு உற்றதும், செங்கோல் வேந்தர்க்கு உற்றதும் கேட்டு உயிர் துறந்தனர். மாதவி கவலையடைந்தவளாய் ஆபரணங்களை அறுத்தெரிந்துவிட்டு பிக்குணிக் கோலம் பூண்டனள். என் சொல் காரணமாகச் சிலர் உயிர் துறக்க நேரிட்டமையால், அப்பாவம் நீங்கும் பொருட்டுக் கங்கைக்குச் சென்று நீராடி வந்தேன்'' எனக் கூறினுன்.

செங்குட்டுவன் மறையோன் கூறியவற்றைக் கேட்டு, ''மாடல! பாண்டியன் நெடுஞ்செழியன் இறந்ததன்பின் பாண்டியன் நாடு யாது ஆயது?'' என்று வினவினுன். மறையோன், ''அரசே! மதுரை அக்கினி வாயிற்பட்ட சமயத்தில், இளவரசனுகிய **வெற்றிவேல் செழியன்**

கொற்கை நகரில் இருந்தான், அவன் இப்பொழுது, ஆயிரம் தட்டாரைப் பத்தினிக் கடவுளுக்குப் பலி யூட்டி, சிங்கஞ் சுமந்த சிறந்த ஆசனத்தில் இருந்து அரசு புரிந்து வருகின்றான்" எனக் கூறி முடித்தான்.

அச்சமயம், அந்திமாலைப்பொழுது வந்து நெருங் கிற்று. காலங் கணிக்கும் சோதிடனொருவன் அரசனை யடுத்து, "மன்ன; நாம் வஞ்சியை விட்டுப் பிரிந்த காலம் இன்றோடு முப்பத்திரண்டு மாதங்கள் ஆகின் றன" என்றான். அதைக் கேட்ட சேரன் தன் இருக் கையிலமர்ந்து, மாடலனையழைத்து, "என் மைத்து னன் சோழன் **பெருங்கிள்ளியின்** செங்கோல் அரசியல் நன்கு நடைபெறுகின்றதா?" என வினவினான். மாட லன் "மண்ணாள் வேந்தே! கொடை அளி, செங்கோல், குடியோம்பல் ஆகிய நான்கையுமுடைய, அரசருள் சிங்கம் போன்ற வல்லமை வாய்ந்த சோழர் தம் அரசிய லில் குறை ஏது? ஒரு குறையுமின்றி நன்கு நடை பெறுகின்றது" என நவின்றான். அதைக் கேட்ட சேரன், மாடலனுக்கு ஐம்பது துலாம் பாரமுள்ள பொன்னைப் பரிசாகக் கொடுத்தான். பின்பு கன்னர் நூற்றுவரையும் தம் நாட்டிற்குச் செல்லுமாறு விடை கொடுத்தான். **நீலன்** முதலான தூதர்களையும் மாட லனையும் அழைத்து, தான் சிறைப்படுத்திக்கொண்டு வந்த கனக விசயர்களைத் 'தமிழ்நாட்டுச் சோழ பாண்டி யர்களிடம் அழைத்துச் சென்று காட்டி வருக' என்று உத்தரவிட்டான். மறுநாள் பொழுது புலர்ந்ததும் எழுந்து, நால்வகைப் படைகளும் சுற்றிவரப் புறப் பட்டு, தன் தேவி வேண்மாள் கண்டு களி கூரவும், பேரிகை முழங்கவும், நகர மாந்தர்கள் வந்து எதிர் ஏற்கவும் தன் நகரையடைந்தான். நகரத்து மக்கள்

அனைவரும் அரசன் வெற்றியுடன் திரும்பியதைக் குறித்து இன்பக்கடலுள் ஆழ்ந்தனர்.

## 11. கண்ணகியைப் பிரதிட்டை செய்தல்

செங்குட்டுவன் தன் தேவி வேண்மாளோடு பொன் மயமான மாளிகையிலிருந்துகொண்டு, மகளிரின் ஆடல் பாடல்களைக் கண்டும் கேட்டும் இன்புற்றிருந்தான். ஒரு நாள் அம்மன்னன் சபாமண்டபத்திலமர்ந்து உல்லாசமாக இருந்தான். அச்சமயம் கனக விசயர்களை அழைத்துச் சென்ற நீலன் முதலிய தூதர்களும் மாடலனும் அரசனை யடைந்து வணங்கினர். அவர்களுள் நீலன் என்பவன் அரசனைப் பார்த்து, "மன்னர் பெரும! நுமது உத்தரவை தலைமேல் தாங்கி, இவ்விருவரையும் அழைத்துச் சென்று, அவ்விரு பெரு வேந்தரிடத்தும் காட்டினோம். அவர்கள், 'உயிர் தப்பித்தற்குத் துறவி வேடத்தை மேற்கொண்ட இவர்களைச் சிறைப்படுத்தியது வீரமன்று என இகழ்ந்து உரைத்தனர்" எனக் கூறினான். சேர மன்னனுக்கு அதைக் கேட்கவும் கோபம் அதிகரித்தது. கண் சிவந்தது சீற்றத்தோடு கூடிய நகை சிறந்து தோன்றிற்று.

அரசனது அடங்கொணாக் கோபத்தை அடக்கக் கருதிய மாடலன் எழுந்து நின்று, "மன்னர் பெருமானே! நீ நீடு வாழ்க. யான் நின்னிடம் சொல்லத் தகுந்தது ஒன்றுண்டு. அதற்குச் செவிசாய்த் தருள்வாயாக. நீ செங்கோல் கொண்டு இந் நாட்டை ஆண்ட காலம் சற்றேறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு மேலாகின்றன. இது வரையிலும் நீ செய்த யுத்தங்கள் பல. அவற்றில், நீ மாற்றாரைப் புறங்கண்டது தவிர, அவர் நின்னைப் புறங்கண்டிலர். இவ்வாறு

மறக்கள வேள்வியே செய்து வந்திருக்கின்றாய். அறக்கள வேள்வி சிறிதும் செய்தாய் அல்லையே. இது அறிவு மிகுந்த உனக்குத் தகுந்ததல்ல. உன்னுடன் எதிர்த்து நிற்க முடியாது உயிர் துறந்த மன்னர்கள் எத்தனை பேராவர்? அதனால் மன்பதைகளின் யாக்கை நிலையற்ற தன்மையை நன்கு அறியலாம். இவ்வாரிய மன்னர்களால் செல்வம் நிலையற்ற தன்மையை அறியலாம். இளமை நிலையற்ற தென்பதற்கு நீயே உதாரணமாக இருக்கின்றாய். அன்றியும் உயர்ந்த பிறப்பு யாக்கையைப் பெற்ற உயிர், தாழ்ந்த பிறப்பு யாக்கையைப் பெறுதலும் தாழ்ந்த யாக்கையைப் பெற்ற உயிர் உயர்ந்த யாக்கைப் பெறுதலும் நீ ஒப்புக்கொள்ளக் கூடியதே. அதனால், நீ பரகதி அடைதற்குக் கருவியாக வுள்ள அறக்கள வேள்வியைச் செய்தல்வேண்டும். அறத்தை நாளைக்குச் செய்து கொள்ளலாமென இருப்பின் இன்றைக்கே உயிர் நீங்கினும் நீங்கும். அன்றியும், தாம் உலகில் வாழும் நாட்களைக் கணித்தறிந்து வாழ்ந்தவர் ஒருவருமில்லை. நின்னிடம் ஊதியம்பெறக் கருதி இவ்வாறு கூறினேன் எனக்கொள்ளாதே'' என்று கூறினான்.

மன்னன் மறையவன் கூறிய அறிவு உரையைக் கேட்டுக் கோபந் தணிந்தான். வேள்வி செய்து தேர்ச்சி அடைந்த மறையவர்களை நோக்கி, வேள்விக்கு வேண்டுவன செய்யுமாறு ஏவினான். பிறகு வில்லவன் கோதை என்னும் அமைச்சனை அழைத்துச் சிறைக் கோட்டத்திலுள்ள கனக விசயர்களைச் சிறைவீடு செய்து, வேள்வி முடிவடைந்த பின், அவர்கள் நாட்டையடையுமாறு கூறி, அன்னவர்களை **வேளாவிக்கோ** என்னும் அமைச்சன் மாளிகையில் இருக்கச் செய்து, அவ்விருவருக்கும் வேண்

டுவன செய்க வெனப் பணித்தான். அதன் பிறகு **அழும்பில் வேள்** என்ற அமைச்சனையும், சில தூதுவர்களையு மழைத்துச் சிறைச்சாலையில் அடைபட்டிருப்பவர்களை விடுதலை செய்யுமாறு அனுப்பினன்.

பிற்பாடு, நான்மறையோதும் அந்தணரும், புரோகிதரும், சோதிடரும், கம்மியருஞ் சூழச் சென்று, கைதேர்ந்த சிற்பிகளால் செய்யப்பட்ட கண்ணகியின் கோயிலை அடைந்தான். அடைந்தவன் தான் வழிபடு கடவுளை மனத்தால் நினைத்துக்கொண்டு, அக்கோயிலில் 'அரசர் செங்கோலினல் அல்லாமல், குல மங்கையர் தம் கற்புச் சிறப்புருது' என்பதற்குச் சோழனும்; ஆட்சி முறையில் தவறின் அரசரும் உயிரிழப்பர் என்பதற்குப் பாண்டியனும்; 'சபதஞ் செய்துகொண்ட காரியம் முடிவடைவதற்கு முன் கோபம் தணியார்' என்பதற்குத் தானும் உதாரணமாவர் என்பதைப் பிறர் அறியுமாறு மதுரை மூதூர் கேடுறச் செய்து தன் நாடு புகுந்த வீர பத்தினியின் சிலையை நன்கு நிறுவினன். சிறந்த இரத்தினங்களால் அழுத்தப் பெற்ற ஆபரணங்களைப் பூட்டினன். வேள்வியும், விழாவும் நாடோறும் வகுத்தான். மற்றும் வேண்டிய சிறப்புக்களையும் செய்து முடித்தான். அதனைக் கண்ட யாவரும் மிகுந்த ஆனந்தமடைந்தவராய் செங்குட்டுவனை வாழ்த்தினர். இவ்வாறு கல் நடுகை சிறப்பாக நடந்தேறியது.

இஃதிவ்வாருக மைந்தனுக்கு உற்றதும், மடந்தைக்கு உற்றதும் மாடலனல் அறிந்த மாசாத்துவானும் மாநாய்கனும் துறவுக் கோலத்தை மேற்கொண்டும், அவர்களுடைய அன்னையர்கள் மாண்டொழிந்ததும் கழிந்த பிற்பாடு, கோவலனுடைய செவிலித்தாயும், அடித்தோழியும் தேவந்தியுடன் சேர்ந்து துயரக் கட

வில் மூழ்கினவர்களாய்க் கண்ணகியைத் தேடிப் பார்க்கலாமென்று, புகார் நகரை விட்டு நீங்கி, மதுரையை அடைந்தனர். அங்கே, கண்ணகியால் மதுரை அக்னியின் வாயிற்பட்டழிந்ததை உணர்ந்து மாதரி மனையை அடைந்தனர். அங்கே, 'மாதரி அடைக்கலப் பொருளை இழந்தோமே யென்று கவலையடைந்து தீக்குளித்தனள்' என்பதை அவள் மகள் ஐயை வாயாற்கேட்டு, மாதரியின் அன்பைப் பாராட்டி, அவள் மகள் ஐயையையும் அழைத்துக்கொண்டு, வைகை நதியைக்கடந்து சென்று, சேர நாட்டுத் திருச்செங்கோட்டிலுள்ள மலையை அடைந்து, கண்ணகி கோயிலைக் கண்குளிரக் கண்டனர். கண்ட அம்மங்கையர்கள் அவ்விடத்துக் கண்ணகித் தெய்வத்தை வணங்கி நின்ற செங்குட்டுவனை யடைந்து தொழுது, தாங்கள் இன்னின்னார் என்பதை யவனுக்கு விரித்துக் கூறினர்.

அச்சமயம், பொற்சிலம்பும், மேகலாபரணமும் வளையல்களும், வயிரத்தோடும், மற்றுமுள்ள ஆபரணங்களு மணிந்த கண்ணகியின் தெய்வ வடிவத்தை வானில் கண்டனர். செங்குட்டுவன் மிகுந்த ஆச்சரியமடைந்து 'என்னே! யிஃதென்னே! யிஃதென்னே! யிஃதென்னே கொல்?' எனக் கூறிக்கொண்டிருந்தான். அவ்வளவிலேயே, கண்ணகித் தெய்வம் வானிலிருந்து, 'தென்னவன் தீதிலன். அவன் தேவர்கோன் கோயிலில் இன்பம் அனுபவிக்கின்றான். யான் இந்த தேவ யாக்கையை அடைதற்குக் காரணமாக இருந்தவன், அப்பாண்டியனாதலால் அவன் மகளாவேன் யான். தோழியீர்! வெள்வேலான் உறையும் இக்குன்றில் யான் விளையாடுதலை விட்டகலேன். ஆதலின் முன்போல் எல்லோரும் என்னோடு விளையாட வாருங்கள்'' என

மொழிந்தருளினள். அதைக்கேட்ட பெண்கள், கண்ணகித் தெய்வத்தைப் போற்றித் தொழுது, முப்பெரு வேந்தர்களையும் முறையே புகழ்ந்து வாழ்த்தினர். அச்சமயத்து, கண்ணகித் தெய்வம் வானிலிருந்து கொண்டு 'சேரன் செங்குட்டுவன் சிறந்து வாழ்க' எனத் திருவாய் மலர்ந்து மறைந்தது.

## 12. கண்ணகி வரந்தரல்

பின்பு, அங்கிருந்த தேவந்தியானவள் தெய்வம் ஏறப்பெற்றவளாய், கூந்தல் கட்டவிழவும் செவ்வாய் துடிக்கவும், மெய்யில் வியர்வை அரும்பவும் அரற்றிக் கொண்டு ஆடினுள். அவள் ஆட்டத்தைக் கண்டு அருகிலிருந்தோர் நடுங்கினர். அச்சமயம் தேவந்தியின் மீதுற்ற தெய்வம், செங்குட்டுவனுடனிருந்த மாடலனைப் பார்த்து, "யான் புகார் நகரில் உள்ள பாசண்டச் சாத்தனுவேன். இத் தேவந்தி மீது இப்பொழுது வந்துள்ளேன். இங்குக் கூடியிருக்கின்ற பெண்களுள், அரட்டன் செட்டியின் இரண்டு பெண்களும், அருச்சகனின் மகளும் இருக்கிருர்கள். அவர்களின் மீது உன் கைப்பாத்திரத்திலுள்ள நீரைத் தெளிக்க. நீ தேவி கோயிலில் இருந்தபோது இப்பாத்திரத்தை வைத்திரு எனக் கொடுத்துப் போன மறையவன் நான்தான்; அப்பாத்திரத்திலுள்ள நீரைத் தெளித்தால் அம்மூவரும் முன்னைப் பிறப்பின் மன நிலையை அடைவர்" எனக் கூறிற்று.

அதனை அவனுடனிருந்து கேட்ட அரசன் ஆச்சரியமடைந்து மாடலனை நோக்கினுன். மாடலன் மன்னனுக்குத் தேவந்தியின் பழைய வரலாறு அனைத்தையுங் கூறி, சாத்தன் கூறிய பெண்களின் மீது, தன் கைப்பாத்திரத்திலுள்ள நீரைத் தெளித்தான். தெளித்

தவுடன், அப்பெண்கள் மூவரும், முன்னைப் பிறப்பின் மனநிலை யடைந்து, கண்ணகியையும், கோவலனையும் குறித்துத் துயருற்று வாய் விட்டலறலாயினர், அவருள் கண்ணகித் தாய், "யான் பெற்ற மகளே! என் துணைத் தோழீ! யான், உன் கணவனது தவறுபட்ட மாறுபட்ட ஒழுக்கத்தைக் கண்டு இகழ்ந்ததற்காக, என்னைப் பாராது, அயல் நாட்டிற்குச் சென்று காதலன் தன்னோடு கடுந்துயர் அடைந்தாய். உங்கள் பிரிவிற்கு வருந்தும் எளியாள் துயர் அகற்ற வாராயோ?" எனப்புலம்பி னாள். கோவலன் தாய், "என்னோடிருந்த குலக்கொடி யாகிய உனது மனைவியை, இடையிருள் யாமத்து அழைத்துக் கொண்டு போய் அழிந்ததைக் கேட்டு நெஞ்சம் அழிந்தேன். கட்டழகா! எளியாள் படும் துன்பத்தை அகற்ற வாராயோ" வெனப் புலம்பினாள். மாதரி, "நீராடுதற்கு வையைத் துறைக்குச் சென்றேன், அவ்விடத்தினின்றும் பின்பு வீடு அடைந்தேன். நடந்த செயலைக் கேட்டேன். கண்ணகியை மனையில் கண்டி லேன். எந்தாய்! இளையாய்!! எங்கொளித்தனையோ?" எனப் புலம்பினாள். இதனால், அங்குள்ளார்க்கு, கண் ணகி தாயும், கோவலன் தாயும் அரட்டன் செட்டியின் இரு புத்திரிகளாகப் பிறந்தனர் என்பதும், மாதரி, அருச்சகன் மகளாய்த் தோன்றினாள் என்பதும் வெளிப் படலாயின.

இப் புதுமையை யறிந்த செங்குட்டுவன் மாடலனை வியப்போடு நோக்கினான். மாடலன் மன்னனைப் பார்த்து, "வேந்தே! இப் பெண்கள் மூவரும் இன்னின் னார் என்பதனை அவர்களது வாய்ப் பிறப்பாலறிந்தாய் அல்லவா? இன்னும், இவர்கள் இவ்வாறு பிறந்தமைக்கு உரிய காரணத்தையும் கூறுகின்றேன்; கேள். கண்ணகி

தாயும், கோவலன் தாயும் கண்ணகி யிடத்து மிகுந்த அன்புடையவர்கள். என்றாலும், அவளோடு வானுலகு அடைதற்கு ஏற்ற தவத்தைச் செய்தார்களில்லை! அதனால் பத்தினித் தெய்வம் நீங்காதிருக்கும்படியான உன்நாட்டில், அரட்டன் செட்டிக்குப் புத்திரிகளாய்ப் பிறந்தனர். மாதரியோ, கண்ணகியிடத்து மிகுந்த அன்பும், கண்ணபிரானிடத்துப் பக்தியுமுடையவள். அதனால் பெருமாள் திருவடியைப் போற்றும் அருச்சகருக்குப் புத்திரியாகப் பிறந்தனள். இவற்றால்,

*" நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேரலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை."

எனப் பொய்மையில்லாத நல்லுரைகள் நன்கு விளங்குகின்றன அல்லவா? வேந்தே! சிவபெருமா னருளால் தோன்றி, இந்நாட்டைப் பரிபாலித்து வந்த மன்னவனாதலின், தவத்திலடையும் பயன்களையும், சிறந்தோர் வடிவமும் கையிலுள்ள பொருளைப்போல் கண்டு கொண்டாய். ஆகையினால், நீ என்றும் இனிது வாழ்வாயாக" எனக் கூறிமுடித்தான்.

மாடலன் கூறியவற்றை எல்லாம் கேட்டு மகிழ்வடைந்த செங்குட்டுவன், தேவந்தியை யழைத்து, கண்ணகி கோயிலில் பூ, புகை, முதலியவற்றால்

---

* நல்வினைகளைச் செய்தோர் பொன்னுலகடைதலும், அன்பு மிகுந்தவர் தாம் கருதிய இடத்தில் பிறத்தலும், புண்ணியத்தின் பயனாகிய இன்பம் உண்டாதலும், பாவத்தின் பயனாகிய துன்பம் உண்டாதலும், பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும் உயிர்களின் வாழ்க்கையாம்.

பூசனை புரிந்து வரும்படி அமைத்தான். பின்பு அக் கோயிலை மும்முறை வலம் வந்து நின்றான். அப் பொழுது சிறைச்சாலையிலிருந்து விடுதலை யடைந்த ஆரிய மன்னரும், மற்றும் அதிலிருந்து விடுதலை பெற்ற மன்னர்களும், குடகு தேசத்துக் கொங்கரும், மாளவ தேசத்து வேந்தரும், கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் கண்ணகியின் திருவடியில் வீழ்ந்து வணங்கி, "தாயே! சேர நாட்டில் இம்மன்னன் அமைத்த கோயிலில் நீ எழுந்தருளியது போலவே, எங்கள் நாட்டில், யாங்கள் அமைக்கும் கோயில்களிலும், வந்து எழுந்தருளுதல் வேண்டும்" என வேண்டினர். அப் பொழுது அங்கிருந்து "தந்தேன் வரம்" என ஒருகுரல் எழுந்தது. அதைக் கேட்டுச் செங்குட்டுவன் முதலான மன்னரனைவரும் சந்தோஷமடைந்தனர். பிறகு, செங் குட்டுவன், மன்னர்களும் மாடலனும் சூழ்ந்து வர, வேள்விச்சாலையை அடைந்தான்.

பிறகு, செங்குட்டுவனுடைய சகோதரர், இளங் கோவடிகள் கண்ணகி கோயிலை அடைந்தார். அங் குள்ள கண்ணகித் தெய்வம் தேவந்திமேற் பொருந்தி, "பெரும! நீ வஞ்சி மூதூரிடத்து, மணி மண்டபத்தில் ஒரு நாள் நினது தந்தையின் தாள் நிழலின்கண்ணே உன் தமயனுடன் இருந்தாய். அவ்வாறிருக்குஞ் சமயத் தில், சோதிட நூலில் சாமர்த்தியம் வாய்ந்த ஒருவன் வந்து, உன்னைப் பார்த்து, 'அரசாளுதற்கு உரிய குறிகள் இவன் முகத்திலிருக்கின்றன' என்று கூறினன். நீ அதனைக் கேட்கப் பொறாமல், அவனைப் பார்த்து, 'என் சகோதரன் செங்குட்டுவன் இருக்கும்பொழுது நீ இவ்வாறு முறை கெடக் கூறினய். உன்னுடைய அறிவு மிகவும் நன்றாக விருக்கிறது' என மிகவும்

கோபத்தோடு கூறி விட்டு, குணவாயில் கோட்டத்தில் அரசு துறந்திருக்கும் கருணை வள்ளல் அல்லவா நீ? செங்குட்டுவனது வருத்தம், நீங்குமாறு, மனத்தால் நினைப்பதற்கு அரிய தூரத்திலுள்ள அழிவில்லாத இன்ப அரச வாழ்வை ஆளுதற்கு உரியனாய் விளங்கும் சீரிய வேந்தன் அல்லவா?'' என்று முன் நடந்ததும், பின் நடப்பதுமாகிய அவரது செய்திகளைக் கூறிற்று.

இஃதிவ்வாறாகப் பாண்டிய நாட்டில் மழைவளங் குறைந்துபோயிற்று. வறுமையும் நோயும் அதிகரித்தன. மக்களும் சொல்லுதற்கரிய வருத்தத்தை யடைந்தனர். அதைத் தெரிந்த கொற்கையிலிருந்து அரசு புரிந்த வெற்றிவேல் செழியன் என்பவன் முன்கூறியவாறு கண்ணகித் தெய்வத்திற்கு ஆயிரம் தட்டார்களைப் பலியூட்டி, விழா நடத்தினான். அதுமுதல் பாண்டிய நாடு நீர்வளத்தாலும் நில வளத்தாலும் சிறந்து விளங்கிற்று. கொங்கு நாட்டு மன்னரும், இலங்கைக் கயவாகு வேந்தனும், சோழன், பெருங்கிள்ளியும் கண்ணகிக்குத் தங்கள் நாட்டில் கோயில் கட்டி விழாக் கொண்டாடினர். அவர்கள் நாடுகளிலும் மழை மிகுந்து பொழிவதாயிற்று. இளங்கோவடிகளும் கண்ணகியின் சரிதையைக் கூறும் சிலப்பதிகாரத்தை எழுதிச் சிறந்தார்.

THE MADURA TAMIL SANGAM

க. பழநிக்குமாரக் கவிராயர்

பிரசுரகர்த்தர்:

வி. சூ. சுவாமிநா[illegible]

மதுரை :: திருநெல்வே[illegible]

பதிப்புரிமை] [விலை ரூ. 0—12-